கோகுலம்


GOKULAM

பிப்ரவரி '93 ரூ. 3.00



கோகுலம்

1993 பிப்ரவரி மாத இதழ்
மலர் : 11 இதழ் : 1



அருமைச் சிறுவர் சிறுமியரே,

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துகள் அனுப்பிய அன்பு உள்ளங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இதன் வாயிலாகத் தெரிவிக்கிறேன்.

இந்த இதழ் உங்கள் கைகளில் தவழும் போது உங்கள் கோகுலத்தின் வயது பத்து என்பதையும், பதினோராவது ஆண்டில் உங்கள் அன்பு 'கோகுலம்' அடியெடுத்து வைக்கிறது என்பதையும் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் நினைவுபடுத்துகிறேன்.



கோகுலம் சிறுவர்க்கான பத்திரிகை என்றாலும் இதில் இடம்பெறும் எல்லாமே பெரியவர்களும் சுவை குன்றாது படித்துப் பயன்பெறத் தக்கவை என்பதை ஆசிரியர்களும், பெற்றோர்களும் அடிக்கடி எழுதும் கடிதங்கள் தெரிவிக்கின்றன. தங்கள் படைப்புகள் இதில் வர வேண்டும் என்று பண்பட்ட எழுத்தாளர்கள் பலரும் கதை, பாடல்களை அனுப்பி வருகிறார்கள். எதைப் போடுவது எதை விடுவது என்று திகைக்கும் நிலை கூட சில நேரங்களில் ஏற்படுகிறது. இதே போல் வாசகர்களும் தங்கள் பெயர் கோகுலத்தின் எங்கேயாவது ஒரு மூலையிலாவது; ஒருமுறையாவது இடம் பெற வேண்டும் என்று துடிக்கிறார்கள். இதெல்லாம் கோகுலத்தின் மேல் அவர்களுக்கு இருக்கும் அன்பையும், மதிப்பையும்தான் காட்டுகின்றன.



இயன்றவரை வாசகக் குழந்தைகளையே அதிக அளவுக்குப் பங்குபெற வைக்க வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கமும். பிருந்தாவனக் கவியரங்கத்தையும், எங்கள் ஊரில் நடந்தது, சார் தபால் பகுதிகளிலும் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை நீங்கள் கவனித்திருப்பீர்களே. இது உங்கள் கோகுலம். உங்களை அதிக அளவில் பங்குகொள்ள வைப்பதுதான் எங்கள் நோக்கமும். அதனால் நீங்கள் அதிகமாகப் பங்குகொள்ளும் அளவுக்கு இன்னும் என்னென்ன புதுப் பகுதிகளைச் சேர்க்கலாம் என்பதை நீங்களே யோசித்து எழுதுங்கள். அதோடு போட்டிகளைப் பற்றிய உங்கள் எண்ணங்களையும், எதிர்பார்ப்புகளையும் எழுதுங்கள்.

கோகுலம் பத்து வயது நிறைந்த பெருமிதத்துடன் இன்று பவனி வருகிறது என்றால், இந்தப் பெருமைக்கு முற்றிலும் காரணமானவர்கள் இதன் எண்ணற்ற வாசகர்களே. அவர்களுக்கெல்லாம் இந்த நல்ல நாளில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களுடைய ஆதரவு தொடர்ந்து கோகுலத்திற்கு இருக்க வேண்டும். நீங்கள் கோகுலம் வாங்குவதுடன் உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வாங்கத் தூண்டுங்கள்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)




உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.

பிப்ரவரி 1993
இந்த இதழில்...

★ ஒருநாள் அரசன்! - பக்கம் 45






★ வாகனங்களில் புதுமை! பக்கம் 26



★ கம்ப்யூட்டர்களைக் கலாய்க்க வைத்தவர்கள்! - பக்கம் 30



★ அளப்பு மன்னன் அய்யாசாமி! - பக்கம் 7

★ நட்சத்திர மீனுக்கு இழந்த கை முளைக்குமா? - பக்கம் 91



பாராசூட் தெரியுமா?




“விமானப் பயணத்தின் போது நெருக்கடி நேரங்களில் ‘பைலட்’டின் உயிரைக் காப்பாற்ற, போர்க் காலங்களில் எதிரியின் இருப்பிடத்தில் நைஸாக இறங்க, வெள்ளம் காரணமாக தரைவழிகள் எல்லாம் அடைபட்டு வாகனங்கள் செல்ல முடியாத சமயத்தில் பட்டினியால் தவிக்கும் மக்களுக்கு உணவுப் பார்சல்களை பத்திரமாக இறக்க, என்று பல்வேறு வகைகளில் ‘பாராசூட்’ உதவி வருகிறது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி லியர்னாடோ டாவின்ஸிதான் சுமார் 500 வருடங்களுக்கு முன் பாராசூட்டை முதன் முதலில் வடிவமைத்தார். இது பல விதமான மாற்றங்களுக்குப் பின்னர் 1783 - ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சவாஸ்தின் எனும் மருத்துவரால் உருப் பெற்றது. இவர் மூங்கில் கூட்டின் மீது துணியைப் போர்த்தி ஒரு பாராசூட்டைத் தயாரித்தார். அதைப் பிடித்துக் கொண்டு பல மாடிக் கட்டடத்தின் மீது ஏறிக் கீழே குதித்து பத்திரமாக இறங்கி மக்களை வியப்பில் ஆழ்த்தினார்.

இந் நிகழ்ச்சிக்குப் பிறகு 1797 - ல் ஆன்ரு என்பவர் பறக்கும் பலூனில் பாராசூட்டை வைத்துக் கொண்டு உயரே செல்ல ஆரம்பித்தார்.

“ஆன்ரு” கீழே விழுந்து கைகால்களை உடைத் துக் கொள்ளப் போகிறார் என படபடக்கும் இதயத்துடன் காத்து நின்றிருந்த பலர் அதிர்ச்சியில் மயக்கமடைந்து சாய்ந்தார்கள். ஆனால் ‘ஹாயாக’ பத்திரமாக தரையை அடைந்தார் ஆன்ரு! பலூனில் இருந்த நபர் அதை பத்திரமாகக் கீழிறக்கிக் கொண்டார்.

1837 - ம் வருடம் ஜூலை 24 - ம் தேதி ராபர்ட் என்பவர் மயிர்க் கூச்செறியும் வித்தியாசமான சாதனை ஒன்றைச் செய்ய விரும்பினார். அதன்படி பறக்கும் பலூனின் கீழாக பாராசூட்டைக் கட்டிக் கொண்டு, தானே பலூன் கூடையில் ஏறி உயரே செல்ல ஆரம்பித்தார். கிட்டத்தட்ட 5000 அடிகளுக்கு மேலாக உயரத்தில் சென்றதும் பலூனிலிருந்து இறங்கி மெல்ல மெல்ல பாராசூட்டிற்கு வந்தடைந்து பின்னர் தன்னை பலூனிலிருந்து விடுவித்துக் கொண்டார்! துரதிஷ்டவசமாக அவரது





ரூட்டின் உதவியால் உயிர் தப்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்சமயம் பாராசூட்கள் விமானங் களின் வேகத்தைக் குறைக்கும் 'பிரேக்கு களாக' நவின மயமாக தயாரிக்கப்பட்டு வருகின்றன. அளவுக்கு அதிகமான வேகத்தில் விமானம் வருகையில் அது இறங்க வேண்டிய இடம் நெருங்கியதும் அதன் வால்பகுதியில் ஒரு பாராசூட் விரிந்து காற்றைத் தேக்கி விமானத்தை இழுத்து அதன் வேகத்தைக் குறைத்து இறங்கச் செய்கிறது. விண்வெளி வீரர் கள் ராக்கெட்டிலிருந்து பூமிக்குத் திரும்ப 'கேப்ஸ்யூல்'களை உபயோகிக் கிறார்கள். இந்த காப்ஸ்யூல்கள் எவ்வித

பிடிக் கட்டை உடைய ஆகாயத்தி லிருந்து தலை குப்புறக் கீழே 'தொப்' என விழுந்து கூடி நின்ற லண்டன் நகர மக்களை அதிர்ச்சிக்குள் ளாக்கி அந்த இடத்திலேயே மாண்டு போனார்.


இதன் பிறகு 75 ஆண்டு காலத்தில் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்ட மடக் கும் வசதி கொண்ட, தேவையான போது விரித்துக் கொள்ளத் தக்க எடை குறைவான நைலான் பாராசூட் தயாரிக் கப்பட்டது. 1912 - ஆம் ஆண்டில் தான் விமானத்தில் இருந்து கூட பாராசூட் மூலமாகக் குதிக்கலாம் எனும் துணிவு ஏற்பட்டது. 1914 - ஆம் ஆண்டில் முதல் உலகப் போரின் போது இது நன்கு பயன்பட்டது.

1939 லிருந்து 1945 வரை நடைபெற்ற இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஆயிரக்கணக்கான விமானிகள் பாரா



பாதிப்பும் இன்றி கீழிறங்க உதவியாக இருப்பவை பாராசூட்களே!

- ஏ.ஜே.ஜே.





''ஏன் இன்னைக்குப்பூரா சிங்க ராஜாவோட கர்ஜனையே கேட்கலே?''


''சாப்பிட்ட 'சூயிங்கம்' வாயில ஒட்டிகிட்டு எடுக்க வரலையாம்.''


- கே. சோமசேகர்


தனித்திருப்பது எது? - போட்டி
















தனித்திருப்பது எது?
- போட்டி

இங்கே ஏழு உயிரினங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று மட்டும் மற்றவைகளுடன் சேராதது. அந்த சேராதது என்ன என்பதைக் கண்டுபிடித்து, அதன் எண்ணையும், தனித்திருக்கும் காரணத்தையும் கண்டுபிடித்து எழுதி, கூப்பனையும் பூர்த்தி செய்து ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்புங்கள். பரிசு இல்லாமலா போட்டி? பரிசு கண்டிப்பாக உண்டு. ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

பெயர் :....................................

வயது :.. ....

முகவரி : ....

....


....

....

பின்கோடு :.................................

முடிவு தேதி 15.2.1993

அளப்பு மன்னன் அய்யாசாமி




அளப்பு மன்னன் அய்யாசாமியை உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிட்டால் தெரிந்து கொள்ளுங்கள். அய்யாசாமி அந்தக் கிராமத்தில் சற்று வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர். தினமும் மாலையில் மரத்தடியில் அமர்ந்து அங்கு கூடி இருப்பவர்களிடம் சரமாரியாக அளப்பார். உதாரணமாக ஒருமுறை விமானத்தில் அண்டார்க்டிகா மேலே செல்லும் பொழுது தவறி விழுந்தாராம்! அங்கு முழுவதும் பனிக்கட்டி உள்ளதால் விழுந்ததும் காயம் எதுவும் ஏற்படவில்லையாம். பின் அங்கிருந்து செல்ல என்ன வழி எனச் சிந்தித்தாராம். தன்னிடம் உள்ள தீப்பெட்டியில் இருந்து தீக்குச்சியை எடுத்துப் பற்றவைத்து பனியில் காட்ட, பனி உருகி நீராகமாறி ஓடியதாம். அதே போல் செய்து கொண்டேவர, இறுதியில் ஒரு கடலை அடைந்து கப்பலைப் பிடித்து ஊருக்கு வந்தாராம். இவர் கூறுவது எல்லாமே சுவையாக இருக்குமாதலால் எல்லோரும் வாய் பிளந்து கேட்பார்கள்.

ஒருநாள் அய்யாசாமி வீட்டில் இருக்கும் பொழுது புதிய மனிதர்கள் இருவர் வந்தனர். இருவருமே பேண்ட், சர்ட் அணிந்து தோளில் ஒரு பையுடன் இருந்தனர். ''என்ன வேண்டும்? யார் நீங்கள்?'' என அய்யாசாமி கேட்டார். ''நாங்கள் தொலைக் காட்சி நிலையத்தில் இருந்து வருகிறோம். நீங்கள் பல நாடுகள் சுற்று பயணம் சென்று வந்து இந்த ஊர் மக்களுக்குக் கூறினீர்களாமே?'' எனக் கூறி ஒருவர் நிறுத்த - அடுத்தவன் ''எனவே உங்களைப் பேட்டி எடுக்க வந்துள்ளோம்'' என முடித்தார்.

அய்யாசாமிக்கு உடம்பு கொள்ளாத மகிழ்ச்சி. ''உட்காருங்கள். நன்றாக உட்காருங்கள்! மீனாட்சி, உடனே பலகாரம் செய்'' என உட்கார வைத்தார். மகிழ்ச்சியிப் பரபரப்பில் காப்பி கொடுத்தார். பிறகு ''பேட்டி எடுங்க சார்'' எனக் கூறினார். ''நீங்க சுற்றுலா சென்ற இடத்தில் மறக்க முடியாத நிகழ்ச்சி என்ன?'' என ஒருவன் கேட்க மற்றொருவன் அய்யாசாமியின் முகத்தல் டார்ச் அடித்தான். அய்யாசாமி கண்கூச ''ஐயா, எதுக்கு முகத்தில் டார்ச் அடிக்கறீங்க?'' எனக் கேட்டார். ''நீங்க பேசுவது இதில் பதி





வாகும், படமும் எடுக்கும்'' என்றார் முதலாமவர். ''என்னது! அது பெரிசா இருக்குமே. மைக் வேற பிடிப்பாங் களே?'' என்றார் அய்யாசாமி குழப்பத் துடன்.

''அது வேற; பழைய மாதிரி, இது புது முறை. இது ஜப்பானில் கண்டு பிடித்தது. இதன் பெயர் ''ஸ்பியாப் பென்'' இது படம், பேச்சு எல்லாம் எடுக்கும்'' என்றார் மற்றொருவர். ''அப்படியா! சரி'' என்றார் அய்யா சாமி. ''சரி நீங்க சுற்றுலா சென்ற போது மறக்க முடியாத நிகழ்ச்சி எது?'' எனக் கேட்டார் முதலாமவர்.

''ஆஹா! எத்தனையோ நிகழ்ச் சிகள் உள்ளன. உதாரணமாக ஒருமுறை அமெரிக்காவிற்குப் பக்கத்திலுள்ள லண்டனுக்குச் சென்றேன். இருட்டு வேளை. நாங்கள் வேனில் சென்று கொண்டிருக்கும் பொழுது திடீரென எங்கள் வேன் மறிக்கப்பட்டு அதில் கொள்ளையர்கள் துப்பாக்கியுடன் ஏறினர். துப்பாக்கி முனையில் ஒவ் வொருவரிடமும் பணத்தைப் பெற் றனர். என் அருகே வரும் பொழுது நான் ''ஹச்'' எனத் தும்ம அவர்கள் அதிர்ந்து துப்பாக்கியைக் கீழே போட்டு விட, நான் அதை எடுத்துச் சுட்டு விட்டேன்'' எனக் கூறினார்.

''நல்லது! இதை அடுத்தவாரம் தொலைக்காட்சியில் ஒளிபரப்புவோம் நேரமாகிவிட்டது. இன்று இரவு நாங் கள் இங்கு தங்கி நாளை போகலாமா?'' என ஒருவர் கேட்டார். ''தாராளமாக'' என்ற அய்யாசாமி அவர்களுக்கு இரவும் விருந்து வைத்து உறங்க இடம் கொடுத் தார்.

நள்ளிரவு, புதியவர்கள் இருவரும் எழுந்தனர். தங்களிடம் இருந்த கைகுட் டையை அய்யாசாமிக்கும், அவர் மனைவிக்கும் மூக்கின் அருகே காண்பிக்க அவர்கள் மயங்கினர். மறுநாள் காலை எட்டு மணி.

''என்னங்க என்னங்க'' என்ற மனைவியின் பதட்டமான குரல் கேட்டு திடுக்கிட்டு விழித்தார் அய்யாசாமி. ''என்ன! என்ன நடந்தது?'' எனக் கேட்டார். ''பீரோ திறந்து இருக்கு. நகை, பணம் எதுவும் இல்லே! இந்தச் சீட்டுதான் இருந்தது'' எனக் கூறி சீட்டைக் கொடுக்க, அய்யாசாமி அதை வாங்கிப் பார்த்தார்.

''அளப்பு மன்னரே. எங்களுக்கு விருந்து தந்ததற்கு நன்றி. சென்று வருகிறோம்'' என எழுதி இருந்தது. அய்யாசாமி படித்துவிட்டு ''ஐயோ, நகையெல்லாம் போச்சே'' எனக் கதறி அழுதார். ''உங்களுக்கு நல்லா வேணும். யாரு வந்தாலும் உடனே உங்க பெருமைகளைக் கூறித் தங்க வைக்கிறீர்கள். இது தெரிந்து அவர்கள் திட்டமிட்டு வந்து இருக்காங்க'' என் றாள் மனைவி.

''ஒன்றும் கவலைப்படாதீர்கள். உங்கள் நகை, பணம் எங்கும் போக வில்லை'' என்ற குரல் கேட்டு எல் லோரும் திரும்ப, இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார். அருகிலேயே அந்த இரு திருடர்களும் ஒரு சிறுவனும் நின்றிருந் தனர். ''இந்தப் பையனால்தான் உங்கள் நகைகளை மீட்க முடிந்தது'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அப்படியா! எப்படி?'' என அய்யா சாமி கேட்க, அந்தச் சிறுவன் கூறினான். ''இவங்க உங்க வீட்டுக்கு வழி கேட்டாங்க. நான் சொல்லிட்டு போலீஸ் ஸ்டேஷன் பக்கமா போனேன். அங்கே திருடர்கள் போட்டோ ஒட்டி இருந்தது. அதில் இவர்கள் இருவர் போட்டோவும் இருந்தது. நான் அதிர்ச்சியடைந்து இங்கு வந்தேன். அப்பொழுது நீங்கள் பேசுவதைக் கேட்டேன். உடனே புரிந்து கொண்டேன். இவர்கள் ஏதோ திட்டம் போட்டு வந்து இருக்கிறார்கள் என நினைத்து மீண்டும் போலீஸ் ஸ்டேஷன் சென்றேன். அதற்குள் இருட்டிவிட, இன்ஸ்பெக்டரிடம் விஷயத்தைக் கூறினேன். உடனே புறப்பட்டு இங்கு வந்து மறைந்து இருந்தோம். இரவு இவர்கள் மூட்டையுடன் வெளியேறும் போது பிடித்து நன்றாக உதைத்தோம்'' என்றான் அச்சிறுவன்.


''அப்படியா! ரொம்ப நன்றி தம்பி'' என்றாள் அய்யாசாமியின் மனைவி.

இன்ஸ்பெக்டர், ''சார் முன்னே பின்னே தெரியாதவர்கள் யாராவது வந்தால் வீட்டுக்குள் விடாதீர்கள். நல்ல வேளை இவர்கள் உங்களுக்கு மயக்க மருந்து தந்தார்கள். கத்தியால் குத்தி இருந்தால் என்ன நடந் திருக்கும்?'' என்று கேட்டார்.

''என்னை மன்னிச்சிடுங்க. இனிமே நான் இது போல் நடக்க மாட் டேன்'' எனக் கூறி நிறுத்தியவர் ''இப்படித்தான் பாருங்க நான் சின்ன பிள்ளையா இருக்கும் போது, கடா மீசை பைரவன்னு ஒரு கொள்ளைக்காரன்'' என வழக்கப்படி அளக்க ஆரம்பித்தார் அய்யாசாமி.

''தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்'' எனக் கூறுவது சரியாகத் தான் இருக்கிறது. உங்களைத் திருத்தவே முடியாது'' என்று அலுத்துக் கொண்டாள் அய்யாசாமியின் மனைவி.

– கே. யுவராஜ்



உங்கள் நூலகம்

பாடி விளையாடு பாப்பா - அரிமதி தென்னகன் - பக். 88 - ரூ 13.50 - இலக்குமி நிலையம், 32, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

புதுவையில் இருந்து குழந்தைப் பாடல்களை எழுதி வரும் தென்னகன் யாப்பும், இலக்கிய நயமும், புதிய நோக்கும் கைவரப் பெற்றவர் என்பதை இந்தத் தொகுப்பில் உள்ள 24 பாடல்களும் தெளிவாக்குகின்றன. நிலவை எப்படி புதிய குழந்தையாக மாறி அழைக்கிறார் பாருங்கள் :

நிலா நிலா ஓடி வா!
நெருங்கி என்னை நாடிவா!
காற்றும் உண்டோ உன்னிடம்?
காணும் ஆவல் என்னிடம்!
மனிதர் வாழ முடியுமோ?
மண்ணின் தன்மை என்னவோ?
இனிய தண்ணீர் பொங்குமோ?
இவற்றை அறிய வேண்டுமே!
நேற்றைக் கதைகள் பொய்யென
நிமிர்ந்து நின்று சொல்லுவேன்!
ஏற்ற வண்டி ஏறி, நான்
இறங்கி உன்பால் வருவேனே!

குழந்தைகளுக்கான பாடல்கள் என்பதால் படங்களையும் சேர்த்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ''வரதட்சணையா எனக் கேட்டு, வளரும் புயலே சாய்ந்தாடு! ஆனால் எரியும் பெண்ணைத் தீய்ப்பவரை, எரிக்கும் தீ போல் சாய்ந்தாடு'' என்ற வரிகள் சிறுவர்களுக்குப் புரியுமா?

ஒரு ஈயின் ஆசை - நாரா. நாச்சியப்பன், பக். 64 ரூ. 8/- அன்னை நாகம்மை பதிப்பகம், 2/141 கந்தசாமி நகர், பாலவாக்கம், சென்னை - 600 041.

எவ்வளவோ எழுத்தாளர்கள் உருவாகக் காரணமாக இருந்து வரும் குழந்தை இலக்கிய முன்னோடி நாரா. நாச்சியப்பனின் அருமையான சிறுகதைத் தொகுப்பு இது. அம்மா சொல் கேட்காத இன்பவல்லியை, அவளுடைய அன்புக் கிளியே திருத்தும் 'பச்சைக் கிளி பவழம்' கதை நல்ல புதுமையான கதை. மற்ற கதைகளும் ஆசிரியரின் பண்பட்ட படைப்பாற்றலைக் காட்டுகிறது.

சிறுவர்களுக்கான குட்டிக் கதைகள் - மதிஒளி - பக். 56 - ரூ 7/- இலக்குமி நிலையம், 32, அம்மையப்பன் தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014.

குழந்தைகளுக்கு நன்கு அறிமுகமான கவிஞர் மதிஒளியின் ஆறு சிறுகதைகள் இதை அழகு செய்கின்றன. கர்ண பரம்பரைக் கதைகளின் புது வடிவம். கதைகள் எழுதப்பட்டுள்ள நடை, எதிரில் இருந்து கதை கூறுவது போல் அமைந்துள்ளது பெரிய சிறப்பு.

சிந்திக்க வைக்கும் வேடிக்கைக் கதைகள் - அசோக்குமார் - பக். 128 - ரூ 16/- விசாலாட்சி நிலையம், 32, அம்மையப்பன் தெரு, சென்னை - 600 014.

சிந்திக்க வைக்கக்கூடிய 17 சிறுகதைகள் இதில் உள்ளன. புராணம், நீதி, கர்ண பரம்பரைக் கதைகள் என்று பல கலவை. புதிய கற்பனைக் கதைகளும் உள்ளன. நகங்கி உருக்கு லையும் வாழைப் பழத்தோல் தன்னைத் தானே நொந்து கொள்வது நல்ல கற்பனை. குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும் நன்கு கவைப்பார்கள்.

100 நன்னெறிக் கதைகள், பேராசிரியர் சோதி, பக் 128 - ரூ 20/- நன்மொழிப் பதிப்பகம், 75, அரவிந்தர் வீதி, புதுச்சேரி - 606 001.

பேராசிரியர் சோதியின் கதைகள் என்றாலே சிறுவர்களுக்குக் கொண்டாட்டம் தான். இதில் அவர் திரட்டிய அருமையான நூறு சிறுகதைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒரு நீதியை; அறிவுரையை வழங்குகிறது. 'பொன்னாசை கொடியது' அனைவரும் படிக்க வேண்டியது. நன்கு பயன்படும் தொகுதி.

சிறுவர்களுக்கான நூல்களும், பொது அறிவு நூல்களும் மட்டுமே இந்தப் பகுதியில் மதிப்புரை செய்யப்படும். கட்டணம் கிடையாது. இரண்டு பிரதிகளை ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பரிசு கிடைக்காதபோது என்ன எண்ணினாய்?



எந்த ஒரு போட்டி என்றாலும் சிறுவர் சிறுமியர் ஆர்வத்துடன் கலந்து கொள்கிறார்கள். ஆனால் பரிசு என்பது ஒரு சிலருக்கே கிடைக்கிறது. அதற்காக பரிசு பெற்றவர்கள்தான் திறமைசாலிகள் என்றோ, பரிசு பெறாதவர்கள் அனைவரும் திறமை இல்லாதவர்கள் என்றோ கூறிவிட முடியாது. எல்லோருக்கும் பரிசு பெற்ற அனுபவங்களைவிட, பரிசு பெறாத அனுபவங்களே அதிகமாக இருக்கும். பரிசு கிடைக்காததை அவர்கள் எப்படி எடுத்துக் கொண்டார்கள் என்பதே அவர்களுடைய மன உறுதியைக் காட்டும் கண்ணாடி. இப்படிப் பரிசு கிடைக்காத தங்கள் அனுபவங்களை கிளுவிக்குளம் அரசினர் உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

கு. மகேஸ்வரி : கட்டுரைப் போட்டியில் நான் கலந்துக்கிட்டேன். நல்லா தான் பண்ணினேன்னு நான் நினைச்சேன். ஆனா, பரிசு எனக்குக் கிடைக்கலே! போட்டில வெற்றி பெற்றவங்க மேல பொறாமப்பட்டு என்னோட நேரத்தையும் மனசையும் பாழடிச்சிக் கிடலே. பொறாமைப்படுறதுனால ஏற்படுற துன்பங்களைப் பத்தி 'அழுக்காறாமை' அதிகாரத்துல திருவள்ளுவர் சொல்லியிருக்கிறதெல்லாம் எனக்கு மனப்பாடம். இதுக்கெல்லாம் போயி மனசை விட்டுட்டா அப்புறம் எப்படி? இனிமே நடக்கிறத தானே பாக்கணும். அதனால பொறாமைப்படாமே வெற்றி பெற்றவங்களைச் சந்திச்சி அவங்க என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்றினாங்கனு வெக்கப்படாம கேட்டுத் தெரிஞ்சிக்கிடுவேன்.

பிறகு நானும் அவங்க வழிக்கும் மேலா சிந்திச்சி வெற்றி பெறதுக்கான வழிமுறைகளைத் தயாரிப்பேன். அதும் படி நடந்து அடுத்த முறை கண்டிப்பா வெற்றி பெறுவேன்.

த. சத்தியமூர்த்தி : பள்ளியில சாப்பிடற போட்டியும் பாட்டுப் போட்டியும் அறிவிச்சாங்க. சாப்பிடுற போட்டி தானே, ஒருபுடி புடிச்சா பரிசு தனக்குத் தான்னு லேசா நினைச்சான் என் பிரண்டு. பத்து இட்லி, இருபது வடையை சும்மா தின்னுட்டு எளிதாப் பரிசைத் தட்டிட்டுப் போயிடலாம்னு தப்புக் கணக்குப் போட்டான். ஆனா நா சொன்னேன். 'டே பரிசு வாங்கறது அத்

தனை எளிது இல்லேடா. போட்டியில கலந்துக்கவே ஒரு கட்டணம் உண்டுடா. குறைஞ்சது பதினைஞ்சு இட்லி, முப்பது வடைகளாவது சாப்பிட்டாத்தான் போட்டில ஜெயிக்காட்டியும் நீ கட்டின பணம் திரும்பக் கிடைக்கும். அதுக்கப்புறம்தான், பரிசு மற்றது எல்லாம்னேன். 'அப்படியான்னான் அவன். சாப்பிடுற போட்டியெல்லாம் வேண்டாம் நம்மால முடியாதுன்னு நான், பாட்டுப் போட்டியிலே சேர்ந்தேன். ஓரளவுக்கு நான் நல்லாவே பாடுவேன். அதனால நம்பிக்கையோட போட்டியில கலந்துகிட்டேன். ஒரு ஆறுதல் பரிசு கூட எனக்குக் கிடைக்கலே. நான் ஒரேடியா மனசு ஒடிஞ்சு போயிட்டேன்.

பரிசு பெற்றவன் பாடினதுகூட அப்படியொன்றும் ரொம்பப் பிரமாதம்னு சொல்ல முடியாது. ஆனா, அவங்க எதிர் பார்க்கிற ஏதோ ஒரு அம்சம் அவன் பாடினதுல இருந்திருக்கு. அதுதான் அவனுக்குப் பரிசை வாங்கிக் கொடுத்திருக்குன்னு நான் புரிஞ்சுக்கிட்டேன். அது குரல் இனிமை, தாளம், பாடல்னு எதுவா வேணுமானாலும் இருக்கலாம். அதை அறிந்து பாடுவதுதான் பரிசுக்கு வழி வகுக்கும்னு புரிஞ்சுக்கிட்டேன். பாரதி நூற்றாண்டு விழா பாட்டுபோட்டியில தியாகராஜர் கீர்த்தனையைப் பாடி



* இதுக்கெல்லாம் மனசை விட்டுட்டா எப்படி?
- கு. மகேஸ்வரி



* எதிர்பார்ப்பு என்னங்கறதை தெரிஞ்சு பாடறதுதான் பரிசைத் தரும்.
- த. சத்திய மூர்த்தி.

னால் பரிசு தருவாங்களா? தப்பை எங்கே பண்ணிருக்கோம்னு நாமே நன்கு தெரிஞ்சுக்கிட்டு திருத்திக்கனும். அது தான் பரிசு கிடைக்க வழி.

ஆ. சத்தியா : முதன் முதலா கட்டுரைப் போட்டில கலந்துக் கிட்டேன். ரொம்ப ஜோராத்தான் எழுதியிருக்கிறோம், நமக்குத்தான் பரிசுன்னு ரொம்ப நம்பிக்கையோட இருந்தேன். ஆனா, ஆறுதல் பரிசு கூடக் கிடைக்கலே. ஏன்னே தெரியலே. நான் நல்லாத்தான் எழுதினேன். பரிசு கிடைக்கலேன்னு தெரிஞ்சதும் எனக்கு ரொம்ப வருத்தமா இருந்தது. பரிசு கிடைச்சவன் பரிசு பெறும்படி அப்படி என்னதான் நான் எழுதாததை எழுதியிருப்பான்னு யோசிச்சு, யோசிச்சுப் பார்த்தேன்.

எனக்கே நிறைய பாயிண்ட்ஸ் தோணித்து. நான் யாருக்கும் எந்தக் கெடுதலும் செஞ்சதில்லே. பள்ளியிலும் சரி, வீட்டிலும் சரி, நல்லவனாகவே இருந்து வந்திருக்கேன். எனக்கு இப்படித் தோல்வி ஏற்படுவானேன்? நல்லவங்களுக்கு நல்லது வரும்னு நம்புறவன் நான். அப்படி இருக்கும்போது எனக்கு இந்தத் தோல்வி ஏற்படுவானேன்?

போட்டியில வெற்றிபெற திறமை தான் தகுதி. அந்தத் திறமை நமக்கு இருக்கான்னு யோசிச்சுப் பார்த்தேன். பரிசு பெற்ற சிறுமி, அதற்கு என்று உழைச்ச அளவுக்கு நான் உழைக்க தயார் பண்ணினேனான்னு என்னை நானே கேட்டுப் பார்த்தேன். இல்லைன்னுதான் பதில் வந்தது.

க. தென்னவன் : எங்க பள்ளியில கதைப் போட்டி வைச்சாங்க. கதை எழுதறதுன்னா எனக்கு பிடிக்கும். அதுனால நான் ரொம்ப உற்சாகமா, நம்பிக்கையோட கலந்துக்கிட்டேன். நண்பர்கள் கேட்டப்போ, ''எனக்குத்தான் பரிசு''ன்னு ரொம்ப நம்பிக்கையோட சொன்னேன். அந்த அளவுக்கு அருமையான ஒரு கதையை எழுதியிருந்தேன். ஆனா, முடிவு வெளியாகி, பரிசு எனக்குக் கிடைக்கலேன்னதும் ஒரேயடியாக் கோபம் வந்தது. ஆனா, பரிசுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதையைப் படிச்

சதும் என்னோட கதைக்கு ஏன் பரிசு கிடைக்கலேங்கறதை நானே தெரிஞ்சுக் கிட்டேன். நானே நடுவரா, இருந்தாக் கூட அந்தக் கதைக்குத்தான் பரிசு தந் திருப்பேன்.

அடுத்த தடவை கதைப் போட்டி



* அடுத்த போட்டி யில முதல் பரிசு எனக்குத்தான்! - ஆ. சத்யா



* எனக்குப் பரிசு கிடைக் காதது நியாயம் தான்! - க. தென் னவன்

அறிவிப்பு வந்ததும், சிறுவர், சிறுமி களுக்கு என்னென்ன பிரச்னை ஏற் படுமோ அதை கதைக் களமா வைச்சு ஒரு புதுமையான கதையை எழுத நான் இப்பவே முடிவு செஞ்சு இருக்கேன்.


எனக்குப் பரிசு கிடைக்காதது நியாய மேன்னு நான் சமாதானம் பண்ணிக் கிட்டேன். அதோட சிவகாசில, பட் டாசுத் தொழிற்சாலைல வேலை செஞ்சு செத்துப் போன எனது நண்பனை கதையா வைச்சு எழுத மறந்ததால் எனக்கு கிடைச்ச தண்டனைதான் இதுன்னு கூட நினைக்கிறேன். அவ னுடைய அனுபவங்களை; கஷ்டங் களை நான் மறந்து போனது எத்தனை பெரிய தப்பு!

து. அமுதா ராணி : போட்டின்னா எனக்கு ஜாங்கிரி சாப்பிடற மாதிரி! எழுத்துப் போட்டி, இசைப் போட்டி, ஓட்டப் போட்டின்னு எல்லாத்திலேயும் கலந்துக்கிடுவேன். எதையும் விட்டு வைக்க மாட்டேன். ஆனால், போட்டில நான் கவிதை எழுதினா அது கட்டுரை மாதிரி இருக்கேன்னு தள்விடறாங் களே! பாட்டுப் போட்டின்னா நான் பாடினா ஓட்டம் பிடிக்கிறாங்களே! இதுக்கு என்ன செய்ய? சரி மத்தவங்க நன்மையை உத்தேசிச்சு இந்த ரெண்டை யும் விட்டு டலாம்னு முடிவு செஞ்சேன். ஓட்டப் பந்தயத்துல கலந்துக் கிட்டேன். பரிசு கிடைச்சுதான்னு கேட்கறீங்களா? முன்னால் ஓடின எல்லாரையும் விரட் டிக்கிட்டு கடைசியிலதான் போய்ச் சேர்ந்தேன்! பரிசு எப்படித் தருவாங்க?

இருந்தாலும் நான் மனசு தளரல. கஜினி முகம்மது ஞாபகம் வந்தது. ராபர்ட் புரூஸின் விடா முயற்சி நினை வுக்கு வந்தது. நாங்க பட்ட பாட்டை விடவா நீபடறே? சோர்ந்து போகாதே அமுதான்னு அவங்க சொல்லி என்னை உற்சாகப்படுத்தற மாதிரி நினைச்சிக் கிட்டேன். Practice makes perfect னு சொல்றாங்களே! பல முறை ஓடினா practice ஆயிடும். என்றைக்காவது ஒரு



* என்றைக்காவது ஒருநாள் பரிசு வாங் காமலா போயிடு வேன்? - து. அமுதா ராணி



* பரிசுன்னு ஒரு சீட்டில் தந்தால் கூட அது தானே பெருமை? - நா. பாலகிருஷ்ணன்



இரும்புக்குதிரை!

இரண்டுச் சக்கரம் சுற்றுமே
　　ஏறிக் கொண்டால் பறக்குமே!
குரங்குப் பெடலும் போடலாம்!
　　குதித்து நாமும் போகலாம்!

பின்னால் நண்பர் அமரலாம்!
　　பேசிக் கொண்டே ஓட்டலாம்!
முன்னால் பார்த்து ஓட்டனும்!
　　முட்டிக் கொண்டால் நேகனும்!

ஏழை மக்கள் சீதனம்!
　　எளிதாய்ப் போகும் வாகனம்!
தாழை போன்ற சாலையில்
　　தடைகள் இன்றி போகுமே!

இன்னும் என்ன சொல்லவோ
　　இரும்புக்குதிரை அல்லவோ!
மின்னல் போலப் போகுமே
　　மிதிக்கும் வண்டி ஆகுமே!

- வீ.கே. கஸ்தூரிநாதன்

நாள் நான் பரிசு வாங்காமலா போயிடுவேன்?

நா. பாலகிருஷ்ணன் : இராஜபாளையம் ஏஞ்சல்ஸ் மெட்ரிக் பள்ளியில படிக்கிறேன். பள்ளியில மாறுவேடப் போட்டி வைச்சாங்க. ரொம்ப நம்பிக்கையோட நான் கலந்து கிட்டேன். ஆனா பரிசு இன்னொருத்தனுக்கு போயிருச்சு. ஒரு கோல்டன் மூடிப் பேனாவ அவன் சந்தோஷமா பரிசு வாங்கிக்கிட்டு போனதைப் பார்த்து எனக்கு ரொம்ப ஏமாத்தமாவும், வேதனையாவும் இருந்தது.

''என்னுடைய ஏமாத்தத்தைப் பார்த்து அம்மா, 'டே இதவிட அருமையான பேனாவ அப்பா போன பிறந்த நாளின் போது உனக்கு வாங்கித் தந்தாரே - இதுக்காகவா வருத்தப்படறே'ன்னு கேட்டாங்க.

அக்காவும் 'இதப்போல ஆயிரம் பேனாவ தாத்தா வாங்கித்தறா . பேனாப் போகுது. பேசாம இருடா'ன்னு சொன்னா.

பாட்டி, 'ஆமாண்டா ராஜா, ஒன்றுக்குப் பத்து பேனா வாங்கித் தரச் சொல்றேன்னு என்னை அணைச்சிட்டாங்க!

தாத்தா ''நாளைக்கே பேனாக் கடைக்குப் போகலாம்னு'' சொன்னார். மாமாவோ. ''நாளைக்கு என்ன, இப்பவே வாங்கித் தரேன்''னு கிளம்பினார். நான் எதுவும் பதில் சொல்லலே. எல்லோராலும் உயர்ந்த பேனாவா வாங்கித் தர முடியும். ஆனா மேடை ஏறி மாறுவேடம் போட்டதற்குன்னு பரிசு கிடைச்சா அதுதான் சந்தோஷம் தரும். இல்லையா? அதுதானே பெருமை.

பரிசுன்னு சொல்லி ஒரு ஐம்பது பைசா ரீஃபில் கொடுத்தாங்கன்னா கூட அதுதானே பெருமை? இது ஏன் இவங்க யாருக்கும் தெரியலே! பரிசு கிடைக்காததுல எனக்கும் ஏமாத்தம்தான். ஆனா லும், போட்டில கலந்துக்கறவங்க எல்லாருக்குமே பரிசு கொடுக்க முடியுமா? இப்போ இல்லைன்னா அடுத்த வருஷம் பரிசு வாங்கறேன். அப்புறம் என்ன?

பேட்டி, படங்கள்:
அழ. கிருஷ்ணமூர்த்தி. (அழகி)



★ டிசம்பர் இதழில் 'அம்மாவை அறிவுமா ஆக்டோபஸ்' கதையில் நண்டுக்கு இரத்தம் இருப்பது போல் எழுதியிருக்கிறீர்கள். எங்கள் ஆசிரியை நண்டுக்கு இரத்தம் கிடையாது என்கிறார். எது உண்மை? - ஆவுடையார் கோவில் ஆர். ரதிதேவி, ஆர். ராஜாதத், அண்ணாமலைநகர் க. ரத்னம் மற்றும் பலர்.

('முதுகெலும்பற்றவை' (பட்டப்படிப்புக் குரியது) ஆசிரியர் என். இராமலிங்கம் அவர்கள் (தலைமைப் பேராசிரியர் : விலங்கியல் துறை, மாநிலக் கல்லூரி, சென்னை.) எழுதி தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் வெளியிட்ட நூலில் கணுக் காலிகள் பகுதியில் 260ஆம் பக்கத்தில் நண்டின் இரத்த ஓட்ட மண்டலம் விரிவாகத் தரப்பட்டுள்ளதைக் காண்கவும் - ஆசிரியர்.)

★ தும்பி சிறகை மடக்குமா?'வில், அறிவியல் உண்மை பகுதியில் 'தும்பி பூச்சி இனம் அல்ல' என்று முதலில் கூறி விட்டு, கடைசியில் 'பூச்சிகளில் மிக வேகமாகப் பறக்கக்கூடியது இதுவே' என்றிருக்கிறதே! இது முரண்பாடு இல்லையா? தும்பி பூச்சி இனம்தானே?

அரக்கோணம், பூபதி மற்றும் பலர்.

(தவறுதான். தும்பி பூச்சி இனமே.
- ஆசிரியர்.)

★ அரிய தபால்தலைகள் தோன்றிய விதம், இது வரை படித்தறியாத தகவல்கள்! - மதுக்கூர் ரமேஷ், மேலப்பாதி இராஜலட்சுமி நாராயணன், ஜோதி நகர் ப. கணேஷ், தருமபுரி எம். சோமசுந்தரம், கூடப்பாக்கம் பி. கல்யாணபாலு மற்றும் பலர்.

★ பிராணிகளின் இடப்பெயர்ச்சி அதிசயிக்க வைத்தது. - குடந்தை எல். கே. மூர்த்தி, நாகலாபுரம் கு. உமாசங்கர், மாயூரம் வ. பவானி மற்றும் பலர்.

★ 'ஹைடர் ஜுக்கு' கலையாக; புதுமையாக இருக்கிறது. - நாமக்கல் சந்திரன், காவேரிப்பட்டணம் சோமசேகர், சங்கராபுரம் ஆ. முருகன்.

★ 'அண்ணனா அவன்?' கண்களைக் கலங்க வைத்து விட்டது. ஒரு தவறை இன்னொரு தவறால் சரிசெய்ய முடியாது என்ற வரிகள் அறிவைத் தொட்டன! - பாபநாசம் குருமூர்த்தி, திருவொற்றியூர் கோகுலப்பிரித்தன், பூதலூர் ஜெயசீலன், தக்கோலம் எஸ். அமீன் அன்சாரி.

★ பிருந்தாவனக் கவியரங்கம் பெரிய புரட்சி!- எட்டுக்குடி ராஜா, புன்செய்புளியம்பட்டி பி. எம். கிரிஜா.

★ அட்டைப் படம் அசத்தி விட்டது! - நெம்பரம் செல்வி, திருநெல்வேலி ஜம்புநாதன், ஊத்துக்குளி கனகம், புதுக்கோட்டை கல்யாணம் மற்றும் பலர்.

★ 'புத்தாண்டு எப்படி இருக்க வேண்டும்?' - எங்களைத் திகைக்க வைத்து விட்டது. இவ்வளவு சிறிய வயதில் இத்தனை பெரிய எண்ணங்களா! - புதுப்பாளையம் பவானி, விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், மேலகிருஷ்ணன்புதூர் பி. இராமகிருஷ்ணன் மற்றும் பலர்.

★ 'அடிவாங்கும் கசம்' எத்தனை புதுமையான அணுகுமுறை! - மறைமலை நகர் சாரதா, அரக்கோணம் முஸ்தபா, குருவிராஜப்பட்டி க. கப்புலட்சுமி, செம்பியம் த. முத்துராக்கு, ஒண்டிப்பட்டி ப. கவியன் மற்றும் பலர்.

★ மந்திர மணி விறுவிறுப்புக் குறையாது ஒரே மூச்சில் படிக்க வைத்தது! - அவதானப்பட்டி எஸ். வெங்கடேசன், புலியூர் வரதன், வேங்கப்பட்டி கணேஷ், தாராபுரம் மங்களாம்பிகை, உசிலம்பட்டி க. அருச்சுனன், அம்மையார்குப்பம் மா. வே. கிருஷ்ணன் மற்றும் பலர்.

★ சார் தபால் பகுதியில் மேலும் பலர் பெயரைத் தொகுத்துத் தந்துள்ளது உற்சாகமூட்டுகிறது. - நன்னிலம் வேதமுத்து, அகரக்கடம்பனூர் ஆர். சத்தியன், திருவட்டார் தா. செந்தூகுமார் மற்றும் பலர்.

★ பிராட்கேஜ், மீட்டர் கேஜ், நேரோ கேஜ் ஆகிய மூன்றும் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள மீரஜ் ரயில் நிலையத்திலும் உள்ளன. - உங்கல் எம். ஞானசேகர் (பாயிண்ட்ஸ்மேன்) தென் மத்திய ரயில்வே, தும்கூர் கருணாகரன், எலப்பாக்கம் சுந்தரி, பொன்னமராவதி வெள்ளம்மா, தரங்கை வீரலட்சுமி மற்றும் பலர்.

★ நூறு ரூபாய் இரகசியம் ஆவலைத் தூண்டுகிறது. இப்பவே முழுவதையும் படிக்க மாட்டோமான்னு ஏங்கறேன்! - கோவில்பட்டி க. கப்பு, தூத்துக்குடி நு. தம்புசாமி, திருப்பூர் எ. திருமங்கை, மேட்டுப்பாளையம் வ. ஜெயநேசன், அத்திப்பட்டு மு. ராஜ சிங்கம் மற்றும் பலர்.

★ எங்கள் ஊரில் நடந்தது படு ஜோர். இன்னும் அதிகப் பக்கங்கள் ஒதுக்குங்கள். - புன்னம்பாடி மா. பெருமாள், சங்கிலிதாயகம்பாளையம் கு. வேம்பு, பாலவாடி வி. ஜெயவேல், ஊத்தங்கரை பி. கோவிந்தசாமி, மற்றும் பலர்.

"நமது தொண்டு நிறுவனத்துக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டதே... என்ன செய்வது...?'' என்றார் அந்த நிறுவனத்தின் தலைவர்.

செயற்குழு கூடியிருந்தது. உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனை சொன்னார்கள். தலைவருக்கு எதுவும் பிடிக்கவில்லை.

கடைசியில் ஒருவர் எழுந்தார். ''நம் நகரத்தின் யாராவது ஒரு பிரபலமானவரை அழைத்துச் சிறப்புக் கூட்டம் ஒன்றைப் போடுவோம்..... அவரைக் கொண்டே, அக் கூட்டத்தினரிடம் நிதி வசூலித்து விடுவோம்!''

''ஆகா....! அருமையானதொரு யோசனை...'' என்று ஏற்றுக் கொண்டார் தலைவர்.

''சரி... கூட்டத்தில் பேசுவதற்கு யாரை அழைக்கலாம்...?''

''எத்தனையோ செல்வந்தர்கள் இருக்கிறார்களே...! அவர்களில் ஒருவரை அழைத்தால் போயிற்று...''

தலைவர் குறுக்கிட்டார். ''செல்வந்தர் ஒருவர் மேடையேறி நிதி கேட்டால், 'அவரே பெருஞ் செல்வர்தானே... நிறையப் பணம் வைத்திருப்பாரே... அவரே அள்ளிக் கொடுத்து விடக்கூடாதா...' என்பார்கள் மக்கள். எனவே, அது சரிப்பட்டு வராது...''



வாரி வழங்க வைத்தவர்!

அதற்குள் அந்த யோசனையைச் சொன்னவரே எழுந்தார். ''நான் அழைக்கச் சொன்னது செல்வந்தரை அல்ல... பிரபலமானவரை...''

ஜானகி மணாளன்

''பிரபலமானவர் என்றால்...?''

''எல்லா மக்களுக்கும் நன்கு தெரிந்தவர்... எல்லோராலும் விரும்பப்படுபவர்... அத்தகைய ஒருவரைச் சொன்னேன்...'' என்றார் அவர்.

''அப்படியா...? அத்தகையவர் யார் நம் நகரத்தில் இருக்கிறார்கள்?''

''நிறையப் பேர் இருக்கிறார்களே...!'' என்று அங்கு இருந்தவர்கள் பலரும் தலைக்கு ஒருவர் பெயரைக் கூறத் தொடங்கி விட்டனர். பின்னர், அவர்கள் அனைவரும் கலந்து பேசிப் பரிசீலனை செய்து, ஒரு எழுத்தாளரைத் தேர்ந்தெடுத்தனர்.

அந்த எழுத்தாளர் மிகவும் பிரபலமானவர். பல உயர்ந்த நாவல்களைப் படைத்தவர். அவற்றில் ஒன்று 'ஐவன்ஹோ' என்பது. அது உலகப் புகழ்பெற்றது.

எழுத்தில் மட்டுமல்லாது, அவர் பேச்சிலும் வல்லவர். இனிமையாகப் பேசுவார். அவர் பேச்சில் நகைச்சுவை ததும்பும். கேட்பவர்கள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பார்கள். நல்ல விஷயங்களை வெகு நாசூக்காக எடுத்துரைப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.

''அந்த எழுத்தாளர் தான் நமக்குச் சரியான ஆள்... அவரையே அழைத்து விடுவோம்...'' என்று ஒப்புதல் அளித்து விட்டார் தலைவர்.

அனைவரும் அந்த எழுத்தாளரைப் பார்க்கக் கிளம்பிப் போனார்கள்.

''வாருங்கள்... வாருங்கள்... என்ன விஷயம்...?'' என்று அவர்களை வரவேற்றார் எழுத்தாளர்.

அனைவரும் மாறி மாறிப் பேசித் தங்களது வருகையின் நோக்கத்தை எடுத்துரைத்தனர்.

''அதற்கு நான் எப்படி உதவ வேண்டும்?'' என்று கேட்டார் எழுத்தாளர்.

''ஒரு சிறப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்கிறோம்... அதில் நீங்கள் கலந்து கொண்டால் போதும்...''

''ஆம் ஐயா...! கலந்து கொண்டு சொற்பொழிவு ஆற்ற வேண்டும்...''

அதற்கு அந்த எழுத்தாளர், ''நான் பேசினால் போதுமா...? நிதி வசூலாகி விடுமா...? அது எப்படி...? அத்தனை மதிப்பா என் பேச்சுக்கு...?'' என்று ஆச்சர்யப்பட்டுப் போனார்.

''ஆம் ஐயா...! நீங்கள் ஒரு சிறு விண்ணப்பம் செய்து விட்டால்



போதும்... மக்கள் வாரி வழங்கி விடுவார்கள்...''

''அப்படியா...? சரி.. நான் கண்டிப்பாக வருகிறேன்...'' என்று அந்த எழுத்தாளர் முழு மனதுடன் சம்மதித்து விட்டார்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை. சிறப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடாகி விட்டது. நிற்கக் கூட இடம் இல்லை. விழா மண்டபம் நிரம்பி வழிந்தது.


விழாவுக்கு ஏற்பாடு செய்தவர்கள் மிகுந்த கெட்டிக்காரர்கள். நகரத்தில் இருந்த பெரிய பணக்காரர்கள் அத்தனை பேரையும் அழைத்து, முன் வரிசையில் அமர வைத்து விட்டார்கள்.

அந்த எழுத்தாளர் தனக்கே உரிய நகைச்சுவை உணர்வோடு தன் பேச்சைத் தொடங்கினார்.

எதிரில் இருந்தவர்கள், அவர் பேச்சை மிக உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினர். மகுடியில் மயங்கிய நாகம் போன்று அவரது பேச்சில் லயித்துப் போனார்கள்.

அதுதான் தக்க சமயம் என்பதைப் புரிந்து கொண்டார் எழுத்தாளர். உடனே, வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போன்று, மெல்லத் தனது நிதிவசூல் வேண்டுகோளைக் கூட்டத்தினர் முன் எடுத்து வைத்தார். பின்னர், அவர் தன் கையில் இருந்த குல்லாயைக் கழற்றி பாத்திரத்தைப் போல் கையில் ஏந்திப் பிடித்துக் கொண்டார்.

மேடையிலிருந்து இறங்கினார். குல்லாயைத் தனக்கு முன்னால் நீட்டிப் பிடித்துக் கொண்டே கூட்டத்தினரிடையே புகுந்து மெல்ல நடந்தார்.



மண்டபத்தின் எல்லாப் பகுதிக்கும் குறுக்கும் நெடுக்குமாகப் புகுந்து போனார். ஆண்கள், பெண்கள் அத்தனை பேரிடமும் அவர் கையேந்தி விட்டார்.

ஆனால், என்ன ஆச்சர்யம்!

அவருடைய குல்லாயில் ஒரு பைசாக் கூட விழவில்லை! அந்தக் குல்லாய் காலியாகவே இருந்தது!

எழுத்தாளர் மீண்டும் மேடையில் ஏறினார். தன் கையில் இருந்த காலிக் குல்லாயை மக்கள் முன் கவிழ்த்துக் காட்டி விட்டு, அதைத் தலையில் மறுபடி அணிந்து கொண்டார்.

பிறகு நிதானமாக, ''உங்களில் ஒருவர் கூட என் குல்லாயில் காசு போடவில்லையே என்று நான் வருந்த வில்லை... மாறாக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்... ஏன் தெரியுமா...? என் குல்லாயாவது எனக்குத் திரும்பக் கிடைக்கும்படி செய்தீர்களே!'' என்றார்.

அவ்வளவுதான். அடுத்த கணம் அந்தச் சபா மண்டபமே அதிர்ந்தது. அத்தனை பேரும் அவருடைய நகைச்சுவையை ரசித்தனர். 'ஹா...ஹோ...' என்று உரக்கக் கூச்சலிட்டுக் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

அதற்குள் ஒருவர் எழுந்து, ''இப்போது இன்னொரு தடவை எங்களிடையே சுற்றி வந்து நடப்பதைப் பாருங்கள்....'' என்றார்.

வேறு சிலர், ''வேண்டாம், வேண்டாம்... வந்தீர்களானால் குல்லாய் கூடத் திரும்பக் கிடைக்காது...'' என்று எச்சரித்தனர்.

எழுத்தாளர், ''என்ன நடந்தாலும் சரி... அதற்கு நான் தயார்...'' என்றவாறு, முன்போல் குல்லாயைக் கையில் ஏந்தியவாறு கூட்டத்தினுள் புகுந்து விட்டார். என்ன ஆச்சர்யம்! பாதிக் கூட்டத்தைக் கூட, அவர் கடந்திருக்க மாட்டார். அதற்குள் குல்லாய் நிரம்பி வழிந்து விட்டது!

இப்படித் தனது திறமையான நகைச்சுவைப் பேச்சின் மூலம், மக்களை வாரி வழங்கச் செய்த அந்த எழுத்தாளர் யார் தெரியுமா?

அவர்தான் உலகப் புகழ்பெற்ற பிரபல ஆங்கில நாவலாசிரியராகிய சர் வால்டர் ஸ்காட்!

நடந்த தவறு என்ன? - போட்டி முடிவு

போட்டி என்றாலே, பயத்துடன் எழுந்து உட்கார்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு வாசகர்கள் ஆசிரியரை அயரவைத்த போட்டிகளில் இதுவும் சேரும்! 3068 பேர் கலந்து கொண்டிருக்கிறார்கள்! இதில் 300 க்கும் மேற்பட்டவர்கள் சரியான விடையை எழுதியிருக்கிறார்கள். பரிசு பெற்றவர்களைத் தேர்ந்து எடுக்க குலுக்கல் முறை தான் கைகொடுத்தது :

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. வி. சுதர்சன் துரை, திருச்சி - 3
2. ஐ. முகமது ஹாரூன் பாஷா, வத்தலகுண்டு
3. பி. பாண்டியராஜன், கோட்டையூர்
4. என். ஜெய்சங்கர், சேந்தங்குடி
5. ஆர். அமுதா, காஞ்சிபுரம் - 2
6. கே. சித்திரப்பாவை, ஒகுர்
7. எஸ். ரஷீதா பேகம், சென்னை - 7
8. ப. பத்ரிநாராயணன், தம்மம்பட்டி
9. அ. முகம்மது முபீன், சின்ன சேலம்
10. பி.எல். முத்து, பம்பாய் - 17
11. ஆர். ஜெயகாந்தன், துத்திப்பட்டு
12. ஜெ. செந்தில் விருதுநகர்
13. ஆர். சிவப்பிரியா, சென்னை - 4
14. என்.எஸ். சுதந்தி, இராணிப்பேட்டை
15. ஆர். ஞான சௌந்தரி, நைனாங்குளம்

பரிசு பெற்றவர்கள் அனைவருக்கும் கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள். உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஆசிரியரை அயரவைத்த நூற்றுக் கணக்கானவர்களுக்கும் நன்றி!

சரியான விடை :

தாய்க்கு - புலியின் புள்ளிகள் (1-4)
குதிரைக்கு - சிறுத்தையின் புள்ளிகள் (2-5)
வரிக்குதிரைக்கு - குதிரையின் புள்ளிகள் (3-2)
புலிக்கு - வரிக்குதிரையின் கோடுகள் (4-3)
சிறுத்தைக்கு - ஒட்டகச் சிவிங்கியின் கட்டங்கள் (5-6)
ஒட்டகச் சிவிங்கிக்கு - தாயின் புள்ளிகள் (6-1)

கண்டக்டரின் பார்வை தன் பக்கம் திரும்பும்போதெல்லாம் ரவியின் மனது திக்...திக்..கென்று அடித்துக் கொண்டது.

"ஒருவேளை நான் டிக்கெட் எடுக்காததைக் கண்டக்டர் கண்டுபிடித்து விட்டிருப்பாரோ? சே... என்ன காரியம் செய்து விட்டோம்! சாதாரண ஒரு ஐஸ் புரூட்டுக்கு ஆசைப்பட்டு, டிக்கெட் எடுக்காமல் கண்டக்டரை ஏமாற்றுவது எவ்வளவு பெரிய மடத்தனமான தவறு? ஒழுங்காய் டிக்கெட் எடுத்திருந்தால் இந்தப் பயம் பயந்திருக்க வேண்டுமா என்ன?" என்றெல்லாம் எண்ணத் தொடங்கினான்.

லாய் தன் பக்கம் திரும்பும் போதெல்லாம், நம்மைத்தான் பார்க்கிறாரா, என்றெல்லாம் எண்ணியதுண்டா? ஒரு நாளாவது இதைப் போல் பயந்ததுண்டா? இன்று மட்டும் ஏன் பயந்து சாக வேண்டும்? பேசாமல் காசைக் கொடுத்து டிக்கெட் எடுத்து விட்டால் என்ன என்று ஒருகணம் சிந்தித்தவன், மறுகணம் ஐஸ்கிரீம் சபலத்தில் ஆழ்ந்து போனான்.

பள்ளிக்கு வெளியே தள்ளுவண்டிக்காரன் எடுத்துத் தரும் ஐஸ் புரூட்டை நண்பர்களும் மற்றவர்களும் நக்கி, நக்கிச் சாப்பிடுவதை நாவில் ஜலம் ஊற எத்தனை நாட்கள்தான் வேடிக்கை பார்த்துப் பார்த்தே ஏங்குவது? நாமும்



"எல்லோரும் டிக்கெட் வாங்கியாச்சா?" என்று கண்டக்டர் ஒருமுறை எல்லோரையும் பார்த்துக் கேட்டபடியே, அவனைக் கடந்து, கூட்டத்தில் நீந்தியபடியே, பேருந்தின் கடைசிக்குச் சென்றார்.


கண்டக்டர் அவனைக் கடக்கும் போதும் சரி; எதேச்சையாக கண்டக்டரின் பார்வை அவன் பக்கம் திரும்பும் போதும் சரி; ரவியின் நெஞ்சுத் துடிப்பு நார்மலைக் கடந்தது.

"தினமும் டிக்கெட் எடுத்துக் கொண்டு பஸ்ஸில் பயணம் செய்த போதெல்லாம், கண்டக்டர் என்ன செய்கிறார், எங்கே இருக்கிறார், அவர் நம்மைக் கடந்து அப்பால் செல்கிறாரா, இல்லையா? அவரது பார்வை தற்செய

அதை ஒருநாளாவது சாப்பிட்டுப் பார்க்க வேண்டாமா? அதற்கு எழுபத்தி ஐந்து காசு வேண்டுமே! எங்கே போவது? அம்மாவும் சரி; அப்பாவும் சரி; கறார் பேர்வழிகள். டவுன் பஸ்ஸில் பள்ளிக்குப் போவதற்கு எழுபத்தி ஐந்து காசும், திரும்பி வருவதற்கு எழுபத்தி ஐந்து காசுமாக மொத்தம் ஒரு ரூபாய், ஐம்பது காசு மட்டுமே தினமும் எண்ணித் தருவார்கள்.

ஒருமுறை ஐஸ்கிரீம் சாப்பிட ஆசைப்பட்டு, மேலும் காசு கேட்க, தெருவில் விற்கும் பண்டங்களையெல்லாம் சாப்பிடக் கூடாது. உடம்புக்குக்

கே. பக்தவத்சலம்



கெடுதல் என்று இயல்பாகக் கூற, 'சாப்பிட்டே தீருவேன்' என்று அவன் மேலும் அடம்பிடிக்க அன்று உதை வாங்கியதுதான் மிச்சம்!

என்னதான் வீட்டில் சுத்தமான டப்பாக்களில் அடைத்து வைத்து, அவ்வப்போது அவனது அம்மா தருகின்ற பிஸ்கட்டையும் புதிது, புதிதான பட்சணங்களையும் சாப்பிடிருந்த போதிலும் பள்ளிக்கு வெளியே தள்ளு வண்டிக்காரனின் குச்சி ஐஸ் புருட்டுக்கு அவையெல்லாம் ஈடாகாது என்ற முடிவே அவனது மனதில் மேலோங்கி நின்றது. இதன் விளைவே கண்டக்டரை ஏமாற்றியது.

'அப்பாடா... எப்படியோ ஒருவழியாக டிக்கெட் எடுக்காமல் கண்டக்டரை ஏமாற்றியாயிற்று! நாளைக்கு பள்ளிக்குச் சென்றதும் ஐஸ் புருட் வாங்கிச் சாப்பிடுவதுதான் முதல் வேலை!'

என்றெல்லாம் எண்ணியபடியே, சட்டைப் பாக்கெட்டைத் தொட்டுப் பார்த்துக் கொண்ட ரவிக்கு பகீரென்றது.

''ஐயோ... பாக்கெட்டில் வைத்திருந்த பேனா என்னவாயிற்று?'' பதறினான் ரவி. பாக்கெட்டில் காசு மட்டும் இருந்தது. பேனாவைக் காணவில்லை.

பள்ளியிலிருந்து வரும் போது, மாலதி டீச்சர் ஒரு கடிதத்தை அவனிடம் கொடுத்துத் தபால் பெட்டியில் சேர்க்கச் சொன்னதும், தபால் பெட்டியில் சேர்க்கையில் அங்கே, நின்றிருந்த பெரியவர் ஒருவர், முகவரி எழுத அவனது பேனாவை இரவல் வாங்கியதும், பஸ்ஸைக் கண்ட அவசரத்தில் பேனாவைத் திரும்ப வாங்க மறந்து விட்டதும் நினைவிற்கு வரவே, அதிர்ச்சியால் உறைந்து போனான் ரவி.

அந்த ஹீரோ பேனாவை ரவியின் அப்பா அவனுக்கு வாங்கிக் கொடுத்து முழுசாக ஒரு வாரம் கூட ஆகவில்லை. பேனா போய் விட்டது தெரிந்தால், அவ்வளவுதான்! அவனுக்கு அழுகை, அழுகையாய் வந்தது. நாம் ஒருவரை ஏமாற்றப் போய்க் கடைசியில் நாமே அநியாயமாய் ஏமாந்து விட்டோமே!

இருந்தாலும் ரவியின் மனதிற்குள், தனது பேனா நிச்சயம் கிடைத்து விடும் என்ற நம்பிக்கை தோன்றிக் கொண்டே இருந்தது.

'ஒருவேளை அந்தப் பெரியவர் பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவராக இருந்து பேனாவைத் திருப்பிக் கொடுக்கக் காத்திருந்தால்? சிறிது நேரத்திற்கு முன் கண்டக்டரை ஏமாற்றிய அதே காசில், டிக்கெட் எடுத்துக் கொண்டவன் மனதில் வரிசையாய் ஒவ்வொரு கடவுளும் வலம்வரத் தொடங்கினர்! 'ஆண்டவனே நான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன்' என்று கூசிப் போனான்! தனது இழிவுத்தனமான செய்லை நினைக்க நினைக்க அவன் மீதே அவனுக்கு வெறுப்பு வந்தது. நாம் நாணயமில்லாது மற்றவர்களை ஏமாற்றலாம். ஆனால் மற்றவர்கள் மட்டும் நம்மிடம் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது எத்தனை பெரிய அநியாயம்!

ஒருவழியாக போஸ்ட் ஆபீஸ் வரவே, உற்சாகமின்றிக் கீழே இறங்கினான். அங்கே... அந்தப் பெரியவர் இன்னும் இருந்தார். ரவிக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

பெரியவரே முந்திக் கொண்டு, ''பஸ் வந்ததும் பேனா கொடுத்திருப்பதை மறந்து ஓடி விட்டாயே! இன்னும் அரை மணிக்குள் நீ வராவிட்டால், உன் சீருடையை அடையாளமா வைச்சு நாளைக்கு உன் பள்ளிக்கு வரணும்னு நான் நினைச்சிருந்தேன். இந்தா தம்பி உன்னோட பேனா! எங்கே இதை உன் கிடத்தில் திருப்பித் தர முடியாது போய், ஏமாற்றி விட்டோமே என்கிற உறுத்தலோட வாழும்படி இருக்குமோன்னு பயந்தேன். ஆண்டவன் காப்பாத்திட்டான்'' என்று கண்களில் நீர் பனிக்க பேனாவைக் கொடுத்தார்.

ஆண்டவன் உங்களை மட்டுமல்ல, என்னையும் காப்பாற்றி, நாணயமாக வாழ்வது சமுதாயக் கடமை என்பதை உணர்த்தி விட்டார் என்று மனதிற்குள் கூறிக் கொண்டான் ரவி.

ஜஸ்புருட்! அது இப்போ மனதுக்குள் கசந்தது ரவிக்கு!



'வீரசாவர்க்கர்'. இவர் மராட்டிய மாநிலத்தில் 1882 ஆம் ஆண்டு பிறந்தவர். அதே ஆண்டில் பிறந்த பாரதியைப் போலவே கனலாக விளங்கியவர். 'எரிமலை' எனும் முதல் சுதந்திர யுத்தம் குறித்த நூலை இவர் எழுதினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அதை அச்சாகு முன்பே தடை செய்தது. பாரதியின் நூல்களுக்குக் கூட அவை புத்தகமாக விற்பனைக்கு வந்த பிறகுதான் பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது. உலகில் வேறெந்தப் புத்தகத்திற்கும் இப்படி அது அச்சாகி வெளியாகுமுன்பே தடை விதித்ததாக வரலாறே கிடையாது. அந்தகைய தனிப் பெருமை இதற்கு என்ன இருக்கிறது? ஆங்கிலேயர் சிப்பாய்க் கலகம் என்று கேவலமாகப் பெயரிட்டு அழைத்த இந்தியர்களின் முதல் சுதந்திரப் போரைப் பற்றிய வரலாறுதான் இது!

– தக்கோலம் அ. முஸ்தபா.

கழுதை மூளை



ஓர் அழகான காடு. அக்காட்டில் ராஜாவாக வசித்து வந்த சிங்கத்திற்கு ஒரு அபூர்வ ஆசை ஏற்பட்டது. ஒரு கழுதையைப் பிடித்து அதன் மூளையைத் தின்ன வேண்டும் என்பதுதான் அது. இதற்காகத் தன்னுடைய மந்திரியான நரியாரிடம் யோசனை கேட்டது. நரியும், 'கவலை வேண்டாம். நான் எப்படியாவது கழுதையை அழைத்து வருகிறேன்' என்று உறுதி கூறி விட்டுப் புறப்பட்டது.

காட்டில் வெகு தூரம் அலைந்த பிறகு நரி ஓர் இடத்தில் கழுதையைக் கண்டது. கழுதை புல் மேய்ந்து கொண்டிருந்தது. கழுதையிடம் சென்று, ''என்ன கழுதையாரே, இந்தக் காய்ந்த புல்வெளியில் உள்ள புல்லைத் தின்று கொண்டிருக்கிறீரே? நான் உங்கள் வாழ்நாள் முழுவதற்கும் வேண்டிய உணவு உள்ள இடத்தைக் காட்டுகிறேன். வாருங்கள்'' என்று நரி தந்திரமாகக் கூறியது. நரியின் பேச்சில் மயங்கிய கழுதை தன் வாழ்நாள் முழுவதற்கும் வேண்டிய உணவு கிடைக்கப் போகிறது என்ற அளவிலா மகிழ்ச்சியில் நரியுடன் சென்றது. ஏற்கெனவே முன் கூட்டி திட்டமிட்டிருந்தவாறு நரி கழுதையைச் சிங்கத்தின் குகைக்கு அழைத்து வந்தது. குகையில் மறைந்திருந்த சிங்கம் சற்றும் தாமதியாது கழுதையின் மீது பாய்ந்து அதைக் கொன்றது.

பிறகு சிங்கம் நரியிடம், ''நான் குளித்து விட்டு வருகிறேன். வந்து கழுதையின் மூளையைத் தின்கிறேன்'' என்று கூறிவிட்டுக் குளிக்கச் சென்றது. சிங்கம் குளிக்கச் சென்ற உடன் கழுதையின் மூளையைக் கண்ட நரிக்கு நாக்கில் எச்சில் ஊறியது. கழுதையின் மூளையைச் சற்று தின்று 'சேம்பிள்' பார்த்தது. மூளை சுவையாக இருந்ததால் எல்லாவற்றையும் நரி தின்று விட்டது. குளித்து விட்டு மூளையைத் தின்ன ஆவலாய் வந்த சிங்கம், மூளையைக் காணாததால், கோபமாக 'எங்கே கழுதையின் மூளை?' என்று கேட்டது. உடனே நரி தந்திரமாக ''கழுதைக்கு எங்கேயாவது மூளை உண்டா மகாராஜா? அதனால் தானே கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்கிறோம்?'' என்று திறமையாகக் கேட்டது. இதைக் கேட்ட சிங்கம் உண்மையிலேயே கழுதைக்கு மூளை இல்லை என்று நம்பிவிட்டது. ஏமாந்த சிங்கத்தைப் பார்த்த நரி உற்சாகத்தில் துள்ளியது.

– ஜி.கே. மணிகண்டன்



மொத்தமாகக் கொடுங்கள்!


தயாள குணம் படைத்த செல்வந்தர் ஒருவர் ஏழை எளியவர்களுக்குப் பண உதவி செய்து வந்தார். ஒருநாள் வாலிபன் ஒருவன் அவரிடம் வந்து, ''ஐயா, நான் பரம ஏழை. என் பெற்றோரையும் நான் காப்பாற்ற வேண்டும். வேலை எதுவும் கிடைக்கவில்லை. நீங்களாவது வேலை கொடுங்கள்'' என்று கேட்டான்.

''உனக்கேற்ற வேலை எதுவும் இப்பொழுது இங்கு இல்லை. வேறு, எங்காவது கேட்டுப் பார். ஆனால், உனக்கு வேலை கிடைக்கும் வரை தினமும் இங்கே வா. இரண்டு ரூபாய் கொடுக்கிறேன். - வாங்கிக் கொண்டு போ'' என்றார் செல்வந்தர் இரக்கத்துடன்.

அதே போலச் சில நாட்கள் வரை அவ்வாலிபன் தினமும் வந்து செல்வந்தரிடம் பணம் வாங்கிச் சென்றான். ஒருநாள் அவன் வரவில்லை. தொடர்ந்து பத்து நாட்கள் அவன் வரவில்லை. பதினோராம் நாள் வந்தான். அவனைப் பார்த்த செல்வந்தர், ''வேலை கிடைத்து விட்டதா? இவ்வளவு நாட்களாக ஆளையே காணோமே?'' என்று கேட்டார்.

''வேலை கிடைக்கவில்லை. தினமும் இங்கு வர கஷ்டமாக இருந்ததால், பத்து நாட்கள் கழித்து வந்தேன். இனிமேல் பத்து நாட்களுக்கு ஒருமுறை வருகிறேன். மொத்தமாகப் பத்து நாட்களுக்கும் சேர்த்துக் கொடுத்து விடுங்கள்'' என்றான் வாலிபன். உடனே செல்வந்தர், ''சரியான சோம்பேறி நீ! உன்னைப் போன்ற சோம்பேறிக்கு உதவுவது கூட நல்லதல்ல; போ, போ'' என்று கூறி அவனை விரட்டி விட்டார்.


- சிவரஞ்சன்.



வாகனங்களில் புதுமை

புதுப்புது கண்டுபிடிப்புகள்,
கண்டுபிடிப்புகளில் மாறுதல்கள்,
மாறுதல்களில் வசதிகள்—எல்லாம்
அறிவியலின் சாதனைகள்!


ஆழி







ஜப்பானும் ரஷ்யாவும் சேர்ந்து தயாரித்த உலகத்திலேயே மிகப் பெரிய ராட்சச டிரக் இது. எடை 200 டன்கள்! இந்த டிரக் சாலையில் போகும்போது, பெரிய கட்டடம் ஒன்று இடம் பெயர்ந்து நகர்வது போல இருக்கும்! இதன் சக்கரத்தைப் போல மிகப் பெரிதான சக்கரம் இதற்கு முன் தயாரிக்கப் பட்டதில்லை!

'பியூஜியோட்' என்னும் பிரெஞ்சு மெக்கானிக் அமைத்த முட்டை வடிவக் கார் இது. பாட்டரியினால் ஓடக் கூடியது. இதன் வேகம், மணிக்கு 110 கி.மீ. ஒரு தடவை பாட்டரியைச் சார்ஜ் செய்தால், தொடர்ந்து 110 கி.மீ. தூரம் ஓட்டிக் கொண்டு போகலாம். 14 ஆண்டுகள் நல்ல நிலைமையில் ஓடிக் கொண்டு இருக்கும்!



இப்போது, உலகிலேயே மிக நீளமான கார் இதுதான். நீளம் 30.5 மீட்டர்! எடை சுமார் 12 டன்! 24 சக்கரங்கள். 50 பேர்கள் பயணம் செய்யலாம்! இதில் ஒரு நீச்சல் குளமும் உண்டு! அமெரிக்காவில் 'ஜே. ஓஹெர் பெர்க்' என்பவர் உருவாக்கிய கார் இது.





பனிப்பிரதேசங்களில் ஓடக் கூடிய கார் இது. இதற்குச் சக்கரங்கள் கிடையாது. பதிலாகப் பனித்தரையில் சறுக்கிக் கொண்டு ஓடும் வகையில் அலுமினியப் பட்டைகள் இருக்கின்றன. இதன் வேகம் மணிக்கு 100 கி.மீ. பனி உருகி தண்ணீராகிவிட்ட இடங்களில் எந்திரப் படகாகவும் இதைப் பயன் படுத்தலாம். அமெரிக்கக் கண்டுபிடிப்பு இது.

சாலையிலும் ஓடும், நீரிலும் மிதந்து செல்லும் 'மினி பஸ்' இது. ஜெர்மனியில், 'ஹெர் ஹார்ட் திரி' என்னும் மெக்கானிக் தயாரித்தது. இதில் 60 எச்.பி. இன்ஜினும் புரொபல்லரும் இணைக்கப் பட்டிருக்கிறது. வேகம், மணிக்கு 18 கி.மீ!







'லேண்ட் ரோவர்' என்னும் இந்த வாகனம், நீரில், நிலத்தில், காட்டில், மேட்டில், குண்டு குழிகளில், மலைச் சரிவில்—எங்கும் போகக் கூடியது. இதன் 4 சக்கரங்களும் இயங்கும். இதன் வேகம், நிலத்தில் மணிக்கு 112.கி.மீ. நீரில் 13 கி.மீ. லண்டன் போலீஸ் உபயோகத்திற்கு ஏற்ற வகையில் இது வடிவமைக்கப் பட்டது.

விமான வடிவில் உள்ள 'வோட்கா-2' என்னும் எந்திரப் படகு இது. ரஷ்யாவில், 'ரோஸ்திஸ்லாவ் அலெக்சியேவ்' என்பவர் உருவாக்கியது. நீரின் மேற்பரப்பில் வழுக்கிச் செல்லும். கரையோரம் இறங்கலாம். புயலில் 3 மீட்டர் உயரம் அலைகள் எழும் போதுகூட, கவிழ்ந்து விடாமல், நீரில் போவதற்கு ஏற்ற படகு இது!







மிகுந்த காந்த சக்தியினால் நீரில் மிதந்து ஓடக்கூடிய வாகனம் இது. ஜப்பானில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இதன் பெயர்: 'யமாடோ ஒன்.'



சூரிய சக்தியால் இயங்கும் படகு இது. மேற்கு ஜெர்மனியில் உருவாக்கப் பட்டது. நீரில் இதன் வேகம் மணிக்கு 8 கி.மீ.



மேற்கு ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட குட்டி நீர்மூழ்கிக் கப்பல் இது. முழுவதும் பிளாஸ்டிக் கண்ணாடியால் தயாரிக்கப் பட்டது. இதில் ஓர் ஆள் உட்கார்ந்து நீருக்குள் இதைச் செலுத்தலாம். சுவாசிக்க ஆக்ஸிஜனும் உண்டு. இதில் அமர்ந்து கடல் காட்சிகளை ரசிக்கலாம்.




பறவைகளைப்போல் சிறகடித்துப் பறக்கும் குட்டி விமானம் இது. மேலே பறக்கும் போது, மிகப் பெரிய பறவை ஒன்று சிறகடித்துப் பறப்பதுபோல இருக்கும். மாஸ்கோ விமான இயல் கல்லூரியைச் சேர்ந்த 'கிசெலேவ்' என்பவரின் தலைமையில் இது உருவாக்கப்பட்டது.



இது 'பறக்கும் நாற்காலி'. ராக்கெட் விசையில், மேலே அந்தரத்தில் பறக்கக்கூடியது. அமெரிக்கக் கண்டுபிடிப்பு. இராணுவத் துறையில் மிகுதியாகப் பயன்படும். வேறு வகையில் கடக்க முடியாத இடங்களில், ஆட்களையும் தளவாடங்களையும் இதன் மூலம் கொண்டு செல்லலாம். இந்த நாற்காலி, மேலே பறக்கும்போது, மந்திரக் கதைகளில் வரும் காட்சிபோல பிரமிப்பாக இருக்கும்!



ஆஸ்திரேலியாவில், 'பிரெய்ன் கூத்லிபென்' என்பவர் அமைத்த சக்கர நாற்காலி இது. இதைக் கையால் தள்ள வேண்டாம். பாட்டரியால் இயங்கக்கூடியது. ஓய்வு தேவையென்றால், இதிலுள்ள லீவரைத் தளர்த்திப் படுக்கையாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம். தேவைப்படாத போது, தனித்தனியாகவும் கழற்றிவிடலாம்.




இதன் பெயர் 'ஸைக் பைக்.' இதைக் கண்டு பிடித்தவர் 'சர் கிளைவ் சின் கிளையர்'. இங்கிலாந்துக்காரர். இது குறைந்த எடையுள்ள சைக்கிள். சிறிய சக்கரங்களைக் கொண்ட இதில் பாட்டரியால் இயங்கும் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இதன் வேகம் மணிக்கு 24 கி.மீ. இந்த வேகத்தில் 30 நிமிடங்கள் போகலாம். வேகத்தைக் குறைத்தால் தொடர்ந்து 3 மணி நேரம் ஓட்டலாம்!

இது 'மின்சார ஸ்கூட்டர்'. லண்டன் கண்டுபிடிப்பு. நடக்க முடியாதவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டது. 41 செ.மீ. குறுக்களவுள்ள 3 சக்கரங்களை உடையது. 24V என்னும் மின் மோட்டாரினால் இயங்குகிறது. இதில் முன்னாலும் போகலாம், பின்னாலும் போகலாம், வேகமாகவும் போகலாம், மெதுவாகவும் போகலாம். பாதுகாப்பானது. மடக்கிக் காருக்குள் வைத்துக் கொள்ளலாம்!



இது 'சூட்கேஸ் ஸ்கூட்டர்'. ஸ்விஸ் என்ஜினியரால் வடிவமைக்கப்பட்டு, ஜப்பானில் உருவாக்கப்பட்டது. இதை 70 x 35 செ.மீ. அளவில் ஒரு சூட்கேஸ் போல மடக்கித் தூக்கிக் கொண்டு போய்விடலாம்! எடை 92 பவுண்டு. வேகம், மணிக்கு 56 கி.மீ. இதை நிறுத்தி வைப்பதற்குத் தனி இடம் தேவையில்லை. அலுவலகங்களில் வேலை செய்கிறவர்கள், கையோடு தூக்கிக்கொண்டு போய்விடலாம்!







கம்ப்யூட்டர்களைக் கலங்க வைத்தவர்கள்!

"மனப்பாடம்.... மனப்பாடம்... மனப்பாடம்.... அப்பப்பா! எத்தனை பாடங்களைத்தான் பரீட்சைக்காக ஞாபகத்தில் வைத்துக் கொள்வது? தேவைப்படும் பொழுது ஃபீட் செய்து நினைவில் கொண்டு வரலாம் என்பதற்கு நமது மூளை கம்ப்யூட்டரா என்ன?" என்று புலம்பும் மாணவ மாணவிகள் உங்களில் நம்மில் ஏராளம்.

நமது மூளை, கம்ப்யூட்டர் மட்டுமல்ல. அதைவிட அதிக சக்தி வாய்ந்த இறைவன் நமக்களித்த வரப்பிரசாதமாகும். அதைத் தகுந்த முறையில் உபயோகப்படுத்திக் கொண்டால் ஞாபக சக்தியில் கம்ப்யூட்டரையும் நாம் வெல்ல முடியும். இதோ உதாரணத்திற்கு சில ஞாபக சக்தி புலிகள்.

சில வருடங்களுக்கு முன்பு டென்மார்க் நாட்டிலுள்ள பிரபல வங்கி ஒன்று தீப்பிடித்துக் கொண்டது. நல்ல வேளை பணம் பாதுகாக்கப்பட்டிருக்கும் அறையை 'தீ' நெருங்கும் முன்பாகவே அணைக்கப்பட்டு விட்டது. ஆனால் வாடிக்கையாளர்களின் வரவு செலவு புத்தகங்கள் எல்லாம் கருகி விட்டன! பாங்க் தீப்பிடித்து விட்டதை அறிந்ததும் பணம் போட்டவர்கள் எல்லாம் திரண்டு வந்து பணத்தைத் திருப்பிக் கேட்டனர். "கணக்குப் புத்தகங்கள் இருந்தால் சரிபார்த்து பணத்தைத் தரலாம். அவைதான் சாம்பலாகி விட்டனவே! என்ன செய்வது?" என்று அதிகாரிகள் எல்லாம் குழம்பிக் கொண்டிருந்தனர். அந்த வேளையில், அங்கு அக்கவுண்டன்டாகப் பணி புரிந்த கிளார்க் ஒருவர், தான் மனப்பாடம்



செய்து வைத்திருந்த கிட்டத்தட்ட இரண்டாயிரம் கணக்கு எண்கள், அதில் பெயர் வாரியாகப் போடப்பட்டிருந்த தொகை போன்ற புள்ளி விவரங்களை அப்படியே ஒப்பித்தார்! இந்த மூளையில் கால் பங்காவது நமக்கு இருக்கக் கூடாதா?

இதே போல லண்டன் பத்திரிகை நிருபர் ஒருவர், பார்லிமெண்ட் நிகழ்ச்சிகளைப் பற்றி குறிப்பெடுக்கச் சென்றால் குறிப்பேடோ, டேப் ரெக்கார்டரோ எதையும் எடுத்துச் செல்ல மாட்டார். சும்மா போய் அங்கு அமர்ந்து வந்த பின்பு யார் யார் என்னென்ன பேசினார்கள் என்பதை அப்படியே எழுதிப் பேப்பருக்குத் தந்து விடுவார். எனவே இவரது நண்பர்கள் இவரை 'மெமரி', என்றே அழைப்பதுண்டு.

'ஸ்மார்ட்ஸ்' என்று தென் ஆப்பிரிக்காவில் ஒரு பீல்டு மார்ஷல் இராணுவ அதிகாரியாக இருந்தார். இவரிடம் சுமார் 5 ஆயிரம் நூல்கள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. இதன் ஒவ்வொரு பக்கமும் இவருக்கு மனப்பாடம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். வெளிநாடுகளுக்கெல்லாம் உதாரணம் காட்டுவதற்காகப் போவானேன்? நம் நாட்டிலும் கம்பராமாயணம், மகாபாரதம், குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் செய்து பக்கம் வாரியாக விவரிப்பவர்கள் இருக்கின்றார்களே! நமது பால கங்காதர திலகர் அவர்களுக்கு ஞாபக சக்தி மிகவும் அதிகமாக இருந்தது. அவர் பள்ளியில் பயிலும் காலத்திலேயே கேள்வி பதில்களை நோட்டில் எழுத மாட்டார். ஒரு தடவை படித்து விட்டால் அது அவருக்கு அப்படியே மனப்பாடம் ஆகிவிடும்!

நம் நாட்டுக் கணித மேதை சகுந்தலா தேவியின் கதைதான் உங்கள் அனைவருக்கும் தெரியுமே! புதிய இளந்தளிர்களுக்காக இவர் லண்டனில் பல்வேறு கம்ப்யூட்டர்களுக்கு முன்பாக 13 இலக்கங்களைக் கொண்ட இரு வரிசைக் கணக்கை கம்ப்யூட்டர் விடையளிக்கும் முன்பாக (அதாவது இருபத்தி எட்டே நொடிகளில்) விடையளித்து ஆங்கிலேயர்களை அதிர



வைத்து விட்டு வந்திருக்கிறார்!

நமது மூளையில் நியூக்லிக் ஆஸிட் எனும் திரவம் உள்ளது. இதுதான் ஞாபக சக்திக்கு மூல கருவாகும். இது மூன்று வயதிலிருந்து நாற்பது வயது வரை சுரந்து கொண்டேயிருக்கும். இந்த வயதில் எளிதில் மனப்பாடம் செய்ய முடியும். நாற்பது வயதிலிருந்து அறுபது வயது வரை இந்தத் திரவம் கூடுவதுமில்லை; குறைவதுமில்லை. இதன் பின்னர் இது வற்றத் துவங்கி ஞாபக சக்தியை கொஞ்சம் கொஞ்சமாக மறக்கடிக்கச் செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

– சக்தி.

நல்லா வருவியே!

ரகுநாதன் சார் புரோக்ரஸ் ரிப்போர்ட்டுகளைக் கையிலெடுத்துமே ஜவஹர் மணியை அலட்சியமாகத் திரும்பிப் பார்த்தான். மணியோ நட்புடன் புன்முறுவல் புரிந்தான்.

''வழக்கம் போல,'' என ஆரம்பித்தார் சார். ''ஜவஹர் வகுப்பில் முதல் மாணவன். இரண்டாவதாக வந்திருப்ப வனும் எப்போதும் போல மணிதான்.'' மாணவர்கள் எல்லாருமே கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

''வாழ்த்துக்கள் ஜவஹர்! எல்லாப் பாடங்களிலுமே நீ மணியை விட ஓரிரு மதிப்பெண்கள் கூடுதலாகப் பெற்றிருக்கிறாய். இந்த வித்தியாசத்தை நீ அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டும்'', என்றார் ஆசிரியர்.

''முடியாதே சார்?'' என்றான் ஜவஹர்.

''ஏன்டா முடியாது?'' என்று கேட்டார் ரகுநாதன் சார்.

''நூற்றுக்கு நூறுக்கு மேலே நீங்க போடமாட்டீங்களே சார்'', என ஜவஹர் கூறியதும் எல்லோரும் சிரித்தனர். ஆனால்-

ராமநாதன் சார் முகம் மட்டும் சற்றே கடுகடுப்பானது.

வீட்டில் -

''ஜவஹர்!'' என்று சற்றே கோபத்தோடு அழைத்தார் ரகுநாதன்.

''இதோ வந்து விட்டேன் அப்பா'', என்றவாறு அவர் எதிரே வந்து நின்றான் மணி. ஆம்! ஆசிரியருடைய ஒரே மகன் தான் ஜவஹர்.

''ஏன்டா! எல்லாவற்றுக் குமே எனக்கு விடைகள் நன்றாகத் தெரியும்னு என்கிட்டே சொல்லத் தெரிகிறது. ஆனால், வகுப்பிலே இரண்டாவதாக வர வெட்கமில்லே?

''அப்பா!'' - மெல்ல அழைத்தான் ஜவஹர். ''கொஞ்சம் கோபப்படாமே கேளுங்க!''

''சரி சொல்லு'', எனச் சற்றும் கடுமை குறையாமலே அவர் அதட்டினார்.

''எனக்கு எல்லாமே அத்துப்படி தாம்பா. நீங்க வேண்டுமானால் பாருங்க. இறுதித் தேர்விலே மாநிலத்திலேயே முதல் மூன்று பேருக்குள்ளே நிச்சயமாக நான் வருவேன்'', என ஜவஹர் சூளுரைத்தான்.

''நல்லா வருவியே!'' என்ற ரகுநாதன் அலட்சியமாக. ''வகுப்பிலேயே முதலாவதாக உன்னால் வரமுடியலே?'' என்றார்.

''வரமுடியும்பா!'' - ஜவஹர் உறுதியுடன் கூறினான். ''நீங்க மட்டும் எனக்கு ஆசிரியராக இல்லை என்றால்!''

''என்னடா சொல்கிறாய்!'' என்றார் அப்பா என்கிற ஆசிரியர்.

''நீங்க விடைத்தாள்களைச் சரியாகப் பாருங்கள்.

நான் வேண்டுமென்றே தவறிழைத்திருப்பதைப் புரிந்து கொள்வீர்கள். அப்பா! இப்போது நான் வகுப்பில் முதலாவதாக வந்தேனென்றால், நான் மதிப்பெண் எடுத்தேனென்று யாரும் சொல்ல மாட்டார்கள். நீங்க போட்டீங்க, என்றுதான் கூறுவார்கள். அது உங்களுக்குக் கெட்ட பெயர்....'' என இழுத்தான் ஜவஹர்.

அவனைச் சட்டென்று இழுத்து அணைத்துக் கொண்டார் ரகுநாதன். அவர் கண்கள் பனித்தன.

மகன் வகுப்புப் பாடங்களை மட்டுமல்லாமல் உலகப் பாடங்களையும் நன்கு கற்றிருக்கிறான் என்பதை உணர்ந்த பெருமையினால் ஏற்பட்ட பூரிப்புதான் அந்தப் பனித்தல்.

– கைலாஸ்



பிருந்தாவனக் கவியரங்கம்





பொம்மை

புத்தம் புதிய பொம்மையிது
புதுமையானது
தத்தித் தத்தி நடந்து வந்து
தாளம் போடுது

பட்டுச் சட்டை போட்டுகிட்டு
பல்லைக் காட்டுது
தட்டுறதை நிறுத்தி விட்டால்
சத்தம் கூட்டுது

சாவி தன்னைப் பிடுங்கி விட்டால்
சாய்ந்து படுக்குது
தாவி அதை எடுத்துகிட்டா
தலையை ஆட்டுது

அத்தை தந்த பொம்மையிது
அருமையானது
புத்தம் புதிய பொம்மையிது
புதுமையானது

- ஜெ. ரமேஷ், திருச்சி - 3.



புலியப்பா!

காட்டில் வாழும் புலியப்பா
கண்டால் எனக்கு பயமப்பா!
வேட்டை உம்மை ஆடிடவே
விருப்பம் இல்லை எனக்கப்பா!

மான்கள் ஆடு மாடுகளை
மகிழ்ந்து வேட்டை ஆடுகிறாய்!
யானை என்றால் புலியப்பா,
ஐயோ உனக்கு பயமாப்பா?

உந்தன் உடம்பின் கோடுகளை
உட்கார்ந்து எண்ணிட ஆசைப்பா!
எந்தன் ஆசை நிறைவேற
எனக்கு வாய்ப்புத் தாருமப்பா!

- எஸ். வடிவேல், சென்னை - 2.

தங்கப் பாப்பா!

சின்னச் சின்ன பாப்பா
சித்தி தந்த பாப்பா
தின்ன எதுவும் கேட்கா
தங்கக் கட்டிப் பாப்பா!

எனக்குப் பிடித்த பாப்பா
என்னை மயக்கும் பாப்பா
என்னை விட்டு விலக
என்றும் எண்ணாப் பாப்பா!

சாவி கொடுத்தால் சுத்தும்!
சுற்றிச் சுற்றிப் பார்க்கும்!
தாவித் தாவி நடக்கும்!
தொல்லை தராப் பாப்பா!

- எஸ். ஹைமாவதி, சென்னை - 20.

தெய்வமாம்!

அன்பு செய்ய அன்னையாம்
அறிவு சொல்ல தந்தையாம்
பண்பு பெற ஆசானாம்
பாரில் இவர் தெய்வமாம்

துன்பம் வரும் நேரத்தில்
துவள விடா அன்னையாம்
எம்மை வாழ்வில் உயர்த்தவே
என்றும் உழைக்கும் தந்தையாம்

சூது வாதை வெறுக்கவும்
சிறந்த கல்வி கற்கவும்
போதும் என்ற எண்ணத்தை
போதித் தருளும் ஆசானாம்

தாழவு வந்த நேரத்தில்
துவண்டு விடா தோழராய்
வாழ்வு காண இவர்களே
வழி நடத்தும் தெய்வமாம்!

இரா. மகேஷ், தூத்துக்குடி.



பிருந்தாவனக் கவியரங்கம்





புள்ளி மான்!

புள்ளி மானே அருகில் வா
புல்லுத் தருவேன் விரைவில் வா
துள்ளித் துள்ளி தாவி வா
தொட்டுப் பார்க்க ஆசை வா

சுதந்திர மாகச் சுற்றி வா
சுகமாய் எங்கும் சென்று வா
புதிய காட்சி கண்டு வா
புள்ளிக் கோலம் கொண்டு வா

மிரளும் பார்வை வேண்டாம் வா
மனதுக்கு மகிழ்ச்சி சேர்க்க வா
மின்னும் உடலைக் காட்ட வா
மின்னல் போலப் பாய்ந்து வா

அழகு மிக்க மானே வா
அன்பாய் நட்புக் கொள்வோம் வா
பழகி ஒன்றாய் வாழ்வோம் வா
புள்ளி மானே துள்ளி வா!

- எம். சேக் உசேன், வடகரை.



தோட்டம்

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
எத்தனை பசுமை காய்கறி!
நீங்கள் வந்து காணுங்கள்
நன்று என்று கூறுங்கள்!

குண்டு குண்டாய் கத்தரி
கொடியில் தொங்கும் வெள்ளரி
வெண்டை அவரை உண்டுங்க
வத்தல் போட நன்றுங்க!

பீர்க்கை ஆடுது பாருங்க
புடலை அழைக்குது பாருங்க
யார்க்கும் ஆசை தோணுங்க
எத்தனை பாடு எண்ணுங்க!

- வே. பாரதி, வடமாதிமங்கலம்.





தொழிற்சாலை!

நூற்றுக் கணக்கில் குடும்பங்கள்
நன்கு வாழ்ந்திட வகைசெய்யும்
ஏற்றம் மிக்க திருக்கோயில்
எங்கள் ஊரின் தொழிற்சாலை

பெரிய இயந்திர பாகங்கள்
போக்கு வரத்து சாதனங்கள்
அரிய மருத்துவக் கருவிகளும்
அழகாய் செய்யும் தொழிற்சாலை

உழைப்பின் உயர்வைக் காட்டிடுமாம்
உயர்ந்து நிற்கும் தொழிற்சாலை
தழைத்து இதுவும் உயர்ந்திடவே
தளரா ஒற்றுமை வேண்டுங்க!

- வாரஸ்ரீ. சென்னை - 5.

எங்க ஊரில் திருவிழா!

எங்க ஊரில் திருவிழா!
இந்த வாரம் நடக்குது!
தங்கத் தேரின் ஏறியே
சாமி வந்திடும் ஊர்வலம்!

தாளம் மேளம் கொட்டுவார்!
தாரை கொம்பு ஊதுவார்!
காளை கோழிப் பந்தயம்!
கண்ணைக் கவரும் ராட்டினம்!

பட்டுச் சட்டை போடுவேன்!
பலூன் வாங்கி ஊதுவேன்!
மிட்டாய் லட்டு வாங்குவேன்!
மற்றவர் கூடத் தின்னுவேன்!

பாட்டும் கூத்தும் வாடிக்கை!
பார்க்க வாண வேடிக்கை!
கேட்டு மகிழப் போதுமோ?
கிளம்பி வந்து பாருங்கோ.


- ச. இளமதி, கொட்டப்பட்டு.

பிருந்தாவனக் கவியரங்கம்

பல் துலக்கு

பற்களை நன்கு துலக்கிடுவாய்!
பல்லின் சொத்தையை விலக்கிடுவாய்!
ஏற்று இதன்படி நடந்திட்டால்
இல்லை தொல்லை உணர்ந்திடுவாய்

பல்லைத் துலக்கா வழக்கத்தால்
பற்பல நோய்கள் வந்திடுமே
தொல்லை துயரம் விலகிடவே
தினமும் பல்லைத் துலக்கிடுவாய்!
- இரா. ஷெரிப், திண்டிவனம்.



வெள்ளைப் புறா!

நீலவானில் பறக்குது பார்
வெள்ளைப் புறா!
நன்கு சிறகை அடிக்குது பார்
வெள்ளைப் புறா!
வானை வெட்டி சுழற்றுது பார்
வெள்ளைப் புறா!
வளைந்து வட்டம் போடுது பார்
வெள்ளைப் புறா!

கொத்துக் கடலை கொத்துது பார்
வெள்ளைப் புறா!
கொள்ளை அழகு ஊங் கொட்டும்
வெள்ளைப் புறா!
கத்திக் கரணம் போடுது பார்
வெள்ளைப் புறா!
சிறிய வித்தை காட்டி மயக்கும்
வெள்ளைப் புறா!
- எஸ். பி. அரவிந்த்,
சென்னை - 96.

மேகமே!

குவிந்து திரளும் மேகமே
கூடி மகிழும் மேகமே
எவரும் தொடாத உயரத்தில்
எட்டி நிற்கும் மேகமே!

பார்க்க ஒரே கறுப்புதான்
பரவப் பரவ வண்ணங்கள்

பாரில் உயிர்கள் தழைத்திட
பரிந்து மழையாய் வீழ்கிறாய்!

- எஸ். வசந்த குமார், மாத்தூர்.





பிருந்தாவனக் கவியரங்கம்

எங்கள் பள்ளி

அன்பு நிறைந்தது எங்கள் பள்ளி
ஆற்றல் மிகுந்தது எங்கள் பள்ளி
இன்சொல் வளர்ப்பது எங்கள் பள்ளி
ஈகையில் சிறந்தது எங்கள் பள்ளி

உண்மை நிறைந்தது எங்கள் பள்ளி
ஊக்கம் மிகுந்தது எங்கள் பள்ளி
எண்ணங்கள் சிறந்தது எங்கள் பள்ளி
ஏழைக்கு உதவிடும் எங்கள் பள்ளி

ஐயம் இல்லாதது எங்கள் பள்ளி
ஒழுக்கம் மிகுந்தது எங்கள் பள்ளி
ஓயாமல் உழைப்பது எங்கள் பள்ளி
ஔவையை போற்றிடும் எங்கள் பள்ளி
அஃதே எங்கள் அருமைப் பள்ளி

- எஸ். பி. சிவநாத், மதுரை - 16.

நல்ல காலம் பிறக்குது!

நல்ல காலம் பிறக்குது
நன்மை எல்லாம் சேருது
தொல்லை துன்பம் நீங்குது
துயரம் பேதம் பறக்குது!

கல்வி ஞானம் சேருது
கலைகள் எல்லாம் வளருது
எல்லா நன்மை கூடுது
எங்கள் நாடும் வாழுது!

- எஸ். ஹைமாவதி,
சென்னை - 20.



பிருந்தாவனக் கவியரங்கம்

நூறு ரூபாய்

9. வேகம்! வேகம்!

"சார், பரதனுக்கு போன் வந்திருக்கு."

வகுப்பில் நுழைந்த பியூன், கரும் பலகையில் கணக்கு எழுதிக் கொண்டிருந்த ஆசிரியர் குப்புசாமியிடம் கூறினான்.

அதைக் கேட்டதும் பரதன் எழுந்து நின்றான். குப்புசாமி அதைக் கவனித்து, தலையசைத்து அவன் வகுப்பை விட்டுப் போக அனுமதி தந்தார்.

பரதன் உடனே வெளியே போகவில்லை. அவனுக்கு 'போன் செய்தி என்னவாக இருக்கும்' என்பது தெரியும். அதனால், "சார், ஒரு முக்கியமான இடத்துக்கு வேகமாகப் போகணுங்க. ஞானத்தையும் என்னுடன் அனுப்பினால், அவன் தன் சைக்கிளில் என்னை அழைத்துப் போவான்."

பரதன் சொன்னதும் ஞானம் எழுந்து நின்றான்.

குப்புசாமிக்கு ஒன்றும் புரியவில்லை.

"போனிலே செய்தி வரும் அளவு பரதன் பெரிய வீட்டுப் பிள்ளையல்ல. செய்தி வரும் என்று பரதனுக்குத் தெரியும் போலும். செய்தி வந்தால் தன்னை அழைப்பான் என்பது ஞானத்துக்கும் தெரியும் போலும். அதுதான் எழுந்து நிற்கிறான். இந்த இருவரையும் ஒரு பரபரப்போடு செயல்படுத்தும் அந்தச் செய்தி என்ன? யாரிடமிருந்து வந்துள்ளது?"

டாக்டர் பூவண்ணன்

ஆசிரியர் குப்புசாமி ஒருகணம் யோசித்தார். ஆனால் பரதனிடம் எதுவும் கேட்கவில்லை. அவர், ஞானமும் வெளியே போக அனுமதித்தார். 'இருவரும் நல்ல பிள்ளைகள். முக்கியமான காரியம் இல்லாமல் வெளியே போக மாட்டார்கள்.'

பரதனும் ஞானமும் வெகு வேகமாக வகுப்பிலிருந்து வெளியேறினார்கள். வெளியேறியதும் பள்ளி அலுவலக அறைக்கு வேகமாக ஓடினார்கள். பரதன் அங்கே தொலைபேசியின் ரிசீவரை எடுத்து, காதோடு அணைத்து, "ஹலோ, நான் பரதன் பேசறேன்" என்று கூறினான்.

"நான் விக்டர் பேசறேன். நீ சொன்ன ரெண்டு ஆளும் இப்போ லட்சுமி காம்ளக்ஸிலே இருக்காங்க... சீக்கிரம் வாங்க. நான் வெளி வாசல்லே நிக்கறேன்."

"சரி. இதோ வரேன்."

பரதன் ரிசீவரை வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தான். பக்கத்தில் ஞானம் இல்லை. அவன் எங்கே என்று யோசிப்பதற்கு முன், சைக்கிள் மணியின் சத்தம் கேட்டது. பரதன் ஒலி வந்த திசையில் பார்த்தான். அலுவலகத்தின் வெளியே ஞானம் சைக்கிளுடன் நின்று கொண்டிருந்தான்.

அவசரத்தை உணர்ந்த ஞானம், பரதன் தொலைபேசியில் பேசி முடிப்பதற்குள், சைக்கிளை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறான்!

பரதன் மனத்திற்குள்ளேயே அவனுக்கு ஒரு 'சபாஷ்' போட்டுக் கொண்டு, சைக்கிளை நோக்கி ஓடினான். சைக்கிளை அடைந்ததும், "லட்சுமி காம்ப்ளெக்ஸ் போகணும்" என்று சொல்லிக் கொண்டே, சைக்கிளின் பின்

கேரியரில் ஏறி அமர்ந்தான். பயணிகள் ஒரு காலை வைத்து, மறு காலை வைப்பதற்கு முன்பு புறப்படும் அரசுப் பேருந்தைப் போல, பரதன் சரியாய் உட்காருவதற்கு முன்பு, ஞானத்தின் சைக்கிள் நகர்ந்தது.

நகர்ந்ததா?

இல்லை! இல்லை! பறந்தது!

'மேலாடை விழுந்தது எடு என்றான்; அவ்வளவில் நாலாறு காதம் கடந் தது' என்று புகழேந்திப் புலவர் புகழும் நளவேகத்தில் ஞானத்தின் சைக்கிள் பறந்தது. அது மேட்டுப் பாளையம் சாலையில் சென்று, வடகோவை ரயில்வே கேட்டை நோக்கிச் சென்ற போது ஞானம் - பரதன் ஆகிய இருவர் மனமும் வேகமாகத் துடித்தன.

''கேட்டு மூடியிருக்குமோ?''

நல்லவேளை!

கேட்டு திறந்திருந்தது.

ஞானத்தின் சைக்கிள் கிராஸ்கட் ரோடில், அம்பாகப் பாய்ந்தது. அவனது சைக்கிள் மணி, பூஜை மணியைப் போலத் தொடர்ந்து ஒலித்தது.

சைக்கிள் லட்சுமி காம்ப்ளக்ஸின் முன்னே அதே வேகத்தோடு வந்து, தார் ரோடின் மேல்தோல் கிழிய 'சடன் பிரேக்' போட்டு நின்றது.

இரகசியம்

கேரியரிலிருந்து குதித்த பரதன் காம்ப்ளக்ஸின் வாயிலை நோக்கி ஓடினான். ஞானம் சைக்கிளை நிறுத்த ஒரு இடம் தேடினான்.

லட்சுமி காம்ப்ளக்ஸின் வாயிலில், அந்தப் பிற்பகல் நேரத்தில் கூட்டம் அதிகம் இல்லை.

பரதன் வாயிலின் அருகே வரும்போதே, விக்டர் தன்னை நோக்கி ஓடி வருவான் என்று எதிர்பார்த்து ஏமாந்தான்.

விக்டர் அவனை நோக்கி ஓடி வரவில்லை.

விக்டர் அந்த வாயிலின் அருகேயும் காட்சி தரவில்லை.

விக்டர் எங்கே?

பரதனின் கண்கள் தேடின.

அதற்குள் சைக்கிளை ஒரு பக்கம் நிறுத்தி விட்டு, ஞானமும் அங்கு வந்தான்.

''என்ன பரதா?''

''நம்மை இங்கே வரச் சொன்ன விக்டரைக் காணோம்?''

''ஒருவேளை, காம்ப்ளக்ஸுக்குள்ளே ஏதாவது ஒரு கடையில் இருக்கலாம். உள்ளே போய்ப் பார்ப்போமா?''

''பார்க்கத்தான் வேண்டும். ஆனால் ரெண்டு பேரும் உள்ளே போகக்கூடாது. நீ மட்டும் உள்ளே போய்ப் பார். நான் இங்கேயே நிற்கிறேன். விக்டர் இங்கே வந்தாலும் வரலாம்.''

''சரி.''

ஞானம் காம்ப்ளக்ஸினுள் நுழைந்தான்.



பரதன், அங்கேயே நின்று, விக்டர் வருகிறானா என்று நாற்புறமும் பார்த்தான்.

சுமார் பத்து நிமிடங்கள் சென்றன.

ஞானம் திரும்பி வந்தான்.

''உள்ளே மாடி உட்பட எல்லா இடத்திலேயும் தேடிட்டேன். விக்டரும் இல்லை. அந்த அதிசயப் புருவத்தினரும் இல்லை.''

''நம்மை இங்கே வரச் சொன்ன விக்டர் எங்கே போயிருப்பான்?''

''அதிசயப் புருவத்தினர் ஒரு வேளை இந்த இடத்தை விட்டுப் போயிருக்கலாம். அவர்களைப் பின் தொடர்ந்து விக்டரும் போயிருப்பானோ? பரதா, அக்கம் பக்கத்தில் உள்ள கடைகளில் பார்க்கலாமா? நீ கிழக்கே போய்ப் பார். நான் மேற்கே போய்ப் பார்க்கிறேன்.''



''ஞானம், நீ மட்டும் போய்ப் பார். விக்டர் சொன்ன இடத்தில் நம்மில் ஒருவர் இருக்க வேண்டும். அவன் நம்மைத் தேடி இங்கே வருவான்னு நினைக்கிறேன். அதனால் நான் இங்கேயே நிற்கிறேன்.''

பரதன் சொன்னதும் ஞானம் அங்கிருந்து புறப்பட நினைத்தான். அப்போது அங்கே அவர்கள் மீது மோதுவது போல ஒரு சைக்கிள் வந்து நின்றது. சைக்கிளில் அந்தோணி சாமி இருந்தான். அவன் சைக்கிளை விட்டு இறங்காமல், ஒரு காலை நிலத்தில் ஊன்றி நின்றவாறு பேசினான்.

''பரதா, கொஞ்ச நேரம் முன்னால் போனிலே என்னை யாரோ அழைப்பதாக பியூன் சொன்னான். கணக்காசிரியர் சலித்துக் கொண்டே அனுமதி கொடுத்தார். போய்ப் பேசினேன். விக்டர் என்னோடு பேசினான். அவன் இப்போ அசோகா பிளாசா வாசலில் நிற்கிறானாம். உன்னை அங்கே வரச் சொன்னான்.''

அந்தோணி சாமி சொல்லி முடித்த விநாடியே, பரதன் அவனது சைக்கிளின் பின்னே ஏறியபடி, ''அசோகா பிளாசா போ! ஞானம் அங்கே வா!'' என்று இரண்டு ஆணைகள் பிறப்பித்தான். தளபதியின் ஆணைக்குக் கட்டுப்படும் ராணுவ வீரர் போல இருவரும் செயல்பட்டனர். அந்தோணிசாமி சைக்கிளை அசோகா பிளாசாவுக்குச் செலுத்த, ஞானம் தனது சைக்கிளை நாடி ஓடினான்.

அந்தோணி சாமி நல்ல பலசாலி. அதனால் வேகமாகச் சைக்கிளை மிதித்தான். லட்சுமி காம்ப்ளக்ஸின் கிழக்கே உள்ள தெருவில் சைக்கிளைச் செலுத்தி, அப்சரா தியேட்டரின் பின் வாசலை அடைந்தான். அங்கே தியேட்டரின் பின் வாசற்கதவு திறந்திருந்தது. அந்தோணி அதன் வழியே சைக்கிளை விரட்டினான்.

அப்சரா தியேட்டரின் முன்புறம் தான் அசோகா பிளாசா. அந்தோணிசாமியின் சைக்கிள் பிளாசாவின் முன் வாசலை அடையும் போதே, அதை நோக்கி ஓடி வந்தான், விக்டர்.

அந்தோணி சைக்கிளை நிறுத்தினான். பரதன் கேரியரிலிருந்து கீழே குதித்தான். அவனிடம், ''பரதா, அதோ பார்'' என்று சுட்டு விரலை வடக்கு நோக்கி நீட்டினான், விக்டர்.

பரதனின் பார்வை சுட்டு விரலைத் தொட்டு, நேர் கோட்டில் சென்று, பிளாசாவின் வடக்கு முனையில் நின்ற உருவத்தில் மோதியது.

அந்த உருவம், புருவம் இல்லாத மோனலிசா உருவம். முன்பு ஒருநாள்



ஜி.சி.டி. வளாகத்தில் அவன் பார்த்த இரண்டு அதிசயப் புருவ உருவங்களில் ஒன்று.

பரதன் அவனைப் பார்த்தபோதே விக்டர் அவனிடம் மெல்லிய குரலில் அவனைக் கண்டுபிடித்த கதையைக் கூறினான்.

ஒரு நாளுக்கு இருவர் வீதம் பள்ளிக்குச் செல்லாமல் விடுமுறை எடுத்துக் கொண்டு அதிசயப் புருவத்தினரைத் தேட வேண்டும் என்று மாணவர் கூட்டணி முடிவு செய்ததல்லவா? அதன்படி அன்று விடுமுறை எடுக்க வேண்டிய இருவரில் ஒருவன், விக்டர். மற்றவன் சுகுமார்.

சுகுமாரின் வீடு கவுண்டம்பாளையத்திலிருந்தது. அதனால், கவுண்டம் பாளையம் முதல் சாயிபாபா கோயில் வரை உள்ள பகுதியில் தேடுவது அவன் பொறுப்பு. விக்டரின் வீடு சிவானந்தா காலனியிலிருந்தது. அதனால் அந்தக் காலனி முதல் சாந்திபுரம் முடியத் தேடுவது அவன் பொறுப்பு.

சுகுமார் காலை எட்டு மணிக்கே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். வீட்டிலிருந்து காந்திபுரம் வரை



ஒருமுறை நிதானமாக நடந்து அலசி னான். அதிசயப் புருவத்தினர் கண்ணில் படவில்லை. நடுப் பகலில் வீட்டுக்குச் சென்று சாப்பிட்டான். பிறகு ஓய்வு எடுத் துக் கொண்டானா? அதுதான் இல்லை. உடனே புறப்பட்டு விட்டான்.

கிராங்கட் ரோடின் மேற்கு முனையி லிருந்து மீண்டும் தேடத் தொடங்கி னான். பிற்பகல் சுமார் மூன்றிருக்கும். அப்போது, லட்சுமி காம்ப்ளக்ஸின் அருகே, ஒரு கடையில் தொலைபேசி யில் அந்த அதிசயப் புருவத்தினரில் ஒரு வன் பேச, மற்றொருவன் அருகே நின்றிருந்ததைக் கண்டான் விக்டர். அவன் அவர்களை நெருங்கும் முன், அந்த இருவரும் அங்கிருந்து லட்சுமி காம்ப்ளக்சின் வாயிலில் நுழைந்து உள்ளே சென்றனர்.

அப்போதுதான் விக்டர் பரதனுக்கு போன் செய்தான்.

பின்பு லட்சுமி காம்ப்ளக்சின் இரண்டு வாயில்களையும் பார்க்கும்படி ஓரிடத்தில் விக்டர் நின்று கொண்டான். பத்து நிமிடத்தில் இருவரும் வெளிவந் தனர். விக்டர் அவர்களைப் பின் தொடர்ந்தான். இருவரும் அசோகா பிளாசாவை அடைந்ததும், விக்டர்கள் அந்தோணிக்குப் போன் செய்தான்.



பரதன் வருவதற்குச் சில நொடிகள் முன்பே இருவரில் ஒருவன் புருவம் இல்லா தவன் வெளியே வந்தான். இன்னொருவன் பிளாசாவுக் குள் இருப்பான்.

இவ்வளவு செய்திகளை யும் தந்தியின் வேகத்தோடும் சுருக்கத்தோடும் சொல்லி முடித்தான், விக்டர். அதற் குள் ஞானமும் சைக்கிளில் அங்கு வந்து விட்டான்.

பரதன் புருவமில்லாத வனை உற்றுப் பார்த்தான்.

இவன் கள்ளநோட்டுக் கும்பலுடன் பலூன் தொடர் புடையவனா?

நாம் கண்டெடுத்த நூறு ரூபாய் நோட்டு இவனுடை யதுதானா?

பரதன் யோசித்தான்.

அதே சமயம் புருவமற் றவன் ஒரு ஆட்டோவை அழைத்துப் பேசினான். ஆட்டோகாரன் அவன் அழைத்த இடத்துக்குச் செல்ல விரும்பவில்லை போலும். ஆட்டோ போய் விட்டது. அவன் அங்கேயே நின்றான்.

''இவன் இன்னொரு ஆட்டோ கிடைத்தால் போய் விடுவான். அதற்குள் இவன்தான் ஒரு பக்கம் அச்சான நூறு ரூபாயைப் போட்டவனா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். உடனே தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு என்ன வழி?''

பரதன் யோசித்தான்.

உடனே அவன் மூளையில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

இவனை முதலில் ஆட்டோவில் ஏற விடாமல் கீழே தள்ளி அதிர்ச்சியடையச் செய்ய வேண்டும். பிறகு உண்மையை அறிய வேண்டும்.

பனைமரம் போல நிற்கும் இந்தப் பலசாலியை எப்படி வீழ்த்துவது?

பரதன் தன்னைத் தானே கேட்டுக் கொண்டதும் அவன் குருநாதர் வெள்ளியங்கிரியின் குரல் காதில் ஒலித்தது :

''பரதா, ஒரு பொருளை வீழ்த்த, வெற்றி கொள்ள உருவம் முக்கியம் இல்லை. உயரம் முக்கியம் இல்லை. வேகம் முக்கியம். வேகம் அதிகமானால், வலிமை அதிகமாகும். எதிரே இருக்கும் சுவரை உதைத்துத் தள்ள வேண்டுமா? அதற்கு பயில்வான் தேவையில்லை. பரதன் போதும். பரதனில் பாதி உயரம் பலம்கொண்ட ஒரு பாலகன் போதும். தேவையான வேகத்தோடு ஒரு பாலகன் மோதினாலும் சுவர் இடிந்து விழும். பரதா, with proper velocity even a spiders web will cut an oak என்பது அறவுரையல்ல, அறிவியல் உரை! சிலந்தியின் நூலிழையை தேவையான வேகத்தில் செலுத்தினால் அது ஓக் மரத்தையும் வெட்டி வீழ்த்தும்! ஓக் என்பது நம் தேக்கு போல் உரமான மரம்! பரதா, நீ எதை வீழ்த்த நினைக்கிறாயோ அதை வீழ்த்தலாம். அதற்குத் தேவை, தேக பலமல்ல... வேக பலம்!''

பரதன் உடனே பின்னோக்கி ஓடினான். அப்சரா தியேட்டரின் வாயிலைக் கடந்து, அதனருகே இருந்த கோயிலைக் கடந்து ஓடினான். போதுமான தூரம் வந்து விட்டோம் என்று நினைத்ததும் நின்றான். திரும்பினான்.


வேக பலத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று குருநாதர் தனக்குப் பலமுறை அளித்த பயிற்சியை நினைவுபடுத்திக் கொண்டே, புருவமற்ற உருவத்தை இலக்காகக் கொண்டு அதை நோக்கி ஓடினான்.

கால்கள் தரையில் முழுமையாய்ப் பதியாமல், பட்டதும் எழும்பும் பந்து போலத் தரையைத் தொட்டதும் எழும்பின; அவன் முன்னே போகிறானா, தரை பின்னே போகிறதா என்று அறிய முடியாத வேகத்தில், ரிலே ரேஸின் கடைசிப் பகுதியில் நம் பி.டி. உஷா ஓடும் காற்று வேகத்தில் ஓடினான். ஓட ஓட, வேகம் கூடக் கூட, பரதன் என்ற அந்த உருவம் ஒரு ஏவுகணையாகச் செயல்பட்டது.

''அதோ அந்தப் புருவமில்லாதான்!
அருகே ஒரு ஆட்டோ நிற்கிறதே!
அதில் அவனை ஏற விடக் கூடாது!
கூடாது! கூடாது! கூடாது''


பரதன் மூச்சை இழுத்துப் பிடித்து ஓங்கார ஒலியெழுப்பியவாறு, அந்தப் புருவமற்ற உருவத்தின் மீது மோதப் பாய்ந்தான்!

(தொடரும்)




'' 'பாரதியாரு'க்குப் பிடிக்காத 'பூ' எது?''
'' 'ஜாதி' மல்லிப் 'பூ'தான்!''
- குடந்தை சுவீட் ரவி



ஒரு நாள் அரசன்
கதை: ஆனந்தி * படம்; செல்லம்
அபு ஹுசன் பொறுப்பற்ற பிள்ளையாக இருந்தான். அவன் தந்தை இறந்த பிறகு...
அபு! உன் தந்தை பாக்தாதின் பெரிய வியாபாரியாக விளங்கினார்....
...சொத்துக்களை நீ சரியாகக் கவனிக்கா விட்டால் நஷ்டம் வரும்...
எல்லாம் எனக்குத் தெரியும்!
அபுஹுஸைனின் அலட்சியப் போக்கு கவலை உண்டாக்க...
அபு! இந்தப் பெட்டியில் உள்ள செல்வங்கள் எல்லாம் உன்னுடையது. பாக்கியை நான் நிர்வகிக்கிறேன்
சரி!
சந்தோஷமாகப் பெற்றுக் கொண்ட அபுவைச் சுற்றி நண்பர்கள்...
நீங்க தர்மப்பிரபு அல்லவா!
அரசருக்குச் சமமாக அள்ளிக் கொடுக்கிறவராயிற்றே!
ஓர் ஆண்டில் அபு தன் செல்வங்களைக் கரைத்து விட்டான்.
அபு அவசரமாக நூறு பொற்காசுகள் வேண்டும்...
என்னிடம் ஒற்றைக் காசு கூட இல்லை!


கொடுக்க இஷ்டமில்லை என்றால் சொல் லேன். ஏன் பொய் பேசணும்
கஞ்சப் பிரபு... எப்பக் கேட்டா லும் கை விரிப் பான்! வா போகலாம்.
நண்பர்கள் அபுஹஸனைத் துறந்தனர்...
ஹூம், எல்லாம் பணம் தான். காசு இல்லை என்றதும் யாரும் திரும்பிக் கூடப் பார்க்கலையே!
அம்மா! நீ சொன்னபடி கேட்காமல் ஏமாந்து போனேன்
வருத்தப் படாதே; என் பங்கு செல்வம் அப்படியே இருக்கே; அதை மூலதனமாகக் கொண்டு வியாபாரம் செய்.
அபுஹசன் நல்ல பெயர் எடுத்தான்
அபு கெட்டிக்கார வியாபாரி...
நாணயஸ்தன் கூட
அபு பழைய நண்பர்களை நெருங்கவிட வில்லை.
அம்மா, நான் இனிமேல் தினம் ஒரு புதிய மனிதரை வீட்டுக்கு அழைத்து வருவேன். மறுமுறை அவர் முகத்தை ஏறிட்டும் பார்க்க மாட்டேன்.





அன்று மாலையில்...
ஐயா! நீங்க பாக்தாத்துக்குப் புதியவரா?
ஆமாம்
என் வீட்டுக்கு வந்து உணவு அருந்திப் போகணும்
இப்படி ஒரு பிரமாத விருந்து கிடைக்கும்னு நான் கனவுலே கூட நினைக்கலை. ரொம்ப நன்றி...
என் வீட்டுக்கு அதிதியா வந்தீங்க; நான் தான் நன்றி சொல்லணும்
அபு இவ்வாறே தினமும் விருந்தோம்பல் செய்தான்
இன்றோடு ஒரு வருஷம் ஆகிறது...
ஐயா, நீங்க ஊருக்குப் புதுசா? எங்க வீட்டுக்கு வந்து விருந்து சாப்பிடணும்...
மாறுவேடத்தில் நகர்வலம் வந்த பாக்தாத் அரசன்...
என்னுடன் இன்னும் நாலு பேர் இருக்காங்களே...
ரொம்ப சந்தோஷம். அவங்களும் வரட்டும்
விருந்துண்ட மன்னன் மகிழ்ந்து...
அபு! இனி நாம் நெருங்கிய நண்பர்கள்; அடிக்கடி சந்திப்போம்
அது மட்டும் முடியாது!
ஏன்? ஏன்?



அபு தன் கதை முழுதும் கூற...
நீ மேற்கொண்டுள்ள விரதம் நியாயமானதுதான்... உனக்கு வேறு எந்த ஆசையும் இல்லையா?...
இருக்கு...
...என்னை ஏமாற்றியவர்களையெல்லாம் அரசர் தண்டிக்க வேண்டும்!
இந்த ஆசை நிறைவேறணும்னா நீயே பாக்தாத் அரசனானால்தான் முடியும்
பேசியபடியே மன்னர் தமது மோதிரத்திலிருந்து அபுவின் பழரசக் கோப்பையில்...
உண்மைதான்! ஆனால் அது எங்கே நடக்கப் போகிறது... வாரும்...
மயக்க மருந்து வேலை செய்ய... மன்னர் தம்முடன் வந்தவர்களிடம்...
இவனை நமது அரண்மனைக்குக் கொண்டு செல்லுங்கள்
அரண்மனையில்...
இவனை என் கட்டிலில் படுக்க வையுங்கள். நாளை ஒரு நாள் மட்டும் இவனை அரசனாகவே நடத்துங்கள்!
அப்படியே!


மறுநாள் காலை...
மாமன்னரே! துயிலெழும் நேரமாகிவிட்டது...
இன்றைய தங்களது முக்கிய அலுவல்களைப் படிக்கவா...
தடபுடலான காலை உணவு...
நேற்று நான் அபுஹஸன்; இன்று பாக்தாத் மன்னன். என்ன மாயாஜாலம்! ஒரு வேளை நேற்று இரவு என்னுடன் விருந்துண்டவன் மாந்திரவாதியா?
மந்திரி வர...
அமைச்சரே! நிஜமாகவே நான்...
என்ன சந்தேகம்? மன்னர் தான்! அரசே, ஏதும் கட்டளை உண்டா?
அபுஹஸனுக்குத் தன்னை ஏமாற்றியவர்களின் நினைவு வர
முஸ்தபா, அஹமத் மற்றும் அவர்களுடைய பத்து நண்பர்களுக்கும் ஒரு நாள் சிறைவாசம்; ஆளுக்கு நூறு சவுக்கடி! விலாசம் தருகிறேன்...
...அப்புறம், அபுஹஸன் என்பவனுடைய தாயாருக்கு ஆயிரம் பொற்காசுகள் அனுப்புங்கள்!
அப்படியே ஆகட்டும்.


அன்றிரவு...
மன்னவா, இரவு படுக்கப் போகுமுன் பால் அருந்துங்கள்.
பணிப்பெண் தந்த பாலை அருந்தியதும் மயங்கி விட்டான் அபு... மன்னர் தோன்றி...
இவனை, இவன் வீட்டிலேயே கொண்டு போய்ப் போட்டு விடுங்கள்!
காலை...
நான் எங்கே இருக்கிறேன்...? யார் அங்கே! என்னைத் துயில் எழுப்ப ஏன் யாரும் வரலை?
என்னடா, உளறுகிறாய்!
அம்மா! நான் யார் தெரியுமா? பாக்தாத் மன்னன்!
போதும் பிதற்றாதே. காவலர் காதில் விழுந்தால் சிறைவாசம்தான்!
இதோ பார் அபு! நேற்று நமது மன்னர் எனக்கு ஆயிரம் பொற்காசுகள் அனுப்பினார்....
தெரியும். நான் தானே அனுப்பினேன்! என் விரோதிகளை யெல்லாம் கூட சிறைப்படுத்தச் சொன்னேனே!



அபுஹஸனின் தாய் பயந்து ஓடினாள்...
ஐயோ, காப்பாத்துங்க! என் மகனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதே!
அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் வந்து அபுஹஸனைக் கட்டிப் போட்டனர்.
பாக்தாத் மன்னரைக் கட்டிப்போட என்ன தைரியம்! உங்கள் ஒவ்வொருவருக்கும் நூறு சவுக்கடி கொடுப்பேன்!
சரியான பைத்தியம் தான்!
நேற்று வரை நல்லாத் தானே இருந்தான்!
பாவம் நல்ல பெயரெடுத்தான். இப்படியாகிவிட்டானே!
ஒரே நாளில்...
அம்மா நான் அபுஹஸன்தான். கடைக்குப் போறேன். வியாபாரம் படுத்துவிடும்.
அட என் கண்ணே! குணமடைஞ்சுட்டியா!
பாக்தாத் மன்னர் மீண்டும் மாறுவேடத்தில்...
என்னப்பா அபுஹஸன், நல்லா இருக்கியா?
கிட்ட வராதீங்க!
ஏன்?



போதும் போதும்! ராஜாவாக இருந்ததும் போதும்; கட்டிப் போடப் பட்டுத் தவிச்சதும் போதும்! எல்லாம் உங்களால் வந்த வினைதான்.
அபு! உன் விரோதிகளைப் பழிவாங்க ஒரு சந்தர்ப்பம் தந்தேனே!
ஆ! அப்படின்னா... நீங்க...
பாக்தாத் மன்னன்தான்!
அபு ஹஸன் மன்னருக்கு வேண்டியவனாகிவிட்டான். ஒரு நாள், அரசி ஜுபைதா...
அபு! நீ கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.
வேண்டாம், வேண்டாம்! என் தாயும் நானும் நிம்மதியாய் இருக்கிறோம். அதை ஏன் கெடுக்கறீங்க?
வீட்டுக்கு மருமகள் வந்தால் அமைதி குலைஞ்சுடுமா, என்ன? அரசியின் பிரியமான தோழி நூர்ன்னிஸாவை நீ கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும். இது என் கட்டளை!



திருமணம் முடிந்து அரண்மனை வாசம். அபுஹஸனின் ஊதாரித்தனம் மறுபடி தலை தூக்கியது...
நூரின்னிஸா! இந்தா மரகத மாலை! அரசியிடம் கூட இவ்வளவு உயர்ந்த நகை கிடையாது!
சில காலம் சென்று...
செலவுக்கு ஒரு பைசா கூட இல்லை; என்ன செய்வது?
அரசரைக் கேளுங்களேன்
சே! அரசரை அழைத்து விருந்து உபசாரம் செய்தவன் நான். அவரிடம் யாசிப்பதா?
அப்ப ஒரு யுக்தி செய்வோம்...
ஒரு நாடகம் அரங்கேறியது...
ஐயோ! என் கணவர் செத்துப் போய்விட்டாரே. நான் என்ன பண்ணுவேன்...
அரசி நிஜமென்று நம்பி ஒரு சேடியை அழைத்து...
ஜெனோபியா, இவளை ஆறுதல் கூறி வீட்டுக்கு அழைத்துப் போ... நூருன்னிஸா! இந்தா, இதில் ஐந்நூறு பொற்காசுகள் இருக்கு... பட்டுத் துணி...



இதற்கிடையில்...
அரசே! நூரின்னிஸா என்னை மோசம் பண்ணிட்டாளே! செத்தே போயிட்டாளே! ஐயோ!
அன்பான கணவன்-மனைவி நீங்க. உனக்கு இப்படி ஒரு துயரமா? பாவம்! இந்தா பணம். மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனி.
வீட்டில்...
பணமும் கிடைச்சுது; நீங்களும் இருக்கீங்க; எனக்கு என்ன குறை?
இருந்தாலும் ஜாக்கிரதையா இருக்கணும்!
அரண்மனையில்...
அபுஹஸன் இறந்துவிட்டா-னாமே! பாவம்!...
உளறாதே! நூருன்னிஸா-தான் செத்துப் போனது!
வாக்குவாதம் தடிக்க...
நான் வேணா கிழவியைப் பார்த்து வரச் சொல்றேன். அப்பவாவது நம்புவீங்க இல்லையா!


கிழவி திரும்பி வந்து...
பாவம், நூருன்னிஸா! இன்னும் கதறிக் கொண்டுதான் இருக்கா. அபுஹஸன் பட்டுத் துணியில் மூடப்பட்டு...
என்னால் நம்ப முடியலை... மெஸ்ரூர்... உடனே போய்ப் பார்த்து வா!
மெஸ்ரூர் திரும்பி வந்து...
அரசே! அபுஹஸன் கதறி அழுது கொண்டிருக்கிறான். அழகிய மனைவியின் பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கிறான்.
அரசி ஒப்புக்கொள்ள மறுத்து...
பிதற்றல்!
அப்படின்னா நாமே நேரில் போய்ப் பார்ப்போம், வா.
அரசன், அரசி இருவரும் வருவதைப் பார்த்த அபுஹஸன்...
மோசம் போனோம்!
சீக்கிரம்! இரண்டு பேருமே செத்து விட்டது போல அசையாமல் படுத்திருப்போம்!


உள்ளே வந்த அரசனும் அரசியும்...
ஐயய்யோ! கணவனை இழந்த துக்கம் தாளாமல் நூருன்னிஸா வும் செத்துட்டா!
அடகடே! மனைவி இறந்த துக்கத்தில் அபுஹஸன் மூச்சும் நின்னு விட்டதுன்னு சொல்லு!
இல்லை! நான் தந்த பணப்பை கூட நூருன்னிஸா பக்கத்தில் இருக்கே! அவ முதல்ல செத்திருந்தா என்னைக் காண எப்படி வந்திருப்பா?
இது என்ன சங்கடம்! இவர்களில் யார் முதலில் இறந்தது என்பதை யாராவது நிரூபித்தால், அவர்களுக்கு ஆயிரம் பொற்காசுகள் தருவேன்!
அரசே! நான்தான் முதலில் இறந்தேன்! பணத்தை என்னிடம் கொடுங்கள்!
திகைத்த அரசனும் அரசியும் பிறகு சிரித்தார்கள்.
இனிமேலாவது ஒட்டும் கட்டுமாய்க் குடித்தனம் பண்ணுங்க.
அபு! எங்களுக்குள் சண்டை மூட்டி விட்டாயே?
என்னை ஒரு நாள் ராஜா-வாக்கி, பைத்தியமாக அடித்தீர்களே!



உருப்படா வெட்டி!

கமலவேலன்

காட்சி - 1

(அண்ணாமலையின் வீடு. பகல் நேரம். அண்ணாமலை, சிவகாமி, சந்திரன், பாஸ்கரன்.)

அண்ணா : டேய்... சந்திரா! நம்பளை மாதிரி நடுத்தர வர்க்கத்தினருக்கு படிப்புதான் நாடித்துடிப்பு. அடுத்த வருஷம் நீ பத்தாவது... பத்தாவதுல நானூருக்கு மேல வாங்கணும்னா... இப்பவே கவனமாப் படிக்கணும்.

சந்திரன் : சரிப்பா.... நான் நல்லாப் படிக்கிறேன்.

அண்ணா : *(எரிச்சலுடன்)* வாய் தான் சரின்னு சொல்லுது. உன் கை சைக்கிள் டைனமோவைத் திருகிக்கிட்டிருக்கு.... நா... சொல்றது எதுவும் உம் மூளையில ஏறினதாத் தெரியலே....

சந்திரன் : உங்க சைக்கிள் 'லைட்'-டு எரியலேன்னு அம்மாதான் சொன்னாங்க. அதான் டைனமோவை கழட்டிப் பார்த்துக்கிட்டு இருக்கேன்....

அண்ணா : உன் மூளையைக் கழட்டிப் பாக்கணும். என் வாழ்க்கைதான் தூசியிலும்.... துரும்பிலேயும் கழிஞ்சுகட்டுது. இந்தப் பலசரக்கு வியாபாரம் என்னோட போயிடணும். நீயும்... உன் தம்பி பாஸ்கரனும் நல்லாப் படிச்சு டாக்டர், இஞ்சினியர்னு பெரிய உத்தியோகத்துல வரணுங்கறது என் நினைப்பு.

சிவகாமி : இந்தாங்க. இன்னும் நீங்க குளிக்கலே... சாப்பிடலே அப்புறமா... கடைக்கு நேரமாச்சுன்னு சாமியாடுவீங்க.

சந்திரன் : அப்பா. இதோ பார்த்தீங்களா காயில் விட்டுருச்சு? புதுகாயில கத்தி நான் டைனமோவை மாட்டிட்டேன். இனிமே லைட்டு நல்லா எரியும்.



"முதியோர் கல்வில என்ன தாத்தா சொல்லிக் கொடுத்தாங்க?"

"'இளமையில் கல்' - னு சொல்லிக் கொடுத் தாங்க...!"

- சீர்காழி வி. ரேவதி.

அண்ணா : என் வயிறு எரியுதுடா... உருப்படா வெட்டி போடா.... அதைத் தூக்கி எறிஞ்சுட்டு படிக்கப் போடா....

காட்சி : 2

(நடுத்தெரு. அண்ணாமலை, பாலகுரு)

பாலகுரு : நம்ம கடைக்குத்தான் போறேங்க.

அண்ணா : அப்படியா...! வாங்க போவோம். என்ன விசேஷம் வீட்டுல? சீனி.. முந்திரிப்பருப்புக்கு 'லிஸ்ட்' தர் றீங்க....

பாலகுரு : என் பையன் மகேந்திர னுக்கு... 'மெரிட்டுல' மெடிகல் சீட் கிடைச்சருக்கு....

அண்ணா : அடேடே! ரொம்ப சந் தோஷம்.

பாலகுரு : அதனால ஸ்வீட் செய்து எல்லாருக்கும் கொடுக்கணும்னு அவங்க அம்மாவுக்கு ஆசை.

அண்ணா : உங்க பையன் தங்கக் கட்டி சார்... என் மூத்த பையன் சுத்த மட்டி சார்!

பாலகுரு : சந்திரனையா மட்டிங் குறீங்க...? அவன் படுகட்டி சார்.

அண்ணா : ரெண்டாவது பையன் பாஸ்கர்தான் சார். கெட்டிக்காரன். நீங்களே... பாருங்களேன்...

காட்சி : 3

(அண்ணாமலையின் வீடு. இரவு நேரம். அண்ணாமலை, சிவகாமி, சந்திரன், பாஸ்கர்.)

சிவகாமி : சந்திரா... டேய் சந்திரா

சந்திரன் : என்னம்மா....?

சிவகாமி : இந்த ஸ்டவ் எரியவே மாட் டேங்குது. நா... எப்படித்தான் சமைக்க... குழம்பு வைக்கப் போறேனோ தெரி யலே. பேசாம விறகு அடுப்பைப் பத்த வைக்க வேண்டியதுதான்.

சந்திரன் : அம்மா... அந்த ஸ்டவ்வ இப்படிக் கொடுங்க... என்ன ரிப் பேர்ன்னு. நான் பாக்கறேன். டேய் தம்பி! நீ போயி ஸ்குரு டிரைவரை எடுத் துட்டு வா.

பாஸ் : சரி அண்ணா. *(உள்ளே சென்று எடுத்து வருதல்.)*

சந்திரன் : ஏண்டா... ஸ்குரு டிரை வரா இது? இது ஸ்பானர்டா?

பாஸ் : அடேடே. தெரியாம எடுத் துட்டு வந்துட்டேன்.

சந்திரன் : ஸ்குரு டிரைவர் எது ஸ்பானர் எதுன்னு கூட தெரியலே... இவன் 'பர்ஸ்ட் ராங்க்'!

சிவகாமி : இவனுக்கு அதெல்லாம் ஒண்ணும் தெரியாதடா... நீயே பாத்து எடுத்துட்டு வாடா....

சந்திரன் : *(ஸ்டவை இப்படி அப் படி பார்த்து விட்டு)* வால்வுல தூசி அடைச்சிருக்கு. நட்டு வேற லூசா யிருக்கு.

(எல்லாவற்றையும் சரி செய்து அம்மா கையில் கொடுக்கிறான்.)

பாஸ் : அண்ணே... இதெல்லாம் எப்படி அண்ணே கத்துக்கிட்டே...!

சிவகாமி : எனக்கும் அதுதான் ஆச்சர்யமாயிருக்கு.

சந்திரன் : இதுல என்னம்மா ஆச் சர்யம் இருக்கு? போன வாரம் என் ஃப்ரண்டு ஜோசப் வீட்டுக்கு போயிருந் தேன். அன்னிக்கு அவங்க வீட்டுல ஸ்டவ் ரிப்பேர் பண்றவன் ரிப்பேர் பண்ணிக்கிட்டிருந்தான். அதை நல்லாக்

கவனிச்சேன். அவ்வளவுதான்... கண் பார்த்தா கை செய்யணும்....

சிவகாமி : இதே மாதிரி படிப்புலயும் கவனமாயிருந்தா உங்க அப்பா ரொம்ப சந்தோஷப்படுவார்டா....

பாஸ் : ஆமா... அண்ணா....

சந்திரன் : டேய்... நானும் முட்டி முட்டி படிக்கப் பார்க்கறேன். பாஸ் மார்க்கைத்தாண்ட முடியலேயே...

சிவகாமி : ரெண்டு பேரும் படிச்சுக்கிட்டு இருங்க... சமையல் ரெடியானதும் கூப்பிடறேன்.

(இரவு பத்து மணி அளவில் அண்ணாமலை வருகிறார்.)

அண்ணா : சிவகாமி : ரெண்டு பேரும் படிச்சாங்களா?

சிவகாமி : சாப்பிட்டாளுங்களான்னு ஒரு நாள் கூடக் கேட்க மாட்டீங்களே!

அண்ணா : படிப்புதான் நமக்கு சோறு போடும்.

சிவகாமி : இன்னிக்கு நமக்கு சோறு போட்டவன் சந்திரன் தாங்க. நம்ப வீட்டு ஸ்டவ் திடீர்னு ரிப்பேர் ஆயிடுச்சு. எனக்கு கையும் ஓடலே காலும் ஓடலே. சந்திரன்தான் ஒரு நொடியிலே ரிப்பேர் பண்ணிக் கொடுத்தான். அப்புறம்தான் சமையலே முடிஞ்சுது. ரிப்பேர் செலவும் மிச்சம்!

அண்ணா : என் தலையெழுத்து. நா.. அவனை 'மெடிகல்', 'இன்ஜினியரிங்' படிக்க வைக்கணும்னு ஆசைப்படறேன். அவன் என்னடான்னா... காயலான் கடை வைக்கத்தான் லாயக்காவான்... போலிருக்கு....! சிவகாமி -உனக்கு ஒரு செய்தி தெரியுமா! பாலகுரு சார் பையனுக்கு மெடிக்கல்ல இடம் கிடைச்சுட்டுதாம். பிள்ளைங்கன்னா அப்படியிருக்கணும்.

சிவகாமி : ஒன்பதாவது தானே படிக்கிறான்... போகப் போக பொறுப்பாய் படிப்பான். புலம்பாதீங்க. கை கால் அலம்பிட்டு சாப்பிட வாங்க.

அண்ணா : சாப்பிடறது இருக்கட்டும். காலாண்டுத் தேர்வு புரோக்கிரஸ் ரிப்போர்ட்ல பாஸ்கர் கையெழுத்து வாங்கிட்டான். சந்திரன் பயல் இன்னும் காட்டவேயில்லையே!

சிவகாமி : *(தடுமாற்றத்துடன்)* நான்தாங்க... உங்களண்ட காட்டாம



வச்சிருக்கேன். அவன் கணக்குலயும், சயின்ஸ்லயும் ஃபெயில் ஆயிட்டான்.

அண்ணா : *(கடுமையாக)* என்னது கணக்குலயும், சயின்ஸ்லையும் ஃபெயில் ஆயிட்டானா....? அந்தத் தறுதலையை இப்படியே விட்டுடக் கூடாது. எங்கே அவன்?...

(உறங்கிக் கொண்டிருக்கும் சந்திரனை பிரம்பால் நன்கு அடித்து விடுகிறார். அவன் கதறி அழுகிறான்.)

காட்சி : 4

(அண்ணாமலை வீடு. அண்ணாமலை, பாலகுரு.)

அண்ணா : வாங்க பாலகுரு சார்! என்ன சார் கையில பெரிய பார்சல்...?

பாலகுரு : எல்லாம் நம்ம சந்திரனுக்கு 'ப்ரசன்ட்' பண்ணத்தான்.

அண்ணா : *(வெறுப்புடன்)* ரெண்டு பாடத்துல ஃபெயிலான... அந்தச் சோம்பேறிக்கு எதுக்கு 'ப்ரசன்ட்'? சுத்தக் களிமண் சார் அவன்.

பாலகுரு : அந்தக் களிமண் தான் சார் என்னோட வாழ்க்கையை காப்பாத்தியிருக்கு.

அண்ணா : என்ன சொல்றீங்க நீங்க. எனக்கு ஒண்ணும் புரியல்லே!

பாலகுரு : புரியும் படியாத் தெளிவாச் சொல்றேன். நேத்துக் காலையில... ஸ்கூட்டர்ல ஆபிஸ் போய்க்கிட்டிருந்தேன். திடீர்னு 'ஸ்டக்' ஆகி ஸ்கூட்டர் நின்னுடுச்சு... என்னகோளாறுன்னு... என்னால கண்டு பிடிக்க முடியலே... பக்கத்துல எந்த 'வொர்க் ஷாப்'பும் கிடையாது....

அண்ணா : ஐய்யயோ.... அப்புறம் தள்ளிக்கிட்டேப் போனீங்களா...?


பாலகுரு : வண்டியை தள்ளவும் முடியலே. நேத்திக்குன்னு மேலதிகாரிகள் பார்வையிட வர்றதா சொல்லியிருந்தாங்க... பதவி உயர்வுக்கு என் பெயரை சிபாரிசு செய்திருந்தாரு... என்னோட.... மேலதிகாரி....

அண்ணா : அடேடே...

பாலகுரு : போச்சு! எல்லாம் போச்சு... 'லேட்டாப்' போய் கெட்ட பேர்தான் மிஞ்சப் போகுதுன்னு நினைச்சு வருத்தப்பட்டேன். அந்த நேரம் பள்ளிக்கூடத்துக்கு போய்க்கிட்டிருந்த சந்திரன் என்னைப் பார்த்தான். அவ்வளவுதான் மின்னல்வேகத்துல என்னன்னவோ செய்து வண்டியை ஓடவச்சுட்டான். அவனுக்கு நன்றி சொல்லத்தான் இந்தப் பரிசைக் கொடுக்க வந்தேன். ஆனால் நீங்கதான் அவனை நேத்து ராத்திரி கண்மண் தெரியாம அடிச்சிட்டீங்களாம்!

அண்ணா : அவன் ஒரு செல்லாத நோட்டு சார்.

பாலகுரு : சமுதாயத்துல செல்லாத நோட்டுன்னு... கிடையாதுங்க!



அண்ணா : எப்படி?

பாலகுரு : அன்னிக்கிக் கூட நீங்க பார்த்தீங்களே.. வழியில் ஒருத்தன் என்கிட்ட செல்லாத நோட்டுன்னு ஒன்றைக் கொடுத்துட்டு சண்டை போட்டுக்கிட்டு இருந்தான். அந்த நோட்டைக் கூட கடைசில உங்க கிட்டதானே கொடுத்தேன்?

அண்ணா : ஆமாம்.... நான் அந்த நோட்டைக் கூட பாங்க்ல கொடுத்து மாத்திட்டேனே....

பாலகுரு : இப்பதான் நீங்க பாயிண்டுக்கு வர்றீங்க. எல்லா நோட்டுமே பேங்குல செல்லும்! அட, அங்ககூடச் செல்லலேன்னா ரிசர்வ் பேங்க்ல கண்டிப்பாச் செல்லும். அத எங்க செல்ல வெக்கணும்ங்கிறதுலதான் நம்ம திறமை இருக்கு....

அண்ணா : சுந்தி வளச்சு நீங்க என்ன சொல்லறீங்க?



பாலகுரு : உங்க பையன் செல்லாத நோட்டு இல்லன்னுதான் சொல்ல வர்றேன்.

அண்ணா : எப்படி?

பாலகுரு : உங்க பையனுக்கோ 'மெகானிகல் மைண்ட்' இருக்கு. பேசாம அவன அதில விடுங்களேன். நான்தான் கேக்கறேன். எல்லாருமே டாக்டரா யிட்டா, அப்புறம் யார்தான் நோயாளி?! எல்லாருமே இன்ஜினியராயிட்டா அப்புறம், அவங்கவங்க வீட்டுக்கு முன்னால ஒரு பாலம் கட்டிக்கிறதா....? சமுதாயத்துல கள்ள நோட்டுதான் இருக்கக் கூடாது. நம்ம பையங்க தேச விரோத சக்தியா மாறக்கூடாது. அவ்வளவுதான். நீங்க பெரியவங்க.... புரிஞ்சுகிட்டு இருப்பீங்கன்னு நினைக்கிறேன்.

அண்ணா : ஆமாம் பாலகுரு சார்.... அதை நான் நல்லாவே உணர்ந்துட்டேன். நம்ம விருப்பத்தப் பிள்ளைங்க மேல திணிக்கிறது தப்பு. பிள்ளைங்களுக்கு எந்தப் பாடத்துல விருப்பம் இருக்கோ அந்தத் துறையில அவங்களைப் படிக்க வைக்கறதுதான் சிறப்பு. அதை நல்லா உணர்ந்துட்டேன். எல்லாப் பெற்றோர்களும் புரிஞ்சுக்கணும்.

(சந்திரன் வருகிறான்.)

பாலகுரு : இந்தா... சந்திரா... இந்தப் பரிசு உன்னோட.... இயந்திரவியல் அறிவு வளர்ச்சிக்கு.. ரொம்பவும் பயன் படற பரிசு.

பாஸ்கரன் : மாமா... எனக்குப் பரிசு கிடையாதா...?

பாலகுரு : உனக்கும் அதிலே ஒரு பரிசுப் பொருள் இருக்குது.

சந்திரன் : *(பரிசுப் பொருளைப் பெற்று உள்ளே ஓடுதல்.)*

சிவகாமி : நீங்க சொன்ன பிறகுதான் இவருக்குப் புரிஞ்சிருக்கு. இனிமே நல்ல நேரம்தான்!

பாலகுரு : காலையிலிருந்து எங்க வீட்டு தண்ணி மோட்டார் ஓடலே. மேக்கானிக்க பார்க்கப் போகணும்.

அண்ணா : எதுக்குங்க மேக்கானிக்கெல்லாம். நம்ம சந்திரன அனுப்பிச்சு பார்க்க சொல்லுங்க. நல்லா செஞ்சிடுவான். *(எல்லோரும் சிரிக்கிறார்கள்).*




★ வெள்ளை. முருகப்பன், கோட்டையூர், கண. பொன்னப்பன் சிதம்பரம்.

போன வாரம் கோகுலம் கௌரவ ஆசிரியர் காரைக்குடி - சிழச்செவல்பட்டியில் குழந்தை இலக்கியம் பற்றிப் பேச வந்திருந்தாராமே? எங்கள் பள்ளி விழாவுக்கு அழைத்தால் வருவாரா?

அவருடைய பணிகளுக்கு இடையூறு இல்லாமல் இருந்தால் கண்டிப்பாக வருவார். அது உங்கள் பள்ளி விழா அமையும் நாளைப் பொறுத்தது.

★ எஸ். நவநீதம், காங்கேயம்.

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுகிறார்களே, இவர்கள் ஏதாவது கட்டணம் கட்ட வேண்டுமா? யாருக்குக் கட்ட வேண்டும்? எத்தனை கட்ட வேண்டும்?



நேபாளத்தில் இருந்து எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதுதான் சிறப்பானது. இதற்கு நேபாள அரசின் அனுமதி தேவை. இதற்குக் கட்டணம் பத்தாயிரம் டாலர்! அடுத்த ஆண்டில் இருந்து இதை ஐம்பதாயிரம் டாலராக உயர்த்த நேபாள அரசு முடிவு செய்துள்ளது. விலைவாசி உயர்வுக்கு எவரெஸ்ட் ஏறும் கட்டணம் மட்டும் விதிவிலக்கா என்ன?

★ கரு. நாகமணி, பல்லடம்.

உலகின் மிக ஆழமான ஏரி எங்கே இருக்கிறது?

பைகால் ஏரிதான் மிக ஆழமான ஏரி. இதன் ஆழம் 1637 மீட்டர். பரப்பளவு 12,200 சதுரமைல். இதில் சிறியதும் பெரியதுமாக மொத்தம் 26 தீவுகள் உள்ளன. இந்த ஏரி ரஷ்யாவின் சைபீரியாவில் இருக்கிறது.

★ மு. சீதாபதி, காளக்காடு.

தொட்டால் சிணுங்கிச் செடியின் இலைகள், நாம் தொட்டதும் வாடிவிடுகிறதே! இது எப்படி நடக்கிறது?


தொட்டால் சிணுங்கி இலைகள் ஸ்பரிச உணர்வு மிக்கவை. நாம் தொட்டவுடன், இதன் இலைகளில் உள்ள செல்களிலிருந்து நீர் பின்வாங்கித் தண்டுப் பாகத்தில் இறங்கிக் கொள்கிறது. செல்களில் திடீரென்று நீர் இல்லை என்றால் என்னவாகும்? அப்படியே மடங்கி, ஒன்று சேர்ந்து ஒட்டிக் கொண்டு விடுகிறது. திரும்ப இலை தன் நிலைக்குவர சுமார் நாற்பது நிமிஷங்கள் ஆகும். நம் கைபட்டால்தான் இது சுருங்கும் என்றில்லை. இதன் மேல் எந்தப் பொருள்

பட்டாலும் இப்படித்தான்! மழைத்துளி கூட விதிவிலக்கு இல்லை.

★ கெ. கமலமதி, சிவகங்கை.

புகை எப்படி உண்டாகிறது?

எரிகின்ற பொருளுக்குத் தீ போதவில்லை என்றால், எரிகின்ற பொருள் புகையை வெளிப்படுத்துகிறது. தீ நன்கு எரிந்தால் எரிகின்ற பொருள் புகையை வெளியிடாது. அறிவியல் கண்ணோட்



டத்துடன் கூறுவது என்றால், எரிகின்ற பொருளை நன்கு எரிய வைக்கப் போதுமான ஆக்சிஜன் கிடைக்கவில்லை. வேண்டிய அளவு ஆக்சிஜனைவிட, கார்பன்டை ஆக்சைடும் கரிமப் பொருளும் கூடுதலாக இருப்பதால் புகை உண்டாகிறது.

★ அ. ஜாபர் அலிகான், ராணிப்பேட்டை.

மிகவும் ஒளிமிகுந்த கோள் சூரியன் தானே?

இல்லை. உண்மையில் வீனஸ்தான் ஒளிமிக்க கோள்.

★ ரு. இஸ்பானுல்லா, வேலூர்.

இதுவரை அதிக பொருட்செலவில் எடுக்கப்பட்ட திரைப்படம் எது?

''டெர்மினேட்டர்- 2; ஜட்ஜ்மெண்ட் டே'' (Terminator - 2; Judgement Day) என்ற அமெரிக்கத் தயாரிப்பு. இதற்கான



செலவு 104 மில்லியன் டாலர்! இது ஓர் கின்னஸ் சாதனையும்கூட!

★ எ. கனகசபை, மதுரவாயல்.

திரைப்படங்களில் அதிக முறை கதாநாயகனாக நடிக்கப்பட்ட பாத்திரம் ''டார்சான்''தான் என்கிறேன் நான். ''அலிபாபா'' என்கிறான் நண்பன். பந்தயம் போட்டிருக்கிறோம். நீங்கள் கூறுங்கள்...

திரைப்படங்களில் அதிக முறை கதாநாயகனாக நடிக்கப்பட்ட பாத்திரம் டார்சானும் அல்ல; அலிபாபாவும் அல்ல! ஷெர்லக் ஹோம்ஸ். இந்தத் துப்பறியும் சிங்க கதாபாத்திரம் 197 படங்களில் இடம் பெற்றவர்! கின்னஸுக்கு நன்றி கூறுங்கள்.

★ உ. பெரிய பெருமாள், கொத்தமங்கலம்.

மாஸ்கோவின் பழைய பெயர் என்ன?


செயிண்ட் பீட்டர்ஸ் பர்க் என்பது தான் மாஸ்கோவின் பழைய பெயர்.

★ வ. வேணுகோபால், சாத்தனூர்.


இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டன? முதலில் இன்ஷ்யூர் செய்து கொண்டவர் யார்?

ஆயுள் காப்பீடு முறையைத்தானே குறிப்பிடுகிறீர்கள்? கி. மு. 300 ஆம் ஆண்டிலேயே மாலுமிகளுக்கான ஆயுள் காப்பீடு முறை இருந்திருக்கிறது. 1583 இல் லண்டனில் வில்லியம் கிப்பன் என்ற மாலுமி ஆயுள் காப்பீடு செய்து கொண்டார். இது கடல் பயணத்திற்கு மட்டுமே. உலகப் புகழ்பெற்ற லாய்ட்ஸ் (LLOYD'S) ஆயுள் காப்பீட்டுக் கம்பெனி 1689 ஆம் ஆண்டு லண்டனில் ஆரம்பிக்கப்பட்டது.

கேள்வி கேட்போர் ஒரு கடிதத்தில் ஒரு கேள்வியை மட்டுமே கேட்கலாம். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம் (கேளுங்கள் சொல்லப்படும்), 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097.



பொங்கலுக்கு உன் மாமா உனக்கு வாழ்த்து வாங்கி அனுப்பினாராமே எதுக்குடா?
எனக்கு பொங்கல் வாழ்த்து அனுப்பச் சொல்லி அவருக்கு கடிதம் எழுதினதில் "ம்" விட்டுப் போச்சுடா
டேய் ராத்திரி எட்டு மணிக்கு சைக்கிள்ள "லைட்" இல்லாம வர்றியே உனக்கு மூளை இருக்காடா?
லைட் இல்லாட்டா சார்ஜ் பண்ணுவீங்க. மூளை இல்லாட்டாலும் சார்ஜ் பண்ணுவீங்களா சார்?
சிரிப்...
ஏண்டா அழுகிறே?
என்னை காண்டாமிருகம்னு போன வாரம் நீங்க சொன்னாம்பா
அதுக்கேடா இப்போ அழுகிறே?
நான் நேற்றுத்தானே காண்டாமிருகத்தை நேரிலே பார்த்தேன்!
நான் ஒரு நாள் கூட கிளாஸில் கலாட்டா செய்ததில்லே சார்
அது சரி, நீ முழிச்சிட்டிருந்தா தானே கலாட்டா செய்ய
கிரிக்கெட்னாலே எனக்கு குமார் ஞாபகந்தான்டா வரும்!
ஏன் அவர் ஒரு பெரிய ப்ளேயராடா?
இல்லேடா, அவனிடம் கிரிக்கெட் பற்றி பேசினேன். பந்தை கையில் தூக்கிக் கொண்டு ஓடுவாங்களே அந்த விளையாட்டைத் தானே சொல்றேடா ன்னு சொன்னவனாச்சும்.



நம்மால முடியாதுப்பா!

வாசு எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். வெகு நாட்களாகவே அவனிடம் ஒருவிதத் தாழ்வு மனப்பான்மையும், பயமும் இருந்து வந்தது. எந்த ஒரு காரியத்திலும் முழு முயற்சியுடன் இறங்க மாட்டான். அப்படியே இறங்கினாலும் பாதியில் இதை நம்மால் செய்ய முடியாது என்ற பயம் அவனுள் உண்டாகும்.

பள்ளியில் ஓட்டப் பந்தயம் ஒன்றை நடத்தினார்கள். அதில் கலந்து கொள்ள வாசுவும் பெயர் கொடுத்திருந்தான். ஓட்டப் பந்தயம் ஆரம்பிக்க இன்னும் கால் மணி நேரம் தான் இருந்தது. பெயர் கொடுத்த எல்லோரும் ஓடுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். ஏற்கெனவே ஓட்டத்தில் முன்னணியில் இருக்கும் சில மாணவர்கள் அதில் கலந்து கொண்டனர். அவர்களைப் பார்த்த உடனே வாசு பயந்து போனான். இவர்களுடன் போட்டி போட்டு ஜெயிக்க முடியாது என்று தனக்குத் தானே நினைத்துக் கொண்டு பந்தயத்தில் கலந்து கொள்ளாது ஒதுங்கி நின்றான்.

இதைக் கவனித்த வாசுவின் நண்பன் கோபு அவனிடம் வந்தான்.

"என்ன வாசு! நீ ஏன் ஓடத் தயாராகாமே ஒதுங்கிட்டே?"

"இல்லே கோபு. நான் ஓடலே. நம்ம ஸ்கூல் சாம்பியன்களெல்லாம் ஓடறாங்க. அவங்க கூடப் போட்டி போட என்னாலே முடியாதுடா."

"யாரு கலந்துக்கிட்டா உனக்கென்னடா? நீயாகவே ஏன் ஜெயிக்க முடியாதுன்னு முடிவு பண்ணிக்கிறே? சரி. இப்ப கலந்துக்காம ஒதுங்கி நிற்கிறதுலே உனக்கென்ன லாபம்? இப்படி அனாவசியமாக ஒதுங்கி இருக்கிறதை விட, பந்தயத்துலே கலந்துகிட்டு நாலாவது இடத்திலோ இல்லே ஐந்தாவது இடத்திலோ வரலாமே? அப்படி வந்தா இன்னும் தீவிரமா முயற்சி பண்ணி பிராக்டிஸ் செய்து அடுத்த தரம் முதல்லே வரலாமில்லையா?" என்று கோபு வாசுவை உற்சாகப்படுத்தினான்.

ஆனால் எவ்வளவு கூறியும் வாசு அந்தப் பந்தயத்தில் கலந்து கொள்ளவில்லை. 'நம்மால முடியாதுப்பா' என்று ஒதுங்கிக் கொண்டான்!

வாசுவிற்குக் கணக்குப் பாடம் என்றாலே பயம். மற்ற எல்லாப் பாடங்களிலும் ஓரளவிற்கு நல்ல மதிப்பெண்கள் வாங்கினாலும் அவன் கணக்கில் மிகவும் மோசமாக இருந்தான். கணக்கு நமக்கு வரவே வராது. அதில் நம்மால் நிறைய மதிப்பெண்களை வாங்க முடியாது என்ற எண்ணம் அவன் மனதில் இருந்தது. முயற்சி செய்து கடினமான கணக்குகளைப் போட்டுப் பார்த்து தவறுகளைத் திருத்திக் கொண்டால் நிறைய மதிப்பெண்களை வாங்க முடியும் என்ற நம்பிக்கை அவனிடம் வரவில்லை!

வாசுவின் மனநிலையைப் புரிந்து கொண்ட அப்பா அவனிடம் பேசினார்.

ஆர்.வி.பதி

''இன்றைக்கு விஞ்ஞானத்திலேயும், மற்ற துறைகளிலேயும் சாதனை படைச்சவங்க எல்லோருமே, ஆரம்பத்திலே நிறையத் தோல்விகளை சந்திச்சவங்கதான். தோல்விகளைக் கண்டு துவண்டு போகாம, முயற்சி செய்து உறுதியா உழைச்சதாலேதான் அவங்களாலே நிறைய சாதனைகளைச் செய்ய முடிஞ்சுது. நீ கூட துவளாமல் முயற்சி செய்து நம்பிக்கையோட உறுதியா உழைச்சா நிறைய மதிப்பெண்கள் வாங்கலாம்.''

ஆனால் வாகவின் மனப்பான்மை மாறவில்லை. உறுதியும் பிறக்கவில்லை.

கணக்குத் தேர்விற்கு இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. சோர்வுடன் தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான்.

அப்போது அவன் பார்வையில் அந்தக் காட்சி பட்டது. தரையில் ஒரு சிறிய வண்டு இறந்து கிடந்தது. அதை ஒரு எறும்பு இழுக்க முயற்சி செய்தது. ஆனால் அதனால் அந்த வண்டை இழுக்க முடியவில்லை. உடனே அதை விட்டு விட்டுச் சென்று சற்று நேரத்தில் இன்னொரு எறும்பை அழைத்து வந்தது. இப்போது இரண்டு எறும்புகளுமாக முயற்சி செய்து மெதுவாக அந்த வண்டை நகர்த்தித் தங்கள் இருப்பிடத்திற்கு இழுத்துச் சென்றன. அந்த எறும்பு தன்னால் முடியவில்லை என்று அந்த வண்டை விட்டு விட்டுப் போயிருக்கலாம். ஆனால் அது அப்படிச் செய்யாமல் தனது தோல்வியைக் கண்டு மனம் கலங்காது இன்னொரு எறும்புடன் சேர்ந்து முயற்சி செய்து வெற்றியும் பெற்று விட்டது!

இதே மாதிரி இன்னொருவர் உதவி இருந்தால் அவனாலும் வெற்றிகளைக் குவிக்க முடியுமா? வாகவின் மனத்தில் புதிய தெளிவும் உற்சாகமும் பிறந்தது. எழுந்து தன் நண்பன் கோபுவைப் பார்க்கப் போனான்.

''கோபு, நீயும் நானும் சேர்ந்து கணக்கைப் போட்டுப் பார்க்கலாமா? உனக்குத் தெரிஞ்சதை எனக்கு சொல்லித் தருவாயா?''

''கண்டிப்பா.. கணக்கு எனக்கு வரவே வராதுடான்னு எப்பப் பார்த்தாலும் நம்பிக்கையில்லாமல் சோர்ந்து போய் உட்கார்ந்துடுவே! உன்னோட இந்த மனமாற்றம் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு வாக. உறுதியா, விடாமல் முயற்சி செய்தா வெற்றி நம்முடையதுதான்! இப்பவே நாம கணக்குளைப் போட்டுப் பார்க்கலாம் வா.''


கோபு மேலும் உற்சாப்படுத்தினான். இருவரும் முயற்சியுடன் உழைத்தனர்.

வழக்கமாகக் கணக்குப் பாடத்தில் இருபது மதிப்பெண்களே வாங்கும் வாக அந்தத் தேர்வில் தொண்ணூறு மதிப்பெண்கள் வாங்கியிருந்தான்.

முயன்றால் முடியாதது ஏதுமில்லை.




எங்கள் ஊரில் நடந்தது



விசில் அடித்தது யார்?

சமீபத்தில் இராமேஸ்வரத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு நானும் எனது



அண்ணாவும், மருதுபாண்டியர் பஸ்ஸில் பயணித்தோம். பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. திடீரென்று இரண்டு முறை விசில் ஊதியவுடன், நிறுத்தமே இல்லாத அந்த இடத்தில் பஸ்ஸை டிரைவர் நிறுத்தினார். ஆனால் இரண்டு நிமிடங்களாகியும், யாரும் இறங்கவே இல்லை. டிரைவர் உணர்ச்சி வசப்பட்டு கண்டக்டரிடம் 'ஏய்யா யாருமே இறங்கவில்லையே, பின்னே ஏன் விசிலடிச்சு கோபத்தை கிளப்பறே?' என்று கோபமாகக் கத்தியவுடன், ''நான் சத்தியமா விசிலடிக்கலை. பஸ்ஸிலே இருக்கற யாரோ அடிச்சிருக்கிறாங்க'' என்று சொல்லிவிட்டு ஒவ்வொரு இருக்கையாகக் கண்டக்டர் நோட்டம் விட்டார். மூன்று வயதுச் சிறுவன் ஒருவன் நெளிந்து கொண்டே 'நானுதான் விசிலடிச்சேன்' என்று சொன்னதும் அவன் மேல் வந்த கோபத்தை மறந்து கண்டக்டர் - டிரைவர் உட்பட பஸ்ஸிலிருந்த அனைவருமே சிரித்து விட்டனர்!''

- ஏ. கே. ஆனந்தப்ரியா,
இராமநாதபுரம்.

ரேடியோ

எங்கள் வீட்டில் வேலை செய்யும் தோட்டக்காரர் நான் டவுனில் படிப்பதால், ''தம்பி, நல்லதா ஒரு ரேடியோ



வாங்கணும் என்ன வாங்கலாம்?'' என்று கேட்டார். நான் உடனே, ''பிலிப்ஸ் ரேடியோ வாங்குங்க'' என்று சொன்னேன். அவரும் ''சரி தம்பி. நீ சொன்னா சரியாய் இருக்கும்'' என்று சொல்லியவாறு சென்று விட்டார். மறுநாள் காலையில் தோட்டக்காரர் வேகமாக வந்தார். ''என்ன?'' என்று கேட்டேன். ''தம்பி, நான் படிக்காதவன்னு நினைச்சி பிலிப்ஸ் ரேடியோ தராம ஆல் இண்டியா ரேடியோ தந்திருக்கான்'' என்றார். ''எப்படிக் கண்டுபிடிச்சீங்க?'' என நான் கேட்டவுடன், அவர், ''நான் வீட்ல வந்து ரேடியோ வச்சா, ''ஆல் இண்டியா ரேடியோ''ன்னு ரேடியோவில இருந்து குரல் வருது'' என்று சொன்னார். எங்கள் வீட்டில் எல்லோரும் சிரித்தோம்.

- கு. பாபுராஜ், குடந்தை.

கூடையில் போடு

நாங்கள் எங்கள் தாத்தாவின் ஊருக்குக் கிளம்பினோம். அது கொடைக்கானலில் இருந்தது. வீட்டார் அனைவரும் பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தோம். அன்று



அதிகமான கூட்டமாக இருந்ததால் அனைவரும் நின்று கொண்டே சென்றோம்.

டிரைவரின் அருகில் கூடையுடன் நின்ற ஒரு பாட்டி. அந்தக் கூடையை இறக்கி டிரைவரின் அருகில் 'கியர்' போடும் கம்பியின் அருகில் வைத்து விட்டாள். அதை இடைஞ்சலாக நினைத்த டிரைவர், ''அம்மா, அந்தக் கூடையை எடு. நான் கியர் போட வேண்டும்''னு சொல்ல, அந்தப் பாட்டியோ, ''இந்தக் கூடையிலே ஒண்ணுமில்லை, இது வெறும் காலிக் கூடைதான். அதனால நீ போடணும்னு சொன்ன கியரை, இந்தக் கூடையிலேயே போட்டுக்கோன்னு'' சொல்ல, டிரைவர் உட்பட நாங்கள் எல்லோரும் சிரிசிரியென்று சிரித்து விட்டோம்.

- வி. புவனா, பெரியகுளம்.

உப்பைக் கழுவு!


எங்கள் வீட்டிற்கு ஒருநாள் எங்களுடைய மாமா அவருடைய குழந்தைகளுடன் வந்திருந்தார். அவர்களில் இரண்டாவது பையன் எல்.கே.ஜி. படிக்கிறான். படுசுட்டி. கள்ளென்று பேசுவான். அன்று மதியம் அனைவரும் சாப்பிட அமர்ந்த போது எனது தங்கை மாம்பழம் அரிந்து வைத்த தட்டை எடுத்து வந்தாள். வரும் போது கை நழுவி சில துண்டுகள் கீழே விழுந்து விட்டன. நாங்

கள் அவைகளைக் கழுவி தட்டில் வைக்கும்படி கூறினோம். இதைக் கவனித்துக் கொண்டிருந்தான் அந்தச் சுட்டிப் பையன். பிறகு உப்பு உள்ள கிண்ணத்தை என் தங்கை எடுத்து வரும் போது மறுபடியும் தவறி விட, கிண்ணம் கீழே விழுந்து உப்பு சிறிதளவு கொட்டியது. உடனே சுட்டிப்பையன், ''உப்பை கழுவிய பிறகு கிண்ணத்தில் போடுக்கா!'' என்று கூறினான். தங்கையின் செய்கைக்காகத் திட்ட நினைத்த நாங்கள் அவன் கூறியதைக் கேட்டு கோபத்தை மறந்து சிரித்தோம்!

– கு. சிங்காரவேலன், சென்னை – 15.

ரிசல்ட்!

நான் கடந்த பிப்ரவரி மாதம் எனது ஆறாவது இந்தித் தேர்வை எழுதினேன். அது மற்ற ஐந்தையும் விடச் சற்றுக் கடினமானது. எனக்கே பாசாகும் என்ற நம்பிக்கை இல்லை! எனவே அதன் ரிசல்ட் வெளியாகும் வரை என்னால் தாங்க முடியவில்லை. மூன்று மாதங்கள் வரை நான் இந்தி மேல் வகுப்பிற்கும் செல்லவில்லை. ஒருநாள் எனது இந்தி ஆசிரியை எனக்கு எதிரில் வந்து விட்டார்! நான் பயத்தில் ஒரு கடைக்குள் சென்று ஒளிய, ஆசிரியையும் அங்கு வர, என் நிலைமை இக்கட்டானது. ஆனால் அவர், ''ரிசல்ட் வந்தாச்சு'' என்றவுடன் என் நெஞ்சு படபடத்தது. ''நீதான் பாஸ் பண்ணிட்டியே! ஏன் கிளாசுக்கு வரலை?'' என்று தொடர்ந்து கேட்டு வாழ்த்தி விட்டுக் கிளம்பினார் அவர்.



எனக்கு பாஸ் பண்ணி விட்டோம் என்ற மகிழ்ச்சி ஒருபுறம். ஆசிரியையைக் கண்டு ஒளிந்த வெட்கம் ஒருபுறம். இதை என்னால் மறக்கவே முடியாது.

-- பி. கே. தேவ்நாத், சென்னை – 4.

விளம்பரப் போட்டி


சமீபத்தில் எங்கள் பள்ளியில், ''டீ.வி. - ரேடியோக்களில் செய்தது போல், விளம்பரப் பேச்சு (sales talk) போட்டி நடந்தது. அதில் ஒரு மாணவன் இங்க் பற்றி இப்படி விளம்பரம் செய்தான்... அவன் கையில் ரெண்டு இங்க் பாட்டில் இருந்தது. முதல் இங்க்கை



காட்டி, இதைப் பயன்படுத்தியதால் முதல் டெஸ்ட்டில் 40 மார்க்தான் கிடைத்தது... (அடுத்து இரண்டாவது; மற்றொரு கம்பெனியின் இங்க்கை காட்டி) ''இதை இரண்டாவது டெஸ்ட்டுக்கு பயன்படுத்தினேன். 80 மார்க் கிடைத்தது. ஆகவே... இரண்டாவது இங்க்கை பயன்படுத்தி நிறைய மார்க் பெறுங்கள்...'' என முடித்தான்.

உடனே வேறொரு மாணவன் எழுந்து, ''இவன் பொய் சொல்றான் மிஸ். ரெண்டாவது டெஸ்ட்டில் இவன் 80 மார்க் வாங்கலே... 63 மார்க்தான் வாங்கினான்... மிஸ்'' என அப்பாவியாகக் கூறவும், வகுப்பிலிருந்த எல்லா மாணவர்களும் சிரித்து விட்டோம்...

- ஆர். திலீப், திருச்சி – 14.



கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

கே. பி. என். ராஜன், தோப்பூர்.
கே. செந்தில், பிடாரமங்கலம்.

? எங்களுடன் விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் பலருக்கு கை, கால்களில் சொறி, சிரங்கு உள்ளது. அதைப் போக்கவும், தடுக்கவும் வழி சொல்லுங்கள், டாக்டர்?

! முதலில் சொறி சிரங்கைப் போக்கும் வழிகளைப் பார்ப்போமா? சிரங்கு உள்ள இடங்களை வெந்நீரால் கழுவி,



சுத்தமான துணியால் துடைத்துக் கொள்ளுங்கள். மருத்துவர் ஆலோசனையின் பேரில் SCABOMA, ASCABIOL போன்ற சிரங்குக் கொல்லி மருந்துகளில் ஏதேனும் ஒன்றை சிரங்கு உள்ள இடங்களில் மட்டுமில்லாமல் உடம்பு முழுவதுமே தடவி 24 மணி நேரம் கழித்து வெந்நீரில் குளியுங்கள். பிறகு மீண்டும் மருந்தைத் தடவுங்கள். இச் சிகிச்சையை சுமார் 10 நாட்களாவது தொடர்ந்து மேற்கொண்டால்தான் சொறி சிரங்கை முழுமையாகக் குணப்படுத்த முடியும். மேலும் விடுதியில் உள்ளோர் அனைவருமே ஒரே சமயத்தில் இச் சிகிச்சையை மேற்கொண்டால்தான் சொறி சிரங்கு மீண்டும் வராது. சரி, இப்போது சொறி சிரங்கைத் தவிர்க்கும் முறைகளைப் பார்ப்போம். ஒவ்வொருவரும் தங்களையும் தங்கள் சுற்றுப்புறத்தையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்; சொறி சிரங்கு உள்ளவர்களோடு நெருங்கிப் பழகக் கூடாது. அவர்கள் பயன்படுத்திய சோப்பு, சீப்பு, துவாலை, பேனா, புத்தகம் எதையுமே மற்றவர்கள் தொட்டுப் பயன்படுத்தக் கூடாது.

'இரணியல்' ராஜா, தஞ்சாவூர் – 7.

? இன்றைய மருத்துவ யுகத்தில் கூட குணப்படுத்த முடியாத நோய்கள் இருக்கின்றனவா, டாக்டர்?

! இருக்கிறதே! வெறிநாய்க்கடி நோய், எய்ட்ஸ்!

எஸ். சரவணன், மேல்மலையனூர்.


? டாக்டர், எனக்கு அடிக்கடி கால் குடைச்சல் வருகிறது. இது எதனால் ஏற்படுகிறது? இதைப் போக்க வழி கூறுங்கள்.

! காலில் குடைச்சல் (CRAMPS) ஏற்படப் பல காரணங்கள் உள்ளன. வைட்டமின் E சத்துக் குறையும் போது; கால்சியம் மற்றும் மக்னீசியக் குளோரைடுகள் குறையும் போது; மிகையான உடற்பயிற்சிக்குப் பிறகு ஏராளமாக வியர்க்கும் போது; வயிற்றுப்போக்கு, காலரா, சீதபேதியின் போது; நீண்ட நேரம் படுத்திருந்து பின்னர் எழுந்திருக்கும் போது; அதிக நேரம் நின்று கொண்டே பணியாற்றும் போது; மிக அதிகமான வெப்ப காலங்களில் வெப்பத்தால் தசைகள் சுருங்கும் போது; நீரிழிவு நோயால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியின் போது... இப்படி பல சமயங்களில் கால் குடைச்சல் வருகிறது. மருத்துவரைக் கலந்து உரிய காரணமறிந்து மருத்துவம் பெறுவது நல்லது.



எல். பத்மாவதி, காஞ்சிபுரம்.

? நகத்தில் விழும் காக்காப்பூ எதனால் ஏற்படுகிறது?




! உடம்பில் புரதச் சத்தும், கால்சியச் சத்தும் குறைவாக இருந்தால் நகத்தில் 'காக்காப் பூ' (வெள்ளைப் புள்ளிகள்) தோன்றும்.

த. சரவணன், மதுக்கூர்.

? சத்துள்ள உணவை மட்டுமே சாப்பிடுவதன் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்த முடியுமா?

! எல்லா நோய்களையும் கட்டுப்படுத்த முடியாது, தம்பி. சத்துக் குறைவு நோய்களை மட்டுமே சத்துள்ள உணவு சாப்பிடுவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். சுத்தம், சுகாதாரம், ஒழுக்கம், நல்ல பழக்க வழக்கங்கள், முறையான தடுப்பு ஊசிகள் இவற்றையும் மேற்கொண்டால்தான் எல்லா நோய்களையும் கட்டுப்படுத்த முடியும். சரியா?



பா. ஜெயக்குமார், வந்தவாசி.

? நாய் கடித்தவர்களின் செய்கைகள் நாயைப் போலவே இருக்கும் என்று என் நண்பன் சொல்கிறான். இது சரியா, டாக்டர்?

! உன் நண்பனின் கூற்றை முழுவதும் 'சரி' என ஒப்புக் கொள்ள முடியாது. நாய் கடித்து 'வெறி நோய்' (RABIES) வந்தவர்களுக்கு மூளை பாதிப்படைவதால் அமைதியில்லாமல் இருப்பார்கள்; தாங்களாகவே பேசிக் கொள்வார்கள்; எழுந்து ஓடப் பார்ப்பார்கள்; மற்றவர்களைப் பார்த்தால் அடிக்க வருவதும், கடிக்க வருவதும், கத்துவதும், உறுமுவதுமாக இருப்பார்கள். வெறி நோயின் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட நபரின் தொண்டைக் குழாய் சுருங்கி விடுவதால், மூச்சை உள்ளே இழுக்கும் போது ஒருவிதக் கேவல் சத்தம் கேட்கும். இவை எல்லாவற்றையும் நாயின் குணாதிசயங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்று போல் தோன்றும். அவ்வளவே!



அறிஞர் தாமஸ் ஜெபர்சன் 1818 ஆம் ஆண்டில் தமது நண்பருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆனால் அப்போது அவருக்கே பிற்காலத்தில், தனது கடிதம் 3 இலட்சத்து 60 ஆயிரம் டாலர் (ஒரு டாலரின் மதிப்பு 31 ரூபாய்) களுக்கு விலை போகும் என்பது தெரியாது! ஆமாம்! அவரது கையெழுத்தின் இன்றைய மதிப்பு இதுவேயாகும். இதுபோன்று பல்வேறு அறிஞர்கள், விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள் போன்ற பல்வகை வல்லுநர்களின் கையெழுத்துகள் இன்று நல்ல விலைக்கு ஏலம் விடப்படுகின்றன.


லண்டன் மாநகரில் இதற்கென்றே தனியான ஒரு மார்க்கெட் உள்ளது. இங்கு உங்களுக்குத் தேவையில்லாத கையெழுத்தை விற்கவும் செய்யலாம், தேவையான கையெழுத்தை வாங்கவும் செய்யலாம். தற்போதைய நிலவரப்படி மார்கரெட் தாட்சர், ராணி எலிஸபத், பிரின்ஸ் சார்லஸ் போன்றவர்களின் கையெழுத்து 50 பவுண்டுகள் வரை விலை போகிறது. கிரிஸ்டோபர் மார்லோ, முதலாம் எலிஸபத், ஷேக்ஸ்பியர், ஹிட்லர், ஆயத்துலா கோமேனி போன்ற வரலாற்றுப் பிரபலங்களின் கையெழுத்துகளை வாங்க வேண்டுமெனில் ஆயிரக்கணக்கான பவுண்டுகள் (ஒரு பவுண்டின் மதிப்பு 60 ரூபாய்) தேவைப்படும்.

கையெழுத்துப் போடும் பழக்கம் இன்று நேற்றல்ல ஏசு பிறப்பதற்கு 2130 வருடங்களுக்கு முன்வே ஆரம்பமாகிவிட்டது. மத்திய மிஸர் சாம்ராஜ்யப் பகுதியில் நடை பெற்ற அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்த கல்வெட்டில் காணப்படும் கையெழுத்தை வைத்து இதை அறிவித்துள்ளார்கள். இக்கல்வெட்டு இன்றும் லெனின் கிராடில் உள்ள மியூஸியத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அமெரிக்காவில் உள்ள ஹாமில்டன் கேலரி கையெழுத்துப் பாதுகாப்புப் பிரதிகளின் சங்கமமாகத் திகழ்கிறது. இங்கு முதலாம் வில்லியம் (1070); ஆங்கில சக்கரவர்த்தி மூன்றாம் எட்வர்ட் (1326 - 77); மூன்றாம் ரிச்சர்ட் உட்பட இன்றைய ஜார்ஜ் புஷ் வரையி


விலை போகும் கையெழுத்து!





லாவோரின் கையெழுத்துக்கள் உள்ளன. சென்ற முறை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரீகனின் கடிதம் ஒன்று இங்கு 12,500 டாலர்களுக்கு விலை போனது!

கையெழுத்துகளின் மதிப்பை அறிந்த அறிஞர் பெர்னாட் ஷா ஒரு சமயம் அருமையானதோர் தந்திரம் செய்தார். ஓவியர் ஒருவருக்கு அவர் 200 பவுண்டுகள் தர வேண்டி இருந்தது. அத்தொகைக்காக ஒரே 'செக்'காகத் தராமல் ஐம்பது பவுண்டுகளாக நான்கு செக்குகளில் கையெழுத்திட்டு அந்த ஓவியரிடம் தந்தார். அவருக்கு விபரம் புரியாமல் காரணம் கேட்க, பெர்னாட் ஷா, ''தம்பி, எனது கையெழுத்துக்கு இன்றைய மதிப்பு 25 பவுண்டுகளாகும். நீ என்ன செய்ய வேண்டும் தெரியுமா? இந்த நான்கு செக்குகளையும் தனித்தனியாக விற்றால் உனக்கு 500 பவுண்டுகள் கிடைக்கும். இந்த செக்கை விலைக்கு வாங்கும் யாருக்குமே, இதை பேங்கில் போட்டு பணம் பண்ணும் எண்ணம் வராது. பத்திரப்படுத்தி வைக்கவே பார்ப்பார்கள். உனக்கு 300 பவுண்டு லாபம் என்றால், இந்த வகையில் எனக்கும் 200 பவுண்டுகள் இலாபம்!'' என்றார். 1992 டிசம்பர் கோகுலத்தில் இது கட்டுரையாக வெளிவந்ததே! படிக்கவில்லை!



ஒரு செங்கல் உடைந்து விட்டால் ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ கொடுத்து வேறு செங்கல் வாங்கிக் கொள்கின்றோம். ஆனால், ஒரே ஒரு செங்கல் மட்டும் ஆயிரத்துக்கும் அதிகமான டாலர்களுக்கு ஏலம் போனது. அதில் அப்படி என்ன சிறப்பு என்றால் ஐரோப்பாவின் பிரபல சரித்திர ஆசிரியர், எழுத்தாளர் எட்வர்ட் கிவின் என்பவர் அந்த செங்கல்லில் ''நான் தங்களுக்கு 320 பவுண்டுகள் கடன் தர வேண்டும் என இதன் மூலம் உறுதியளிக்கிறேன் என்று செதுக்கிக் கையெழுத்திட்டிருந்தது தான்!

நீங்களும் விளையாட்டு வீரர்கள் உட்பட பல பிரபலங்களிடம் ஆட்டோகிராப் வாங்கி வைத்திருக்கலாம். அவற்றை பத்திரப்படுத்தி வையுங்கள். யார் கண்டது? பிற்காலத்தில் அவற்றின் மதிப்பு ஆயிரக்கணக்கில் உயரலாம்!

- சத்தி. ஏ.ஜே. ஜப்பார்



பாக்கியம் செய்த சிறுவன்!

காந்திஜி ஹரிஜனங்களின் நலனுக்காக ஒரு முறை உபவாசம் இருந்தார். அப்போது ஒரு ஏழை ஹரிஜன சிறுவனான விடோபா என்பவனைப் பார்த்து, ''நீ கொண்டு வரும் ஆரஞ்சுகளை உரித்து ரஸம் எடுத்து உட்கொண்ட பிறகே உபவாசத்தை முடிப்பேன்'' என்றார். இதைக் கேட்டு விடோபாவிற்கு அளவில்லாத மகிழ்ச்சி. பெரிய பெரிய முக்கிய புள்ளிகளுக்கெல்லாம் கிடைக்காத இந்த பாக்கியம். தனக்குக் கிடைத்ததை எண்ணி விடோபா அன்றிலிருந்து காந்திஜிக்குப் பழம் வாங்குவதற்காக பைசா பைசாவாகச் சேர்த்து வந்தான். பாபூஜியும் ஒரு நாள் விடோபாவைக் கூப்பிட்டு ''நாளை உபவாசத்தை முடிக்கப் போகிறேன். நீ கொண்டு வரும் ஆரஞ்சு ரஸத்தைத்தான் உட்கொள்வேன்!''என்றார்.

விடோபா இந்த விஷயத்தை எல்லோரிடமும் சொன்னதும் எல்லோரும் அவனை, 'முட்டாளே! அவருக்கென்ன வேறு ஆளே கிடைக்கவில்லையா? உன்னிடம்தானா பழங்களை வாங்குவார்!'' என்று கேலி செய்தனர். ஏன், விடோபாவின் தாயாரே கூட இதை நம்பவில்லை. ஆனால் விடோபா உறுதியாக நம்பினான். கஷ்டப்பட்டு தான் சேர்த்து வைத்த பணத்தை எண்ணிப் பார்த்தான். ஒருரூபாய் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு கடைத் தெருவிற்குச் சென்றான்.



கடைக்குச் சென்ற விடோபா, பழங்களின் விலையைக் கேட்டான். அசந்து போனான். அவனால் வாங்க முடியாத விலையில் அவை இருந்தன. ஒரு டம்ளர் ரஸத்திற்குக் குறைந்தது நான்கு ஆரஞ்சுகளாவது வேண்டுமே?

தன்னுடைய ஏழ்மை நிலையை எண்ணி விடோபாவிற்கு வருத்தம் ஏற்பட்டது. அவன் கண்களில் கண்ணீரே வந்து விட்டது. கடைசியாக மிகவும் தயக்கத்துடன் ஏழையாகத் தென்பட்ட ஒரு பழ வியாபாரியிடம் சென்றான். அவனிடம் சிறியதாகவும் உலர்ந்ததாகவும் பழங்கள் இருந்தன. 'என்னிடம் இந்தப் பழங்கள்தான் இருக்கு. உனக்கு வேண்டுமானால் வாங்கிக் கொள்' என்றான் வியாபாரி. விடோபா அவனிடம் விலை பேசி ரூபாய்க்கு நான்கு ஆரஞ்சுகளை வாங்கிச் சென்று காந்திஜி இருக்குமிடத்திற்கு விரைந்தான்.

காந்திஜியின் உபவாசம் முடிந்து விட்டது. அங்கிருந்த ஜனங்கள் தாங்கள் கொண்டுவந்த ஆரஞ்சுப் பழங்களை உரித்து ரஸம் எடுக்கத் தயாராயிருந்தனர். ஆனால் காந்திஜியோ 'விடோபா எங்கே?' என்று கேட்டுக் கொண்டிருந்தார். 'எதற்காக?' என்று அங்குள்ளவர்கள் கேட்ட போது 'அவன் கொண்டு வரும் பழத்தின் ரசத்தை எடுத்துத்தான் என் உபவாசத்தை முடிப்பேன்', என்று உறுதியாகக் கூறினார்.

அதற்குப் பிறகே எல்லோரும் விடோபாவைத் தேடினார்கள். அவன் வெளியே ஓர் ஓரமாக நின்றிருந்தான். கூட்டத்தைத் தாண்டி வர முடியவில்லை. ஒருவர் அவனை நெருங்கி 'நீதான் விடோபாவா?' என்று கேட்டார். அவன் ''ஆமாம்'' என்றவுடன் அவனை காந்திஜி முன்பு அழைத்துச் சென்றனர். காந்திஜியைப் பார்த்ததும் விடோபாவின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வந்துவிட்டது. அவரிடம் ஆரஞ்சுகளைக் கொடுத்தான். அவரும் அந்த உலர்ந்த ஆரஞ்சுப் பழங்களிலிருந்து கிடைத்த கொஞ்சம் ரஸத்தை மகிழ்ச்சியோடு சுவைத்து உபவாசத்தை எளிமையாக முடித்தார். உலக மகானின் உபவாசத்தை முடிக்கும் பாக்கியம் அந்த ஏழை ஹரிஜனச் சிறுவனுக்குக் கிடைத்தது!

– இந்திரா கோபாலன்




புத்தக மன்னர்

அப்துல்காசம் இஸ்மாயில் என்னும் பெர்சியா நாட்டு மன்னர் பெரிய கல்விமான்; பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்; பயங்கரமான புத்தகப் பிரியர். 1,17,000 புத்தகங்கள் அவரது நூல் நிலையத்தில் இருந்தன! புத்தகங்களை அவர் நேசித்தார் என்று வெறும் வார்த்தைகளால் கூற முடியாது. அந்த அளவுக்கு அவர் புத்தகங்களை உயிராகக் கருதினார். போருக்குப் போகும் போது கூட, அவர் மனம் புத்தகங்களைப் பிரிய ஒப்பவில்லை! அதற்காக அவர் ஒரு ஏற்பாடு செய்திருந்தார்.

வரிசை தவறாது செல்லும் பழக்கப்பட்ட நானூறு ஒட்டகங்களில் இந்தப் புத்தகங்களையும் எடுத்துச் செல்வார் கள். ஒட்டகங்களுடன் நூலக அதிகாரி களும் உடன் செல்வார்கள். மன்னர் எந்தப் புத்தகத்தைக் குறிப்பிட்டுக் கேட்டாலும் உடனே அதை எடுத்துத் தருவார்கள்! இப்படியும் ஒரு மன்னர் புத்தகப் பிரியராக வாழ்ந்திருக்கிறார் என்பதை அறியும் போது வியப்பாக உள்ளது இல்லையா?

– விசலூர். ஜி. ஜி. கிருஷ்ணன்



வினா--

நானும் இனிமேல்...



—புலேந்திரன்—

அந்த கிராமத்திற்கு காலையில் ஒரு தடவையும் மாலையில் ஒரு தடவையும் பேருந்து வந்து போய்க் கொண்டிருந்தது. நகரத்திற்கு வேலையாகப் போக வேண்டியவர்கள் காலையில் போனால் மாலையில் திரும்பி வரலாம்.

காலைப் பேருந்து வரும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. பாலுவின் அம்மா, கூடையையும், பைகளையும் எடுத்து வைத்துக் கொண்டு, பணத்தை எண்ணிக் கொண்டிருந்தாள். பாலுவின் அப்பா இறந்த பிறகு, அம்மாதான் நகரத்திற்குப் போய்க் காய்கறி வாங்கி வந்து கிராமத்தில் விற்று அதைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தாள்.

''அம்மா! நானும் வருகிறேன்'' என்றான் பாலு.

''ஊகூம். நேற்றும் பள்ளிக் கூடத்துக்குப் போகலே. இன்றைக்காவது போ. வரும்போது தின்பண்டம் வாங்கி வருகிறேன்'' என்றாள் அம்மா.

''நான் பள்ளிக்குப் போகலே... உன் கூடவே வரேன்'' - சிணுங்கினான், பாலு.

பேருந்து வந்து விட்டது.

கூடையைத் தூக்கிக் கொண்டு ஓடினாள் அம்மா. பாலுவும் பின்னால் ஓடிப் பேருந்தில் அம்மாவுடன் ஏறி விட்டான்.

''என்னடா இப்படிப் பள்ளிக்கூடம் போய்ப் படிக்காம வீணா சுத்தி அலையறே? நான்தான் படிக்காம திண்டாடறேன். நீயாவது படிச்சு, பெரிய வேலைக்குப் போவேன்னு எதிர் பார்த்தா இப்படி வீணாப் போறியே?'' என்று அம்மா அலுத்துக் கொண்டாள்.

பாலு ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். ஆனால், படிப்பில் கவனம் இல்லை. ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்வதில்லை. செல்லும் தினங்களிலும் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. அ, ஆ.... கூட சரியாக எழுதத் தெரியாது. படிப்பு என்றாலே வேப்பங் காய்தான்!

நகரத்தில் - அம்மா, காய்கறிகளை வாங்கிக் கொண்டாள். பாலுவுக்கும் தின் பண்டம் வாங்கிக் கொடுத்தாள்.

மாலை. பேருந்து நிலையத்தில் -

ஒரு சிவப்பு நிறப் பேருந்து வந்து நின்றது.



''அந்தச் 'சிவப்பு வண்டி' நம்ம ஊருக்குப் போறதான்னு பார்'' என்றாள் அம்மா.

பாலு, பெயர்ப் பலகையில் உள்ள எழுத்துகளைக் கூட்டிப் படித்துப் பார்க்க முயன்றான்; தெரியவில்லை. பள்ளிக்குப் போய் ஒழுங்காகப் படித்திருந்தால்தானே தெரியும்?

மகனின் நிலையைப் புரிந்து கொண்ட அம்மா, ''என்னடா இது! என்னை மாதிரி தற்குறியாவே இருக்கிறாயே!'' என்று அலுத்துக் கொண்டு தானே பின்னால் ஏறிப் பார்த்தாள். பிறகு, ''நம்ம ஊர்க்காரங்க ஒருத்தரும் இதுல ஏறலே. அதனால இது நம்ம ஊர் பஸ் இல்லே, வா'' என்றாள்.

அடுத்து வந்து நின்ற மற்றொரு சிவப்புப் பேருந்தில் அவர்கள் கிராமத்துப் பெரியவர் ஒருவர் ஏறினார். அதைப் பார்த்த அம்மா, கூடையைத் தூக்கிக் கொண்டு விரைந்தாள். பாலுவும் விரைந்தான். இருவரும் ஏறியதும் பேருந்து புறப்பட்டது.

நடத்துனர், முன் பக்கத்திலிருந்து சீட்டுப் போட்டுக் கொண்டிருந்தார்.

பாலுவைப் பார்த்து, ''எங்கே போறீங்க?'' என்று கேட்டார், அவர்கள் ஊர்ப் பெரியவர்.

''நம்ம ஊருக்குத்தான்'' என்றான், பாலு.

''இது அங்கே போகாது. நான் சொந்த அலுவலாக வேறு ஊருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். இறங்கி விடுங்கள்'' என்றார், பெரியவர்.

''ஐயா நிறுத்துங்க'' - கூடையைத் தூக்கிக் கொண்டே கூவினாள், அம்மா.

''இன்னமும் சிவப்பு, பச்சை என்று நிறத்தைப் பார்த்துத்தான் ஏறிக் கொண்டிருக்கிங்களா?'' - என்று சினந்து கொண்ட நடத்துனர், ''ஏண்டா தம்பி, உங்க அம்மாதான் இப்படின்னா, நீ சின்னப் பையன், நீயாவது ஒழுங்கா பள்ளிக்கூடம் போய்ப் படிக்கக்கூடாது? இவங்களோடு சேர்ந்து பச்சை சிவப்புன்னு சொல்லிக்கிட்டு இருக்க வெட்கமா இல்லே?'' என்று பாலுவைப் பார்த்துக் கேட்டார்.

பேருந்து நின்றது. பாலுவைப் பார்த்து, ''நீயாவது ஒழுங்கா பள்ளிக் கூடம் போய்ப் படி?'' என்று புத்திமதி சொல்லி, அந்த இடம் வரையிலும் இரு வருக்கும் உண்டான கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு சீட்டுக் கிழித்துக் கொடுத்தார்.

அவர்கள் இறங்கிய இடம், நகரத்தி லிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரம் தள்ளி இருந்தது. கையில் காசும் குறை வாக இருந்தது. எனவே, இருவரும் நொந்த மனத்துடன் ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

சற்று தூரம் சென்றதும் -

பின்னால் வந்த பச்சை நிறப் பேருந்து அவர்களை ஒட்டி நின்றது.

''ஏறுங்க'' - கோடி வீட்டுக் கிழவி யின் குரல்.

இருவரும் ஏறியதும் பேருந்து புறப் பட்டது.

''நம்ம ஊருக்கு வரும் வண்டி பழு தாயிட்டுதாம். மாற்று வண்டி வர தாம தமாயிடுச்சு'' என்றாள், கிழவி.

பஸ் விரைந்தது. அம்மாவின் மனத் திலும் பாலுவின் மனத்திலும் பெரிய புயல்! ''நாளையிலிருந்து, இரவு வகுப் பில் முதியோர் கல்வி படிக்கப் போறேன்'' என்றாள் அம்மா.

''நானும் இனிமே தவறாது பள்ளிக் கூடம் போவேன். கவனமாகப் படிப் பேன்'' என்றான். இருவரும் சிரித்தனர்.

எழுதப் படிக்க அறியாது இருந்து விட்டதற்கான தண்டனையை நன்றாக அனுபவித்துவிட்ட துயரம் அவர்கள் சிரிப்பில் இழைந்தோடியது. இனி இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு அவர்கள் ஆளாக மாட்டார்கள். அவர்களை இந்த அளவிற்கு மாறச் செய்த பஸ் டிரை வருக்கும், கண்டக்டருக்கும் அவர்கள் தங்கள் மனதிற்குள்ளேயே நன்றி செலுத்திக் கொண்டனர்.

தாயும் மகனும் படிக்கப் போவ தைப் பார்த்து அக்கம் பக்கத்தில் உள்ள வர்கள் ஏளனமாக எண்ணி சிரித்ததை யும் சீண்டிவிடுவதையும் அவர்கள் கவனிக்கத் தவறவில்லை. அதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.




அழகுக்காகவா?



குதிரையொன்று வழியில் பெரிய மூட்டையைச் சுமந்தவாறு மெல்ல நடந்து சென்ற கழுதையைக் கண்டது. குதிரை பேசாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். தான் நன்றாக கவனிப்புடன் வளர்க்கப்படுகிறோம் என்ற கர்வத்தில் கழுதையைப் பார்த்து, ''ஐயோ பாவம், கழுதையாரே! நீர் குட்டியாக இருந்த போது மிகவும் அழகாக இருந்தீர். ஆனால் வளர்ந்தபின் அந்த அழகு கூட இப்போது போய் விட்டதே! அதனால்தான் இந்த மனிதர்கள் என்னை அலங்கரித்து அழகு பார்த்து மகிழ்வது போல், உன்னைச் செய்யவில்லை. வெறும் சுமை தூக்கி வாகனம் என்பதால் அழகு தேவையில்லை என்று முடிவு செய்து விட்டார்கள் போல் இருக்கிறது'' என்று திமிராகவும் செருக்கோடும் பேசியது.

கழுதை காது புளிக்கும்படி ஒரு சிரிப்புச் சிரித்து விட்டு, குதிரையைப் பார்த்து, ''குதிரையாரே! நீர் அழகாக இருப்பதால்தான் உன்னை மனிதன் அலங்கரிக்கிறான் என்று நம்பிக் கொண்டிருக்கிறீர்களா? உண்மை அது இல்லை. இந்த மனிதர்களைப் பற்றி நீ அறிந்து கொண்டது அவ்வளவுதான். அவர்கள் மிகவும் சுயநலம் மிக்கவர்கள். எதை எப்போது, எங்கு, எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை மிகவும் அறிந்து வைத்திருப்ப வர்கள்.

''நான் பொறுமையுள்ளவன். எவ்வளவு சுமை வைத்தாலும் சுமப்பேன்



என்பதால் என்னை சுமைதூக்கும் பொருளாகக் கருதி அழகுபடுத்த வில்லை. அதே சமயம் அவர்களுக்கு என் மீது சவாரி செய்ய வேண்டிய அவசி யம் ஏற்பட்டால் என்னையும் உன்னை போல் சிங்காரித்து விடுவார்கள்'' என்றது ஏளனமாக.


குதிரை இப்பொழுது யோசனை யுடன் கழுதையைப் பார்த்தது. கழுதை தொடர்ந்து, ''உன்னை சிங்காரித்து வைத்திருக்கக் காரணம் என்ன என்ப தைச் சொல்கிறேன் கேள். முதுகில் அங்கவடி இருக்கிறதே, அது எதற் கென்று தெரியுமா? மனிதர்கள் உன் மீது ஏறி அமரவும் வசதியாகச் சவாரி செய்ய வும்தான். தங்கக் கடிவாளம் இருக் கிறதே, அது எதற்குத் தெரியுமா? உன் னைக் கட்டுப்படுத்துவதற்காக.


முகத்தில் அழகான கண்பட்டை அணிவித்திருக்கிறார்களே, அது எதற் காகத் தெரியுமா? அவர்கள் தங்கள் கண்ணுக்குக் கண்ணாடி அணிந்து கொண்டிருக்கிறார்களே அதைப் போல் குளுமை தர என்று நினைத்துக் கொண் டீரா? இல்லவே இல்லை. கண் பட்டை இல்லாவிட்டால் நீர் தாறுமாறாக ஓடு வீர். அவ்வாறு ஓடாமல் இருப்பதற் காகவே அழகான கண் பட்டை! உன் உச்சந்தலையில் கட்டப்பட்டிருக்கும் 'தலைஉளை' எனப்படும் கொண் டையை மட்டுமானால் நீர் அழகுக்காக என்று கருதிக் கொள்ளலாம். இப்போ தாவது புரிந்து கொள்; மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை.''

கழுதை தொடர்ந்தது. 'குதிரை கீழே தள்ளியதுமல்லாமல், குழியையும் பறித்தது' என்பது உமக்காகவே உண் டாக்கப்பட்ட பழமொழி. இதுவே மனி தர்கள் உன்னை எவ்வாறு புரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்று. இப் போது புரிகிறதா மனிதர் கள் உன்னைச் சிங்காரித்து வைத்திருப் பதன் கார ணத்தை?''

கழுதையின் விளக்கத்தைக் கேட்ட குதிரை, தான் கழுதையைப் பற்றி மிகவும் இழிவாகப் பேசியது தவறு என்பதை உணர்ந்து கொண்டது. அதன் ஆணவம் மறைந்தது.

- முத்து எத்திராசன்





• புதிய ஸ்டேடியம்



தங்கக் கோப்பையை ஜெயிப்பேன்!

'பிரமிப்பு' என்ற வார்த்தையை உணர்ந்து அனுபவிக்காதவர்களுக்கு ஒரு அருமையான வாய்ப்பு. சென்னை நகரில் சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகே நவீன முறையில் புதுப்பிக்கப் பட்டு வரும் நேரு விளையாட்டு அரங் கத்தைக் காணப் போனால், இதை உடனே உணரலாம். வெளியே இருந்து காணும் போது இதன் பிரமிக்க வைக் கும் சிறப்பை நம்மால் உணர முடிவ தில்லை. ஆனால் உள்ளே போய்ப் பார்த் தால், நம்மால் பிரமிப்படையாது இருக்க முடியாது.

முதலில் நம் கண்களைக் கவர்வது காலரி வரிசைகளை அழகுசெய்யும் பச்சை, மஞ்சள், நீல வண்ண பிளாஸ்டிக் நாற்காலிகள்! வானை முட்டும் காலரிக் கூரை.

மொத்தம் சுமார் 45 ஆயிரம் பேர் அமர்ந்து காணக்கூடிய வசதி பெற்றது இந்த ஸ்டேடியம். பத்து ஆண்டுகளுக்கு முன்பே கனவு கண்டாலும், இப்பொ ழுதுதான் நினைவாகியுள்ளது. சுமார் 40 கோடி ரூபாய் செலவில் நன்கு திட்ட மிட்டுக் கட்டப்பட்டுள்ள இந்த ஸ்டேடி யத்தை சுமார் ஐயாயிரம் தொழிலா ளர்கள் இரவு பகலாக உழைத்து ஏழே மாதங்களில் முடித்து சாதனை படைத் திருக்கிறார்கள். சிமெண்ட் காய்வது, வண்ணம் பூசுவது எல்லாமே மிக நவீன மான உத்திகளின்படி இது செய்து முடிக் கப்பட்டுள்ளது.

சர்வதேச விளையாட்டு அரங்கம் என்ற பெயரைப் பெறும் ஸ்டேடியங் கள் எப்படியெல்லாம் இருக்க வேண் டும் என்ற வழி முறைகளை உலகக் கால் பந்தாட்ட சங்கம் (FIFA), 1991-ஆம் ஆண்டில் வெளியிட்டது. அந்தத் தகுதி விதிமுறைகளின்படி உலகில் முதன் முத லாகக் கட்டப்பட்டுள்ள முதல் ஸ்டேடி யம் என்ற பெருமையையும் இது பெறு கிறது!

எலக்ட்ரானிக் முறையில் இயங்கும் வண்ண ஸ்கோர் போர்டுகள், இரவிலும் விளையாட்டுக்களை நடத்தப் போதுமான ஒளி வெள்ளம் பாய்ச்சும் விளக்கு அமைப்புகள், காலரியின் எந்தப் பகுதியையும் இருந்த இடத்தில் இருந்தபடி கண்காணிக்கும் அமைப்புகள், ஒளி ஒலி பெருக்கி ஏற்பாடுகள், நவீன கழிப்பறைகள், விளையாட்டுக்காரர்கள் தங்குவதற்கான விடுதிகள், வாகனங்களை விடுவதற்கான வசதிகள், சிற்றுண்டிப் பிரிவுகள், முதல் உதவி சிகிச்சைப் பகுதிகள், எல்லாக் கோணங்களையும் படமாக்கும் வசதிகள், சாதாரண நாட்களிலும் நன்கு பராமரிக்க ஏற்பாடுகள், இப்படி இதன் சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கால் பந்தாட்டம் மட்டுமல்லாது சர்வதேச அளவிலான அதிலடிக்ஸ் போட்டிகளையும் நடத்தக்கூடிய வகையில் இதன் ஓடு பாதை (TRACK) புதுமையாக அமைந்துள்ளது. வெகு விரைவில் கின்னஸ் புத்தகத்திலும் இந்த ஸ்டேடியம் இடம் பிடித்து தமிழ்நாட்டுக்கும் சென்னைக்கும் பெருமை தேடித் தரப் போகிறது.

இத்தனை சிறப்புகள் வாய்ந்த இந்தப் பெருமைமிக்க நேரு விளையாட்டு அரங்கை ஜனவரி மாதம் நமது பாரதப் பிரதமர் திறந்து வைக்கிறார். தொடக்க நாள் விழாவில் ஆயிரம் மாணவ மாணவியரின் அணிவகுப்பும், ஆயிரம் மாணவ உடற்கல்விக் கலைஞர்கள் பங்குபெறும் காட்சிகளும் நடைபெற உள்ளன. உடனேயே நேரு தங்கக் கோப்பைக்கான பத்தாவது உலகக் கால்பந்துப் போட்டிகளும் தொடங்கி சுமார் பத்து நாட்கள் நடைபெறுகின்றன. இதில் இந்தியா தவிர, கால் பந்து ஆட்டத்தில் சாதனை படைத்துள்ள ருமேனியா, பொலிவியா, கொரியா, அல்ஜிரியா, ரஷ்யா, பின்லாந்து, கேமரூன் ஆகிய உலக நாடுகள் பங்குகொள்கின்றன. இதற்கென கால் பந்தை உதைக்கும் இளஞ்சிங்கக் குட்டி சின்னமாக ஏற்கப்பட்டு இதற்கு லியோ என்று பெயரும் சூட்டப்பட்டுள்ளது.

''இந்த நேரு ஸ்டேடியத்தில் கண்டிப்பாக ஒருநாள் நான் தங்கக் கோப்பையை ஜெயிப்பேன்!'' என்ற குரல் கேட்கிறது.

வியப்புடன் திரும்பிப் பார்த்தால் இரண்டு சப்ஜூனியர் கால்பந்து ஆட்டக்காரர்கள்.

''என்ன பார்க்கறீங்க! இன்னிக்கு வேணுமானா நான் கால்பந்துல சப் ஜூனியர். ஆனா, ரொம்ப சீக்கிரம் நான் ஜூனியர், யூத், சீனியர் சேம்பியனாகி இந்தியாவில் நெம்பர் ஒன் ஆவேன். உலகக் கோப்பைக்கான ஆட்டத்துல நானே நம்ப இந்தியன் அணிக்கு கேப்டனா இருப்பேன். தங்கக் கோப்பையை ஜெயிக்கக் கொடுப்பேன். இதுதான் என் இலட்சியம்.''

✱ மாரடோனா





* குமாரன் (கோச்) விஜய், காந்தி

''ஆமாம்! அதுவும் அந்த டோர்ன மெண்ட் இதே நேரு ஸ்டேடியத்தில் நடக்கணும். நாங்க இந்திய அணியில் ஆடி, தங்கக் கோப்பையை வெல்ல ணும். இதுதான் எங்க வாழ்க்கையின் ஒரே இலட்சியம்.''

முதல் இலட்சியவாதிதான் விஜய். இரண்டாவது காந்தி. இருவருமே சென்னை மாவட்ட அளவிலான சப் ஜூனியர்கள். ஸ்டேட் அளவில் தேர்வு செய்யப்பட்டு, நேஷனலுக்குக் காத்துக் கொண்டிருப்பவர்கள்.

''இவர்கள் இருவருமே ஏதோ பகல் கனவு காண்பதாக நினைக்காதீர்கள். சொன்னதை சாதிக்கக்கூடிய திறமையும் கடுமையான உழைப்பும் இவர்களிடம் இருக்கு'' என்றார் கோச் கருமாரன்.

விஜய்யின் தந்தையார் கோவிந்த ராஜன், பி அண்ட் சி மில்லில் பணியா ளர். இவர்கள் குடும்பத்தை 'ஃபுட்பால்' குடும்பம் என்று பெருமையாகக் குறிப்பிடலாம். விஜய்யின் தாத்தா சிங்காரம், காலில் பூட் இல்லாத காலத்தி லேயே கால்பந்து ஆடி, புகழ்பெற்ற பிரைட்டன் ஸ்போர்ட்ஸ் கிளப்பின் சேம்பியனாகத்திகழ்ந்தவர். இவரது தம்பி இலட்சு மணன் கால்பந்தாட்டத்தில் சிறந்த கோல்கீப்பர். விஜய் யின் தந்தையார் கோவிந்த ராஜனும் திறமையான கால்பந்தாட்டக்காரர். இவ ரும் பிரைட்டன் கிளப்பிற் காக ஆடி, சேம்பியனான வர். விஜய்யின் மூத்த அண் ணன் சம்பத்குமாரும் நல்ல கால் பந்தாட்டக்காரர். பிரைட்டன் ஸ்போர்ட்ஸ் கிளப், வி ம் கே கா, 'டாம்கோ' என்று பல பெருமைமிக்க கால் பந் தாட்ட அணிகளில் பங்கு கொண்டு, சப்ஜூனியர், ஜூனியர், ஸ்டேட் பட்டம் வாங்கிப் புகழ்பெற்றவர். அதனால் குடும்பமே கால்பந்தில் ஈடு பாடுள்ள குடும்பம். ஆதலால் விஜய்க்கு கால்பந்தாட்டத்தில் ஈடுபாடு ஏற்பட்ட தில் அதிசயம் இல்லையே. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தர வேண்டுமா என்ன? விஜய் கலந்து கொள்வதாக இருந்த கல்கத்தா நேஷனல் மீட், பாபர் மசூதி பிரச்னை காரணமாக ஒத்திப் போடப்பட்டுள்ளது.

காந்தியின் குடும்பத்தினரும் கால் பந்தாட்டத்தில் ஈடுபாடு கொண்டவர் களே. இவருடைய அப்பா கோவிந்த ராஜ், திறமையான ஆட்டக்காரர். காந்தி யின் மூத்த அண்ணன் ஸ்டேட் பிளேயர். அதனால் காந்திக்கும் கால்பந்தாட்டத் தில் ஆர்வம் ஏற்பட்டதில் வியப்பு இல் லையே. தொடக்கக் காலத்தில் சிறுவர் களுக்கான டான்பாஸ்கோ டோர்ன மெண்டுகளில் பங்குகொண்டு வெற்றி பெற்ற இவர், பல சப்ஜூனியர் டோர்ன மெண்ட்டுகளில் ஆடி, நேஷனல் அள

வுக்கு உயர்ந்திருக்கிறார். இவரும் கல்கத்தா நேஷனல் மீட்டில் தமிழ் நாட்டின் சார்பில் ஆட இருந்தவரே.


கிரிக்கெட்டில் ஒருநாள் போட்டி போல கால்பந்திலும் ஒரு நாள் போட்டி உண்டு. இதை செவன்ஸ் (SEVENS) என்கிறார்கள். விஜய், காந்தி இருவருமே இதில் குறிப்பிடத்தக்க சாதனை புரிந்தவர்கள். உலகக் கோப்பைக்கான ஆட்டம், சென்னையில் புது ஸ்டேடியத்தில் நடக்கப் போகிறது என்பது இவர்களுக்கு அளவிலாத மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

"இதுவரை உலகப் புகழ்பெற்ற ஆட்டக்காரர்களின் 'கட்'களையும், உதைப்பு (ஹிட்)களையும் பத்திரிகைகளில் படித்தும், சினிமாவிலும், தொலைக்காட்சியிலும் கண்டு வந்த எங்களுக்கு இது பெரிய அதிர்ஷ்டம். அவர்களை நேரில் பார்க்கப் போகிறோம். அவர்களுடைய ஆட்டத் திறமைகளை நேரில் கண்டும் அதிசயப்படப் போகிறோம். பல புதிய உத்திகளைக் கற்றுக் கொண்டு நாங்களும் பழகிக் கொண்டு, எங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள இது நல்ல வாய்ப்பு" என்றனர் விஜய்யும், காந்தியும்.

விஜய்யையும் காந்தியையும் போல் எண்ணிலடங்கா எத்தனையோ கால்பந்தாட்டக்காரர்கள், ரசிகர்கள் இந்த உலகக் கோப்பை ஆட்டத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதை நடத்தும் வாய்ப்பு இந்தியாவுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டுக்குக் கிடைத்துள்ளதைப் பற்றி நாம் பெருமைப்படலாம். இதற்குக் காரணமானவர்களைப் பாராட்டலாம். கோப்பையும் நமக்குக் கிடைத்து விட்டால்... இந்த எதிர்பார்ப்பே எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது! ஒன்று நிச்சயம், இந்த ஸ்டேடியத்தில் இனி நேஷனல்/சர்வதேச கால்பந்துப் போட்டிகள் நடக்கவும், இளம் ஆட்டக்காரர்களுக்கு உலக சீனியர் ஆட்டக்காரர்களின் ஆட்ட முறைகளை நேரில் கண்டுகளிக்கவும், கற்றுக் கொள்ளவும் நிறைய வாய்ப்புகள் கிடைக்கப் போகின்றன. இது விஜய், காந்தி போன்ற சப்ஜூனியர் அளவிலான பல இளம் ஆட்டக்காரர்களுக்கு புதிய ஊக்கத்தை அளிக்கும். தமிழ்நாடு அணியினரின் ஆட்டத் தரத்தை உலக அளவிற்கு உயர்த்தும். எதிர்காலத்தில் தமிழ்நாட்டிலும் பல மாரடோனாக்களை உருவாக்கி உலகக் கோப்பையை வெல்லும் என்று எதிர்பார்க்கலாம்.

– சுகுமாரன்

அட்டையில் :
விஜய், கோச் சுகுமாரனுடன்
வண்ணப்படம் : யோகா




"எ, பி, ஸி, டி சொல்லு..."
"பெரிய எ, பி, ஸி, டியா,
இல்ல சின்ன
எ, பி, ஸி, டியா சார்!"

"ஒட்டகச் சிவிங்கி
மாமா! எங்க அம்மா
எங்காவது
தெரியறாங்களான்னு
பார்த்துச் சொல்லுங்க!"
– குமார்



பிருந்தாவனம்





ஆப்பிள் செய்தி!

★ ஆப்பிள் பழங்களில் சுமார் இரண்டாயிரம் வகைகள் இருக்கின்றன. ஆனால் இவற்றில் 10 வகைகளைத் தான் மிக அதிகமாகப் பயிர் செய்கிறார்கள். ஆப்பிள் பழத்தைச் சாப்பிடும் போது ஆப்பிள் பழத்தின் தோலைச் சீவி எறியாமல் தோலோடு சேர்த்துச் சாப்பிட வேண்டும். ஆப்பிள் பழத்தைக் கடித்துச் சாப்பிடுவதால் பற்களின் ஈறுகள் பலம்பெறுகின்றன.

- ராஜன், பொள்ளாச்சி.



கழுதைக்குத் தொப்பி!

★ உலகிலேயே அதிகம் கழுதைகள் உள்ள நாடு ஸ்பெயின்தான். நாம் ஆடு, மாடுகளை வளர்ப்பதைப் போல் ஸ்பெயின் மக்கள் கழுதைகளைப் போற்றி வளர்க்கிறார்கள். கழுதையின் மீது சுமையை ஏற்றி ஓட்டிச் செல்லும் போது கழுதைக்கு வெயிலின் கொடுமையை குறைக்க தொப்பி வாங்கிப் போடுகிறார்கள். ஸ்பெயினில் உள்ள கடைகளில் கழுதைக்கு என்று தனியாகத் தொப்பிகள் விற்கப்படுகின்றன. வரு டத்திற்கு ஒருமுறை ஜூன் மாதம் மூன்றாம் ஞாயிற்றுக் கிழமை அன்று கழுதை ரேஸை நடத்திக் களிப்படைகிறார்கள்.

- ரமா ராமநாதன், கோவில்பட்டி.




ஹார்லிக்ஸ் வந்த விதம்!

★ குழந்தைகள் மிகவும் விரும்பி அருந்தும் 'ஹார்லிக்ஸ்' எப்படி வந்தது தெரியுமா?

ஜேம்ஸ் ஹார்லிக் (1844-1921) என்ற

ஃபார்மஸிஸ்ட் (Pharmacist) குழந்தை களுக்கான உணவு ஒன்றை ஆராய்ந்து உருவாக்கினார். அதற்கு 'ஹார்லிக்ஸ் ஃபுட்' (Horlicks Food) என்று பெயரிட்டார். 1875ல் இவர் அமெரிக்கா வில் Horlicks Milk Co என்று ஒரு கம்பெனியை ஆரம்பித்தார். பின்னர் இதுவே 'ஹார் லிக்ஸ்' ஆயிற்று.

- கு. பாரதி, மணலூர்ப்பேட்டை



மனிதனுக்கு பசு இரத்தம்!

★ அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜான் டெலோச் என்பவர் பசு மாடுகளிடமிருந்து இரத்தத்தை எடுத்து மனிதர்களுக்கு அவசர சிகிச்சைக்கு உபயோகப்படுத்தலாம் எனக் கண்டு பிடித்திருக்கிறார். இதனால் மனிதர் களிடமிருந்து வரும் எய்ட்ஸ் நோய் பயமில்லாமல் இருக்கலாம் என்று கூறு கிறார். இதனால் மனித உயிர்களுக்குத் தீங்கு நேராது என்று அவர் உறுதி அளிக் கிறார். ஒரு வளர்ந்த பசு மாட்டிலிருந்து 300 முதல் 400 கிராம் வரை இரத்தம் கிடைக்குமெனவும் அவர் கூறுகிறார்.

- இந்திரா கோபாலன், திருச்சி - 14.



வாடிகன் வானொலி...

★ போப் ஆண்டவரின் வாடிகன் நாட்டிலுள்ள ரேடியோ நிலையத்திற்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. வானொலி யைக் கண்டுபிடித்த மார்கோனியே அதை நிறுவினார்.

- ஜெயபுஸ்ரீ ராஜ்குமார், மதுரை.



நாய் கோர்ட்!

★ உலகிலேயே நாய்கள் சம்பந் தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற் கென அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ் சல்ஸ் நகரில்தான் கோர்ட் அமைக்கப் பட்டுள்ளது. இதில் வருடத்திற்கு சுமார் 1500 நாய் 'கேசுகள்' விசாரிக்கப்படு கின்றன.

- மு. பாலன், மூஞ்சூர்பட்டு.



கிலோ அளவு...

★ நமது நிறை அளவில் ஒரு கிலோ கிராம் என்பது ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான 'பாரீஸ்' நகரில் உள்ள அளவுகள் மற்றும் எடைக்கான அனைத் துலக அமைப்பில் வைக்கப் பட்டுள்ள ஒரு பிளாட்டினம் இருடியக் கட்டியின் நிறையாகும்.

- சி. குமணன், சேலம்.



நத்தை சாதனை!

★ அண்மையில் நத்தைகளுக்கான மூன்றாவது கல் இழுக்கும் போட்டி ஸ்பெயினில் பில் பாவோ என்ற நகரில்

நடந்தது. 240 கிராம் எடையுள்ள கல்லை இழுத்துக் கொண்டு வர வேண்டும். மொத்தம் 78 நத்தைகள் இப் போட்டியில் கலந்து கொண்டன. அதில் வெற்றி பெற்ற நத்தை 42.5 செ.மீ. தூரத்தை பாதை மாறாமல் இழுத்து வந்து முதல் பரிசைப் பெற்றது! இதற்கு முன் 38 செ.மீ. தூரத்தை சரியாகக் கடந்த நத்தையின் சாதனையை இந்த 'நத்தை' முறியடித்தது. இந்த நத்தைக்கு ''ஹெர்லிஸ்'' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

- கு. கருணாநிதி, கும்பகோணம்.



★ கலிபோர்னியாவில் மனித நடமாட்டமே இல்லாத பகுதி அது! 1843 ஆம் வருடம் தன்னந்தனி மனிதனாக அமெரிக்க விவசாயி ஒருவன் தனது குதிரையில் அவ் வழியே சென்று கொண்டிருந்தான். ஜேம்ஸ் மார்ஷல் என்பது அவன் பெயர். மரங்கள் அடர்ந்த ஒரு காட்டுப் பகுதியில் மரம் அறுக்கும் மில் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்பது அவன் ஆசை. அதைத் தேடித் தான் அவன் போய்க் கொண்டு இருந்தான். வெகுதூரம் பயணம் செய்து ஒரு நாள் அவன் சான்பிரான்ஸிஸ்கோ வந்து சேர்ந்தான். அப்போது அங்கே ஸ்காரமெண்டே எனும் நதியையும், அதை ஒட்டிய ஒரு காட்டையும் கண்டான். தனது மரம் அறுக்கும் மில்லுக்கு ஏற்ற இடம் அதுதான் என்று தீர்மானித்த போது, அங்கே கற்றிலும் மஞ்சள் நிறக் கூழாங்கற்கள் கிடப்பதைப் பார்த்தான். அவற்றைப் பொறுக்கி எடுத்து ஆராய்ந்த போது அவற்றில் தங்கம் இருப்பதைக் கண்டு ஆனந்தமும் ஆச்சர்யமும் அடைந்தான். உலகிலேயே மிகப் பெரிய தங்கச்சுரங்கத்தைக் கண்டுபிடித்த பெருமையையும் அடைந்தான்.

- ஆர். கார்த்திகேயன்,
குளுக்கப்பாளையம்.



★ ஜெர்மன் நாட்டில் ரொட்டிக் கடைக்காரர்கள் அருகம்புல் சத்துச் சேர்த்துத் தயாரித்த ரொட்டிகளை அதிக விலைக்கும், அந்தச் சத்துச் சேர்க்கபடாமல் தயாரித்த சாதாரண ரொட்டிகளைக் குறைந்த விலைக்கும் விற்கிறார்கள். காரணம் அருகம்புல்லை ஆராய்ந்து, அதில் இருநூறுக்கும் மேற்பட்ட உயிர்ச் சத்துக்கள் (வைட்டமின்கள்) இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

- ராஜ்யவர்த்தனன், புரசை.

பிருந்தாவனம் பகுதிக்கு எழுதுவோர் அதற்கான ஆதாரங்களைக் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். ஆதாரம் இல்லாமல் வருபவை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. காலங்கடந்த தகவல்களை ஆதாரமாக வைத்து எழுதாதீர்கள். அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர் - கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



பிடிபட்ட காரணம்

ராமு பத்தாம் வகுப்புப் படித்து வந்தான். ராஜா ராமுவின் நண்பன். அவனும் அதே வகுப்பில்தான் பயின்று வந்தான். ராமுவின் அப்பா பெரிய பணக்காரர். ராஜா ஏழை. ஆனாலும் இருவரும் நண்பர்களாகப் பழகி வந்தனர். இருவரும் ஒன்றாகத்தான் பள்ளிக்குச் செல்வார்கள், திரும்புவார்கள். அன்று பள்ளி விட்டதும் வழக்கம் போல வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தனர் இருவரும். திடீரென்று அவர்களை உரசிக் கொண்டு பின்னாலிருந்து வந்த காரிலிருந்து இரு முகமூடிகள் ராமுவைக் கடத்திச் சென்றார்கள்.

ராஜா எவ்வளவு கத்தியும் பயனில்லை. கார் மின்னலாக மறைந்து விட்டது. ராஜா, ராமுவின் பெற்றோரிடம் ஓடி நடந்ததைக் கூறினான். அதிர்ச்சியடைந்த ராமுவின் அப்பா உடனே காவல் நிலையம் சென்று நடந்ததைக் கூறி, ''ஐயா என் மகனை எப்படியாவது கண்டுபிடித்துக் கொடுங்கள்'' என்று கெஞ்சினார்.

''இன்னும் இரண்டு நாள்ல கண்டு பிடிச்சிடுவோம். நீங்க கவலைப்படாதீங்க'' என்ற இன்ஸ்பெக்டரின் வார்த்தைகள் பெற்றோர்களுக்கு ஆறுதலாய் இருந்தன.

இதற்கிடையில் இரு முரடர்களிடம் சிக்கிக் கொண்ட ராமு மயக்கத்தில் இருந்தான். முரடர்கள் அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவித்தனர்.

''நான் எங்கே இருக்கேன்? எதற்காக என்னைக் கடத்தி வந்தீங்க?'' என்று கண் விழித்துப் புலம்பினான் ராமு.

''நாளை சொல்கிறோம். மணி எட்டு ஆயிடுச்சு. நீ தூங்கு.'' என்று சொல்லி விட்டு அறையைத் தாளிட்டுச் சென்றனர் முரடர்கள். ராமுவுக்குத் தூக்கமே வரவில்லை. அழுது புலம்பிக் கொண்டே இருந்தான்.

அடுத்த நாள் காலை ஏழு மணி. இரண்டு முரடர்களும் ராமுவின் அறைக்கு வந்து அவனை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றனர். ''உன் அப்பாவிடமிருந்து லட்ச, லட்சமா பணம் பறிக்கத்தான் இந்தத் திட்டம். நாங்க சொல்றபடி ஃபோன்ல உங்கப்பா கிட்ட பேசு. மீறி வேற ஏதாவது பேசினா கொன்னுடுவேன்'' என்றான் ஒரு முரடன்.

ராமு போனை எடுத்து அப்பாவுக்கு டயல் செய்தான்.

''ஹலோ, நான்தான் ராமு பேசறேன். அப்பா இங்கே என்னை இரண்டு பேர் ஒரு ரூம்ல அடைச்சு வெச்சிருக்காங்க. நான் நல்லபடியாத்தான் இருக்கேன். பணம் இரண்டு இலட்சம் ரூபாய் எடுத்துக்கிட்டு தனியா மணிக்கூண்டு ரோடு ஓரம் நிற்கும் இவங்க ஆளுகிட்ட கொடுக்கணுமாம். இல்லாட்டா என்னைக் கொன்னுடுவார்களாம். காலாண்டுத் தேர்வில் என்னோட டோட்டல் மார்க் 500க்கு 353தான்.''

ராமுவை மேற்கொண்டு பேச விடாது ரீசிவரைப் பிடுங்கிக் கொண்டனர் முரடர்கள்.

மகனை உயிருடன் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தனது சூட்கேஸில்



பணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பத் தயாரானார் ராமுவின் அப்பா.

அப்போது இன்ஸ்பெக்டர், ''என்ன சார், ஏதாவது தகவல் கிடைத்ததா?'' என்றார்.

ஃபோனில் வந்த விபரத்தைக் கூறினார் ராமுவின் அப்பா.

''மற்றபடி வேறு ஏதாவது சொன்னானா?''

''காலாண்டுத் தேர்வில் 500க்கு 353தான்னு சொன்னான்.''

கொஞ்ச நேரம் யோசித்த இன்ஸ்பெக்டர், ''நீங்கள் எங்கேயும் போக வேண்டாம். உங்கள் மகனை இப்பவே கண்டுபிடித்துக் கொண்டு வரேன். கவலைப்படாதீங்க'' என்று விரைந்தார்.

போன ஒரு மணி நேரத்தில் இன்ஸ்பெக்டர் மீண்டும் வந்தார். அவரோடு ராமுவும் வந்ததைக் கண்ட பெற்றோர் மிக மகிழ்ச்சியடைந்து மகனை வாரி அணைத்தனர்.


''எப்படி இன்ஸ்பெக்டர் இவ்வளவு சீக்கிரம் கண்டுபிடிச்சீங்க?'' என்று வியப்புடன் கேட்டார் ராமுவின் தந்தை.

''உங்க மகன் ராமுவின் புத்திசாலித்தனத்தால்தான் கண்டுபிடித்தோம். அவன் போன் செய்த போது என்ன சொன்னான்? காலாண்டுத் தேர்வில் டோட்டல் மார்க் 500க்கு 353என்றுதானே கூறினான்? அதுதான் எனக்குத் துப்புக் கொடுத்தது. அது ஏன் போன் நெம்பரா இருக்கக் கூடாதுன்னு நினைச்சேன். உடனே எக்ஸ்சேஞ்சுல கேட்டு, முகவரி வாங்கிக் கொண்டு விரைந்தேன். சந்தேகித்தபடி ராமு அந்த முகவரியில்தான் அடைபட்டுக் கிடந்தான். முரடர்களையும் பிடித்தோம். இவ்வளவு தந்திரமா விவரம் கொடுத்த ராமுவின் திறமையால்தான் அவனுக்கு விடுதலை கிடைத்தது. உங்க பணமும் தப்பியது'' என்று விளக்கினார் இன்ஸ்பெக்டர்.

– ச. உமர்கான்

நட்சத்திர மீனுக்கு இழந்த கை முளைக்குமா?

ரேவதி



தொலைபேசி மணி கிணு கிணுத்தது. முத்து எடுத்துப் பேசினான்.

எதிர்ப்பக்கம் குரல் கேட்டது.

''நான்தான் கோவாவில் இருந்து மாமா பேசறேன் முத்து. உனக்கு அடுத்த வாரம் பிறந்த நாள் ஆச்சே? என்ன வேணும்? குழந்தைகள் கலைக் களஞ்சியம் வேணும்னு கேட்டிருந்தியே? அதையே வாங்கி அனுப்பட்டுமா?''

''அதை இங்கே சித்தப்பா வாங்கிக் கொடுத்துட்டார் மாமா.''

''அப்போ உனக்கு என்ன வேணும்? நீ எது கேட்டாலும் வாங்கித் தரேன் சொல்லு?''

''கண்டிப்பாவா மாமா? எது கேட்டாலும் மறுக்காம வாங்கி அனுப்பறீங்களா?''

''டேய் மக்கு. என்னடா உனக்கு திடீர்னு சந்தேகம்? நீ என்ன கேட்டாலும் நான் கண்டிப்பா வாங்கிஅனுப்பறேன்! என்ன வேணுமோ கேள்?''

''என்னுடைய மீன் தொட்டிக்கு ஒரு நட்சத்திர மீன் வேணும் மாமா. கோவா வில் இருந்து அதை வாங்கி அனுப்புங்க. அது போதும்.''

''பிறந்த நாள் பரிசா மீனா? ஏன்டா மக்கு, சென்னையில் அக்வேரியத்தில் கிடைக்காத மீனா?''

''மாமா, இங்கே கிடைக்கிற நட்சத்திர மீன் அழுக்குக் கலர்ல இருக்கு. கோவாவில் கனகாம்பரக் கலர் மீன் கிடைக்கிறதாமே?''

''சரி, பெரிய தொட்டியா தயார் பண்ணி வைச்சுக்க. யாராவது வரவங்க கிட்டே ஒரு வாரத்துல கொடுத்தனுப்பறேன்.''

''என் பிறந்த நாளுக்குள் நட்சத்திர மீன் வந்துடும் இல்லே?''

''கண்டிப்பா வரும். நீ பெரிய தொட்டியா தயார் பண்ணி வைச்சுக்க. அதோட ஒரு முக்கியமான செய்திடா மக்கு முத்து...''

''என்ன மாமா?''

''அது நட்சத்திரமும் இல்லே, மீனும் இல்லே. வடிவத்தைப் பார்த்து வைத்த பேரு. அவ்வளவுதான்!''

அடுத்த வாரமே வாய் ஓட்டை போட்ட பெரிய கண்ணாடி ஜாடியில் மாமாவின் பிறந்த நாள் பரிசாக நட்சத்திர மீன் வந்து விட்டது! அதைக் கொண்டு வந்தவர் மாமாவின் நண்பர். முத்துவுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி.

''தம்பி, இந்த மீன் என்னைப் படாத


பாடுபடுத்தி விட்டது! இதை நல்ல படியா உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்போமா என்று கூட பயந்தேன்'' என்றார் மாமாவின் நண்பர்.

''ஏன் சார்?'' என்று வியப்போடு கேட்டான் முத்து.

''இரண்டு இடத்துல இறங்கி ஏறியாகணும். மூன்று நாள் ரயில் பயணமாச்சே? இங்கே வந்து தண்ணி மாத்தினால் போதும்னு உங்க மாமா சொன்னார். ஆனால் ஏதோ கலாட்டான்னு ரயிலை ஒருநாள் முழுக்க பெங்களூரில் நிறுத்தி வைச்சிட்டாங்க. அதனால எனக்குப் பயமா போச்சு. கெஞ்சிக் கூத்தாடி ஒருத்தர்கிட்ட வாளியை வாங்கி, இந்த மீனை அதில் விட்டு, ஜாடியை சுத்தம் பண்ணினேன். மறுபடி மீனை ஜாடிக்குள் போடும் போது படாதபாடு பட்டேன். இதுவோ வழுக்குது. என்னிடத்திலும் வடிகட்டி என்று எதுவும் இல்லை. எப்படியோ ஒருவழியா பிடிச்சு ஜாடிக்குள் போட்டேன். ஆனால், அந்த அமர்க்களத்தில் இதன் ஐந்து கைகளில் இரண்டு கைகள் உடைஞ்சு போச்சு.''

முத்து அப்பொழுதுதான் கூர்ந்து கவனித்தான். வெளிர் ஆரஞ்சு வண்ணத்தில் தொட்டிக்குள் அழகாக அசைந்து ஆடி நீந்திக் கொண்டிருந்த அந்த நட்சத்திர மீனின் இரு கைகளைக் காணவில்லை!

எத்தனை ஆசையோடு தொட்டி தயார் பண்ணியிருந்தான்! நட்சத்திர மீன் வரப் போகும் செய்தி பள்ளி முழுவதும் பரவி, அவனை விட அவன் நண்பர்கள் தான் அதிக ஆவலுடன் அதை எதிர்பார்த்திருந்தனர். அவர்களெல்லாம் கைகளை இழந்த இந்த மீனைப் பார்த்தால் என்ன சொல்லுவார்கள்? எப்



கை நட்சத்திர மீன் உயிரை விடாமல் இருந்தால் அதுவே போதும்'' என்று எரிந்து விழுந்தான். அம்மாவுக்கு அவனுடைய ஏமாற்றம் புரிந்தது. பேசாமல் போய் விட்டாள்.

பிறந்த நாளன்று காலை. மாமா தொலைபேசியில் அழைத்தார். ''பிறந்த நாள் வாழ்த்துக்கள் முத்து. நட்சத்திர மீன் எப்படி இருக்கு? உன் நண்பர்கள் பாராட்டுகிறார்களா? என்ன சொல்கிறார்கள்?'' என்று கேட்டார் அப்பாவி மாமா.

''எல்லார் வீட்டு



படியெல்லாம் கிண்டலடிப்பார்கள்?

''என்னை மன்னிச்சுக்க தம்பி'' என்று விடைபெற்றுக் கொண்டார் மாமாவின் நண்பர்.

மூன்று கைகளே இருந்தபோதிலும், தொட்டியில் அட்டகாசமாக நீந்தி விளையாடிக் கொண்டிருந்த அந்த நட்சத்திர மீனைப் பார்த்ததும் இரக்கம் கொள்வதற்குப் பதில் ஆத்திரமே கொண்டான் முத்து.

''முத்து, பாலுக்கு ரொம்ப தட்டுப்பாடா இருக்கு. பிறந்த நாளன்று வரும் உன் நண்பர்களுக்கு வெல்லப் பாயசம் பண்ணினால் பரவாயில்லையா?'' என்று அம்மா வந்து கேட்ட போது, ''என்னவோ பண்ணும்மா. அதுவரையிலாவது, இந்த சனியன் பிடித்த மூன்று

நட்சத்திர மீனுக்,கும் ஐந்து கைன்னா, இந்த முத்து வீட்டு மீனுக்கு மட்டும் மூணு கைடான்னு எல் லாரும் கேலி பண்றாங்க. இன்னிக்கோ நாளைக்கோ அது உயிரை விடப் போகுது. உங்க நண்பர் கூறவில் லையா?'' என்று முத்து கேட்டதும் மாமா அதிர்ந்தார். முத்து விளக்கி னான்.



"புஸ்தகப்பை ரொம்ப கனக்குது... அதான் இந்த ஏற்பாடு!

"கவலைப்படாதே முத்து. லட்டு போன்ற நடுப் பாகம் சேதப்படாத வரை நட்சத்திர மீன் உயிர் வாழும்," என்றார் மாமா.

"நண்பர்கள் கிண்டலடிப்பார்களே?"

"சரியான மாங்காமடையன் முத்துன்னால் அது நீதான். அதன் எல்லாக் கைகளையும் வெட்டி விட்டால் கூட, நடுப்பாகம் சேதப்படாதவரை, அதன் கைகள் பழையபடி ஒரு மாதத்தில் முளைத்து விடும்."

"அடடா! எனக்கு இது தெரியாமல் போச்சே! எனக்கு ஏற்பட்ட வெறுப்பில், அதற்கு நான் சரியாக உணவு கூடக் கொடுக்கலையே" என்று பதறினான் முத்து.

"இப்பவாவது சரியாக் கேட்டுக்க. ஒரு மாதத்தில் பழையபடி அதற்குக் கைகள் வளர்ந்துடும். அதற்கு உணவு நத்தை, சிப்பி, சின்ன மீன், நீர்ப் புழு, தோல் உரித்த நண்டுதான். இதெல்லாம் மீன் காட்சியகத்தில் கிடைக்கும். வாங்கி வைச்சுக்க. தினமும் மறக்காம தண்ணியை மாத்து. நட்சத்திர மீன் உணவு உண்ணும் முறை இருக்கே... அது விநோதமானது. நல்லா கவனிச்சு எனக்கு தொலைபேசியில சொல்லு."

மாமா பேச்சை முடித்ததும் முத்து பரபரவென்று செயல்பட்டான். நட்சத்திர மீனுக்குத் தேவையான உணவு வகைகளை வாங்கி வந்தான். தொட்டியில் போட்டு கவனித்தான்.

சின்னச் சின்ன சிப்பிகளையெல்லாம் தன் கைகளால் பற்றி நடுவில் லட்டு போல் இருந்த வாய்ப் பகுதிக்குள் இழுத்து விழுங்கியது நட்சத்திர மீன். சில நிமிடங்களிலேயே சிப்பி பிளந்த ஓடுகளை மட்டும் வெளியே தள்ளியது!


ஓடு நீக்கிய சிறு நண்டை அவன் தொட்டியில் போட்டான். அந்தப் பொல்லாத மீன், நண்டின் மேல் அப்படியே படுத்துக் கொண்டது! வாயில் இருந்து வெளிப்பட்ட வழுவழுப்பான, சீரண நீர் நண்டின் உடலை மெல்லக் கரைத்தது! அரை மணியில் நண்டு போன இடம் தெரியவில்லை!

எளிதில் திறக்க முடியாத மூடிய பெரிய சிப்பி ஒன்றை எடுத்து தொட்டி நீரில் போட்டான் முத்து. அதைப் பிடித்து, அழகாக அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொண்ட நட்சத்திர மீன், தன் மூன்று கைகளைக் கொண்டு சிப்பியுடன் வெகு நேரம் விடாமல் போராடியது. இறுதி வெற்றி மீனுக்குத்தான்! தன் மூன்று கைகளைக் கொண்டே விடாப்பிடியாகப் போராடி சிப்பியின் மூடியைத் திறந்தது! தன் வாயின் வழியாக தன் மெல்லிய இரைப்பையை வெளியே இழுத்தது. அதை மெதுவாக, திறந்த சிப்பிக்குள் தள்ளியது! நண்டுக்கு நேர்ந்த அதே கதிதான்!

இரண்டு மாதங்களில் நட்சத்திர மீனின் அறுபட்ட இரண்டு கைகளும் பழையபடி முளைத்து விட்டன!

அறிவியல் உண்மைகள் :

★ நட்சத்திர மீன், மீன் வகை அல்ல. முள் தோலி PHYLUM - ECHINODERMATA பிரிவைச் சேர்ந்தது. ★ மேற்புறம் உள்ள தகடு போன்ற பகுதி சுண்ணாம்புச் சத்துக்களால் ஆனது. ★ மையத்தில் லட்டு போன்ற இலேசாக உப்பின பகுதியில் வாய், ஐந்து கைகள். கைகளின் நுனியில் உறிஞ்சு வட்டில்கள் உள்ளன. இரையைப் பற்றிக் கொள்ளவும், சிப்பிகளை உடைக்கவும், உறிஞ்சவும் கைகள் பயன்படும். ★ தேவையானால், உடலுக்கு வெளியே இரைப்பையைத் தள்ளியும் ஜீரணம் செய்யவும் வசதி பெற்ற உயிர் வகை இது ஒன்றுதான். ★ வாய் அமைந்துள்ள நடுப்பாகம் சேதமடையாதவரை, இதன் கைகள் வெட்டினாலும் மறுபடி வளரக்கூடியவை!



பி.ஆர். பார்த்தசாரதி

அம்மாவிற்கு உடம்பு சரியில்லாததால் குமரேசனுக்கு அன்று மதியச் சாப்பாடு இல்லாமல் போயிற்று.

இரண்டு ரூபாய் பணத்தைக் கொடுத்து ஓட்டலில் சாப்பிடச் சொல்லியிருந்தாள் அம்மா. காலாண்டுப் பரீட்சை வேறு.

ஓட்டல் பூர்ணிமாவுக்குள் நுழைந்த குமரேசன், சப்ளையரிடம் ஒரு வடையும் காப்பியும் கொண்டு வரச் சொன்னான். அவர் வருவதற்குள் அவன் தன் அறிவியல் புத்தகத்திலிருந்து இரண்டு தாள்களைக் கிழித்துத் தன் அரை டிராயரில் வைத்துக் கொண்டான்.

வடையைக் கொண்டு வைத்த சப்ளையர் தூரத்தில் வரும்போதே குமரேசனின் செயலைப் பார்த்து விட்டார். அவன் டிபன் சாப்பிட்டு முடிக்கட்டும் என்று காத்திருந்து காப்பியும் கொண்டு வந்து வைத்தார்.

குமரேசன் காப்பியைக் குடித்து முடித்ததும் பில் கொடுத்த சப்ளையர்,

''தம்பி... கேட்கிறேனேன்னு தப்பா நினைக்காதே. உன் அரை டிராயரில் இரண்டு தாள்களை வைத்தாயே... அது என்ன?'' என்று கேட்டார்.

குமரேசன் விழித்தான். ''வந்து... வந்து...'' என்று இழுத்தான்.



சப்ளையர் சிரித்தார்.

''தம்பி... இன்று உனக்குப் பரீட்சை... அதனால், காப்பி அடித்து எழுத வசதியாக இரண்டு முக்கிய தாள்களைக் கிழித்து எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறாய். அப்படித்தானே'' என்று கேட்டார்.

குமரேசனுக்குத் தலை தொங்கிப் போயிற்று.

''தம்பி... உன் போல் சிறுவனாக இருந்து படிக்கும் போது நானும் இப்படித்தான் செய்தேன். என்னுடைய அதிர்ஷ்டம், ஒரு தடவை கூட நான் யாரிடமும் சிக்கவில்லை. ஒவ்வொரு பரீட்சையையும் இப்படித்தான் பிட் அடிச்சு எழுதி பாஸ் செய்தேன். நல்ல ரேங்க் கூட வாங்கினேன். ஆனால் எனக்கு அறிவு வளரலே! எப்படி வளரும்? ஆனா மார்க் மட்டும் வந்தது. அஸ்திவாரம் இல்லாமல் கட்டிடம் கட்டினால் அது நிற்குமா? நிற்காது. அதுபோல் அறிவை வளர்த்துக் கொள்ளாமல் காப்பி அடித்து பிட் அடித்து எழுதி பாஸ் செய்ததால் என்னால் இண்டர்வியூவில் கேட்ட கேள்விகளுக்கு சரியாகப் பதில் சொல்ல முடியலே! நல்ல வேலைக்குப் போக முடியவில்லை... இதோ நீதான் பார்க்கிறீயே.. இந்த ஓட்டல்ல சப்ளையரா இருக்கேன். இதே தவறை நீயும் செய்யலாமா?'' என்று கேட்டார் சப்ளையர் கனிவாக.

குமரேசன் தன் தவறை உணர்ந்தான்.

சப்ளையரிடம் பசை வாங்கி புத்தகத்திலிருந்து கிழித்த பக்கங்களைப் பழையபடி புத்தகத்திலேயே ஒட்டினான்.

''உங்கள் அறிவுரைக்கு நன்றி'' என்று பணிவாகக் கூறிக் கிளம்பினான்.

ஓட்டல் கூடப் போதி மரமாகலாம்!

ஆனையும் தின்பான்; பூனையும் தின்பான்!



அரசனைப் புகழ்ந்து பாடி பரிசு பெறுவதற்காக புலவர் ஒருவர் அவைக்குள் நுழைந்தார். வீற்றிருந்த அரசனைப் பார்த்து, ''பாராளும் மன்னன் இவன். இவனுக்கென்ன, ஆனையும் தின்பான்; பூனையும் தின்பான்'' என்றார்.

புலவர் கூறியதைக் கேட்ட அரசன் வெகுண்டு, ''புலவரே! நிறுத்தும். இதுதான் என்னைப் புகழ்ந்து பாடும் அழகா?'' என்று கோபத்துடன் கேட்டார்.

அதற்குப் புலவர், ''கோபப்படாதீர்கள் மன்னவா, அரசராகிய தாங்கள் ஆனையும் (ஆ+நெய்) அதாவது பசுவின் நெய்யையும், பூனை (பூ+நெய்) அதாவது தேனையும் உண்பீர்கள் என்று சொன்னேன். இதிலென்ன தவறு?'' என்று விளக்கம் கூறித் தன்னுடைய தமிழறிவைக் காட்டிக் கொண்டார்.

புலவரின் சிலேடையை வியந்த அரசன் பெரும் பொருளைப் பரிசாக அளித்தான்.

– நடராஜ சிவகுமார்

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.


நெற்றியில் பொட்டு வைச்சுக்கோ!
நன்றாய் ஹாரன் அடிச்சுக்கோ!

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilan!

